திராவிட நாடு

ஆரம்பிக்கவில்லை-ஏன்?

24-ம் பக்கத் தொடர்ச்சி

என்று நன்கு கற்றிருந்தும், அதனை மேற்கொள்ள முன்வராது, எதற்கெடுத்தாலும் முதலாளிகளிடம் மண்டியிடுவது, முன்னாள் பேச்சுக்கும் மக்களின் முன்னேற்றத்துக்கும் முரண்பாடான செயலாகும்.

முதலாளித்துவ அமைப்பின் அடிப்படை லாபத்தின் மேல் கட்டப்பட்டிருப்பது. நல்லலாபத்துக்கு உத்தரவாதம் இருந்தால்தான் முதலாளிகள் எதனையும் உற்பத்தி செய்ய முந்துவர். 'எது லாபம்; அதற்கு எல்லை எது' என்பதற்கு விளக்கம் கூறஎவராலும் முடியாது. எனவே, முதலாளிகளைத் திருப்திப் படுத்துவதும் நடவாது. மேலும் மேலும் அவர்கள் லாப ஆசை வளர்ந்து கொண்டுதான் இருக்கும்.

புதிய தொழில்களை முதலாளிகள் ஆரம்பிக்கவில்லையே, அதற்குக் காரணம் என்ன என்று கவலை கொள்வதை விடுத்து, மக்கள்வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சி எடுத்துக்கொள்வதுதான் சிறந்தது என்பதைத் தீர்மானித்து, தொழிற்சாலைகளைத்தேசியமயமாக்கினால்,உடனடியாக இல்லையானாலும், காலப் போக்கிலாவது மக்கள் இன்று பெற்றுள்ள தேசிய விடுதலையோடு பொருளியல் விடுதலையும் பெறுவர். மக்கள் இருதயத்தை இருப்பிடமாகக் கொண்டிருப்போர், இதனை, ஆரம்பிக்கவில்லை — ஏன்? என்றுதான் மக்கள் நலம் தேடுவோர் சிந்திக்கிறார்கள்.

✲

4-ம் பக்கத் தொடர்ச்சி

நடக்கிறது, நமது ஊருக்கு ரோடு வரும் என்றார் காணோம், இருந்த பள்ளிக்கூடமோ இடிந்துவிட்டது, பாலம் கட்டுவதாகச் சொன்னார், ஒன்றும் காணோம், அவர் ஏதோ பெரிய வியாபாரம் செய்கிறாராம், தம்பி பேரில் விலாசம் வைத்து. ஏம்பா இதற்காகவா, ஓட்டுபோடச் சொன்னாய்" என்று ஊரார், உண்மை ஊழியர்களைத்தான் கேட்க முடிகிறது. அவர்களின் கோபத்தை M. L. A.க்கள் மதிக்கிறார்களா! அடுத்த தேர்தலின் போது தானே அவர்கள் தயவு வேண்டும்—பார்த்துக்கொள்வோம், என்று இருக்கிறார்கள்.

உண்மை ஊழியர்கள் உள்ளம் உடைந்து, இப்படியா ஊராளப் போனவர்கள் நடந்து கொள்வது என்று குமுறிக் கொதித்திடக்கண்டு காங்கிரஸ் கமிட்டிகள் அவர்களின் கண்ணீரைத் துடைக்க, இந்தப்புத்திமதி அறிக்கையை வெளியிடுகிறது. பலன் காணமுடியுமா? ஒருக்காலும் இல்லை! நிலைமையைக்காட்ட மட்டுமே இந்த அறிக்கைபயன்படும், M.L.A.க்களின் நினைப்பையும் நடவடிக்கையையும் மாற்றும் சக்தி இதற்குக் கிடையாது.

●

முகப்புப்பட விளக்கம்.

✲

விவேகமுள்ள வெள்ளையன், ஒரு பெரிய துணைக்கண்டத்தை இனியும் அடக்கி ஆளுவது, ஆபத்தான காரியம், பயனும் கிடைக்காது என்பதை அறிந்து, வெளியேறுகிறான், அதே போது, வேதியர்கள் மட்டும் தமது ஆட்சி முறையைக் கைவிடாமல் இருக்கிறார்கள்.

இங்கிலையில், வடநாட்டுப் பொருளாதார ஏகாதிபத்யம் எனும் பேருருவம், திராவிடத்தைத் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொண்டிருக்கிறது.

படத்தின் கருத்து இதுவே.

சிறந்த முறையில்
உயர்ந்த புகயிலையினால் தாயாரித்த
மணமுள்ள

ராஜாஸ் பரிமளம் பஸ்பம்

துண்டு புகையிலையை
உபயோகியுங்கள்

தயாரிப்பவர்:—

ராஜா & சன்ஸ்
19, வரகுவாசல் தெரு,
சின்னக்காஞ்சிபுரம். S. I. Ry.,

பிறப்பு

26-10-48 செவ்வாய்க்கிழமை காலை 8-30-மணிக்கு தோழர் அர்ச்சுனன் அவர்களின் சகோதரரும் பழைய கோட்டைப் பட்டரக்காரருமான தோழர் N. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் அவர்களின் வாழ்க்கைத் துணைவியாருக்கு ஆண் மகவு பிறந்தது. தாயும், சேயும் நலமுடன் இருக்கின்றனர்.

வருந்துகிறோம்

சிறுகதை எழுதுவதில் சிறந்தவரும், நமது இயக்கத்தோழருமான நண்பர் இராதாமணாளன் அவர்களின் தந்தையார் சிலநாள் நோய் வாய்ப்பட்டு, இத்திங்கள் 12-ந்தேதி உயிர்நீத்தார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். அவருக்கு வயது 48-தான் ஆகிறது. இவ்வளவு இளமையிலேயே இறந்துவிட்டது, இராதாமணாளனுக்கும் மற்ற நெருங்கிய உறவினருக்கும் அதிக துக்கத்தைக் கொடுக்கக்கூடியதாகவே இருக்கும். மரணத்தின் முடிவிலிருந்து ஒருவரும் தப்ப முடியாது என்னும் பேருண்மையை நண்பர் நன்குணர்ந்தவராதலால், அதிக விரைவில் ஆறுதல் பெறுவார் என்று நம்புகிறோம்.

சிறந்த நூல்கள்

1 "பொதுசேவையா சொந்த தொழிலா?" (சி. என். அ., மா. பொ. சிவஞானம் சொற்பொழிவு) 0 2 0

2 "வீட்டிற்கோர் புத்தகசாலை" (சி. என். அ.) 0 2 0

3. "சமதர்மம்" (சி. என். அ.) 0 4 0

4 "மேடைப் பேச்சு" (சி. என். அ.) 0 2 0

5 "பேசும் பிணம்" தோழர் இராதாமணாளன் 0 8 0

6 "பெரியஇடத்துப் பெண்" (மு. கருணாநிதி) 0 8 0

7 "பிள்ளையோ பிள்ளை" (மு. கருணாநிதி) 0 6 0

8 "நாடகக்கலையின்முன்னேற்றம்" (ஐவர் கருத்து) 0 6 0

விற்பனையாளர்களுக்கு தக்க இலாபம் தரப்படும்.

விபரங்கட்கு :—

திராவிடன் பதிப்பகம்,
P. B. 18, வேலூர். (N. A

ஈரோடு தனி மாகாண மாநாட்டில், நகைச் சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் இப்பாடல்களைப் பாடி காந்தியாரின் உருவப் படத்தைத் திறந்துவைத்தார். பாடல் இயற்றியவர், உடுமலை நாராயணக்கவி.

அந்தக்காலம்—இந்தக்காலம்

★

மனுசனை மனுசன் எச்சுப் பொளச்சுது அந்தக்காலம்
மடமை நீங்கிப் பொது உடமை கோருவது இந்தக்காலம் மனசில்
நெனச்சதையெல்லாம் எழுதிவச்சது அந்தக்காலம் எதையும்
நேரில் கண்டேபிச்சயிப்பது இந்தக்காலம் (மனு)

பெண்ணைப் பேயெனப் பேசியணைத்தது அந்தக்காலம் வாழ்வின்
கண்ணில் ஒன்றாய் எண்ணிநடப்பது இந்தக்காலம்
மன்னன் தன்னை தெய்வமென்பது அந்தக்காலம்
மற்றவர் போலவே மதித்து நடப்பது இந்தக்காலம்

மழைவருமென்றே மந்திரம்ஜெபிச்சது அந்தக்காலம் மழையை
பொழிய வைக்கவே யந்திரம் வந்தது இந்தக்காலம்
இழிகுலமென்றே இனத்தை வெறுத்தது அந்தக்காலம் மக்களை
இணைத்து அணைக்க முயற்சிபண்ணுவது இந்தக்காலம்

துரோபதை தன்னைத்துகிலுரிஞ்சது அந்தக்காலம் பெண்ணைத்
தொட்டுப் பாத்தா சுட்டுப்புடுவான் இந்தக்காலம்
த்ரோணர் மகனைக் குதிரைபெற்றதும் அந்தக்காலம் அதனை
சொல்லிச் சொல்லிச் சிரிப்பாச்சிரிக்குது இந்தக்காலம்

திருவரங்க ஏகாதசி நாளில் சுவர்க்க வாசல்
திறந்துதிவ்ய தெரிசனம் காட்டுவதந்தக்காலம் மன
உறுதிமிகுந்த உலக சிரேஷ்டர் மகாத்மா காந்தி திரு
உருவப்படத்தை திறந்துவைப்பது இந்தக்காலம்.

ஜெமீன் ஒழிப்பு

30-ம் பக்கத் தொடர்ச்சி

நஷ்ட ஈடுக்கு, மத்ய சர்க்கார் உதவி செய்யப் போவதில்லை என்பதை ஏற்கெனவே அறிவித்துவிட்டனர்.

கடன்பத்திரங்கள் கொடுப்பதானாலும், அதற்கும், இப்போதுள்ள சட்டத்திலே இந்திய சர்க்கார் சில திருத்தம் செய்தாக வேண்டுமாம்.

பீகாரில் நிறைவேற்றப்பட்ட ஜெமீன் ஒழிப்புச் சட்டத்தை, கவர்னர் ஜெனரல், அங்கீகரிக்க மறுத்துவிட்டார் — சட்டம் திரும்பி, பீகாருக்குச் செல்கிறது, சில திருத்தங்கள் பெற.

அதுபோலவே, சென்னையிலிருந்து பயணப்படும் ஜெமீன் ஒழிப்புச் சட்டமும், கவர்னர் ஜெனரலால் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டு விடலாம்.

இதற்கான சகல முயற்சியும் எடுத்துக் கொள்ள ஜரூராக வேலை செய்வர், ஜெமீன்தாரர்களும் அவர்களின் சட்ட ஆலோசனையாளர்களும்.

ஜெமீன்கள் தங்கள் கரத்திலிருந்து போய்விடும் நிலை பிறக்கப் போகிறது என்பதைப் பல ஆண்டுகளாகவே அறிந்த ஜெமீன்தாரர்கள், கிடைத்ததைச் சுருட்டுவது என்ற முறையில், ஜெமீனுக்குள் என்னென்ன சூதுகளெல்லாம் செய்ய முடியுமோ அவைகளைச் செய்து, இலாபம் அடைந்துவருகிறார்கள்.

இனியும் சட்டம் நடைமுறைத் திட்டமாவதற்குத் தடையும் தாமதமும் ஏற்பட்டபடி இருந்தால், 'சுளை போய் தோல்' கிடைத்த கதையாகிவிடும், ஜெமீன் ஒழிப்பு.

எனவே, சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதை உடனடியாகக் கவனித்தால்தான் ஓரளவு பலனாவது கிடைக்கும், இந்தச் சட்டத்தினால்.

ஆனால், டில்லி, என்ன செய்யுமோ!

சட்டசபையிலே, தோழர் பிரகாசம், "சட்டங்களைச் செய்வது யார், இங்கே, சென்னையிலுள்ள சட்டசபை மெம்பர்களா, அல்லது டெல்லியா? மேலிடம் ஏன், இப்படி நமது விவகாரத்தில் குறுக்கிடுகிறது! யார் இந்த மேலிடம்!" என்று, கோபமாகக் கேட்டார். மசோதாவில் பல திருத்தங்கள் டில்லி கட்டளைப்படி செய்தாரே, மந்திரியார், செய்யலாமா! அப்படிப்பட்ட நிலை வந்தபோது, மந்திரி, ராஜிநாமா செய்துவிட்டிருக்க வேண்டாமா?—என்றும் சீற்றத்தோடு கேட்டார். இந்தக் கேவலமான நிலையைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன்—என்றும் பிரகாசம் கூறினார்.

வெட்கம் — துக்கம் — சஞ்சலம் — சங்கடம் — சாகசம்— சட்டச் சுழல்கள்—சதிச் செயல்கள், எனும் பல்வேறு தடைகள் போடப்பட்டன, காளாவின் பாதையிலே—அவர் இவ்வளவையும் தாண்டிச் செல்லவேண்டி இருந்ததால், சட்டம், எதிர்பார்த்தபடியான உருவைப் பெறமுடியவில்லை. ஆனால் ஊமையை விட உளறுவாயன் மேல் என்பார்களே, அதுபோல், ஏதோ ஒருவகையான சட்டமாகவேனும் கொண்டுவந்துவிட்டாரே, என்கிற அளவிலே மகிழ்ச்சி.

இனி, மேலால் ஆகவேண்டியதைத் தொடர்ந்து செய்ய வேண்டுகிறோம்.

கண்துடைப்பு வேலை

லைசென்சு, பெர்மிட், வாங்கித் தருவதாகக் கிளம்பாதே!

அதிகாரிகளின் அலுவலில் தலையிடாதே!

அவர்களைக் குறைகூறிக்கொண்டு, மிரட்டாதே!

ஏதேனும் புகார் கிடைத்தால், மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்குத் தெரியப்படுத்து.

ஓட்டுபெற்ற தொகுதியிலே, மாதத்துக்கு 5 நாளாவது, சுற்றுப் பயணம் செய்!

காங்கிரசையோ, சர்க்காரையோ, பகிரங்கமாகக்கண்டித்துப்பேசாதே!

அப்படிக் கண்டிக்க வேண்டிய அவசியம் இருந்தால், சட்டசபைக் கட்சிக் கூட்டத்திலோ, காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலோ, பேசு-வெளியே பேசாதே!!

* * *

காங்கிரஸ் M. L. A. க்களுக்கு இவ்விதமான புத்திமதி தேவைப்படுகிறது.

காங்கிரசின் பெயர் கூறிச் சட்டசபைக்குச் சென்றதை, புதியபிழைப்புக்கு ஓர் வாய்ப்பு என்று எண்ணிக்கொண்டு, M. L. A. க்கள், நடந்து கொள்கிறார்கள். சட்டசபையிலே என்ன திட்டத்தைப் பற்றிப் பேசுகிறார்கள், என்பது பற்றிய அக்கரையோ, தமதுதொகுதி மக்களுக்கு என்னென்ன குறைபாடுகள் உள்ளன, எப்படி அவைகளைப் போக்குவது, என்பதுபற்றிய அக்கரையோ இருப்பதில்லை. பெரும்பாலானவர்கள், தேர்தலுக்குப் பிறகுத் தமது தொகுதியைக் கண்ணால் காண்பதும் இல்லை. தூணும் சிலரும், தேர்தலின் போது தமக்குக் கங்காணியாக இருந்த சிலருடைய காரியத்தைக் கவனிக்கச் செல்கின்றனரேயொழிய பொதுமக்களின் நன்மைக்கான காரியம் செய்ய அல்ல!

சட்டசபைக்குச்சரியானபடி செல்லுவதைப் பலர் விட்டுவிட்டனர்.

செல்லும் சிலர்களும் வெறும் வாயை மெல்லக் கற்றுக் கொண்டனரேயொழிய நாட்டுக்குத் தேவையான நல்லதிட்டங்களைப் பற்றிப் பேசிடக் கற்கவில்லை.

தர்பாரோ கொஞ்சநஞ்சமல்ல. தலையில் விறகுக்கட்டுச் சுமந்து வருபவன் முதற்கொண்டு ஜில்லா கலெக்டர் வரையிலே, தன் வார்த்தையைக் கேட்டு நடக்க வேண்டும், என்று கூறவும், சீறவும் நன்றாகப் பழகிவிட்டனர்.

எதையும் சாதிக்க முடியும் என்ற தைரியம் பிறந்துவிட்டது. வியாபார லைசென்சு, சாமான்கள் பெற பெர்மிட்டு, உத்யோகம், எதுவாக இருப்பினும், நான் பெற்றுத் தருகிறேன், என் செல்வாக்கை உபயோகித்து, ஆனால் சிரமத்துக்குச் சன்மானம் வேண்டும், என்று கமிஷன் பேசிக் கொண்டு கிளம்புகிறார்கள்.

அதிகாரிகளை மிரட்டியும், அவர்களுடைய அலுவலில் குறுக்கிட்டும், உத்தரவுகளை மாற்றியும் அமுல் நடத்துகிறார்கள்.

இந்தக் கேவலமான நிலைமை, ஒரு மாகாணத்தோடு நின்றுவிடவில்லை—எங்கும் இதே நிலை.

நாம் மேலே வெளியிட்டுள்ள, புத்திமதி—அசாம் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் M. L. A.க்களின் நடவடிக்கையில் ஒழுங்குமுறை இருக்கவேண்டும் என்பதற்காகத் தயாரித்து, அவர்களுக்குத் தரப்பட்டதாகும்!

M. L. A.க்கள் அதிகாரிகளின் வேலைகளில் குறுக்கிட்டுக் கெடுக்கிறார்கள் என்று கூறி, அவர்களைக் கண்டித்து, நமது சென்னை மாகாண முதலமைச்சர் முன்னம் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இலஞ்சநோய், எங்கும் பரவி இருக்கிறது. பொதுமக்கள், இதற்காகத்தானா காந்தி பெயரைக் கூறினாய், கதரைப் போட்டுக்கொண்டாய் என்று கேலி செய்யவும் கண்டிக்கவும் துணிந்தனர்.

எனவேதான், M. L A.க்களிடை ஒழுங்கு ஏற்படுத்தியாக வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டது.

அசாம் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி, இதற்கு, ஒரு நல்வழித் திட்டமே தயாரித்துக் கொடுத்திருக்கிறது.

எவ்வளவு பகிரங்கமாகவும், அதிகமான அளவிலும் ஊழல்கள் இருந்தால், இப்படி ஒரு புத்திமதித் திட்டம் வெளியிடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும் என்பதைஎண்ணிப் பார்க்க வேண்டும்.

உலகிலே பலகட்சிகள் ஆளும் வாய்ப்புப் பெற்றுல்பல ஆண்டுகளுக்குப் பிறகு, கறை ஏற்பட—ஆனால் காங்கிரசின் கதியோ ஆட்சிப் பீடம் ஏறிய உடனே, கண்டவர் நகைக்கும் படியான அளவுக்கு, ஊழல் உள்ளம் படைத்தவர்கள் மலிந்து விட்ட நிலைக்கு வந்துவிட்டது.

ஒருகட்சி, தேர்தலுக்கு நின்று ஜெயித்த உடனே, ஒருசமயம், இப்படி இப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று புத்திமதி கூறுவது அவசியமானதாகக் காணப்படலாம். ஆட்சிக்கு வந்த பிறகு, ஆண்டு மூன்றான பிறகு, அசாமில், காங்கிரஸ் M. L. A. க்களுக்கு, இந்தப் புத்தி கூற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவ்வளவு 'ஒழுங்காக' நடந்து கொண்டிருக்கிறார்கள், காங்கிரஸ் M. L. A. க்கள்.

இந்த இலட்சணத்தில், இவர்கள், எதிர்க்கட்சியைக் கண்டிக்கக்கிளம்பினாலோ, அடே அப்பா! சண்டப்பிரசண்டமாக இருக்கும்!! படி தாண்டாப் பத்தினிகள் போலத்தான், பேச்சு! காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், என்பதல்ல, இப்போது பழமொழி, கதருள்ளபோதே கைப்பற்றிக்கொள் என்று ஆகிவிட்டது. காங்கிரசுக்காகஉழைத்தஉண்மைஊழியர்களின் உள்ளமோ வேதனைப்படுகிறது. ஊரார் அவர்களைத்தானே காணமுடிகிறது—எனவே அவர்களைத்தான் கேட்கிறார்கள்.

"தம்பி, தர்மலிங்கம்! மஞ்சப் பெட்டியின் மகத்துவத்தைச் சொல்லி, நீதானே, ஓட்டுப்போடச் சொன்னாய். ஓட்டு வாங்கிகொண்டு போன மகானுபாவரை, இப்போது காணவே முடிவதில்லையே, ஏனப்பா? என்னமோ, அவருடைய தயவாலே தான் தாகுமண்டி குருலிங்கத்துக்கு ஜவுளி லைசென்சு கிடைத்ததாம், சங்கர ஐயர் மகனுக்கு உத்யோகமாம், சாம்பசிவன் தங்கைக்கு எதிலேயோ மெம்பர் பதவியாம், இப்படி ஏதேதோ

(2-ம் பக்கம் பார்க்க)

திராவிடர் கழகத் தனி மாகாண மாநாடு

தலைமை உரை

23, 24—10—48 தேதிகளில் ஈரோடில் நடைபெற்ற திராவிடர் கழகத் தனிமாகாண மாநாட்டுக்குத் தலைமை வகித்த தோழர் அண்ணாத்துரை ஆற்றிய சொற்பொழிவு:—

தோழர்களே!

பாட்டாளி மக்களின் விடுதலைப் போருக்கு முரசுகொட்டிய நாளான, மே தின விழாச் சமயத்தில், தூத்துக்குடியில், நமது மாநாடு நடைபெற்றது—ஈரோடில் மீண்டும் கூடியிருக்கிறோம், அக்டோபர் மாதத்தில், அவனிகண்டு அஞ்சும்படியான பாட்டாளிகளின் விடுதலைக்கான மாபெரும் புரட்சி நடைபெற்ற திங்களில் கூடி இருக்கிறோம்.

அந்த அற்புதமான அக்டோபர் மாதம், ஜாரின் கொடுமையைத் தகர்த்தெறிந்து, ரஸ்புடீனின் மாய வலையைப் பிய்த்தெறிந்து, ராணுவத்தின் ஈட்டி முனைகளை ஒடித்தெறிந்து இரத்தம் சொட்டச்சொட்ட, ஆனால் இலட்சியம் ஒளிவிட, சோவியத்நாட்டுச் சோர்விலா மக்கள், தமது தலைவர் முன் நின்றனர்—நாமும் இன்று, நமது தலைவர் முன்பு அணிவகுத்து நிற்கிறோம், அறப்போரில் ஈடுபட்டவர்கள், அடக்கு முறைக்கு ஆளானவர்கள், சிறை சென்று திரும்பியவர்கள், தடியடியைத் தாங்கியவர்கள், கல்லடி கண்டவர்கள், சொல்லடியைப் பெற்றவர்கள், சோர்வைப் பெறாதவர்கள், மீண்டும் போரில் ஈடுபடத் துடிப்பவர்கள், சிறையை நோக்கி நடப்பவர்கள், சீறும் சர்க்காரைக் கண்டு சிரிப்பவர்கள், என்ற முறையிலே, கூடியிருக்கிறோம். அக்டோபர், அவனியிலே அற்புதமான புரட்சியைக் குறிக்கும் சொல்லாகிவிட்டது—அங்கு, சோவியத்தில். திராவிடத்திலும், இந்த அக்டோபரில் நாம் செய்யும் தீர்மானம், துவக்கும் போர், வரலாற்றிலே இடம் பெறப்போகும் நாளாக வேண்டும்—நாளாகித் தீரும்—ஏன் ஆகாது—இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?

அறப்போரை நாம் அன்று துவக்கினோம்—ஆளவந்தார்களின் ஏளனம் பிறந்தது— அறப்போரை நாம் நடாத்தினோம், ஆளவந்தார்கள் எண்ணத் தொடங்கினர், அறப்போரைத் தொடர்ந்து நடத்தி வரலானோம், ஆளவந்தார்கள், சட்டப் புத்தகங்களைத் துருவிப் பார்க்கலாயினர்—சிரித்தனர் முதலில்—சிந்தித்தனர் பிறகு—சீறினர் அதற்கும் பிறகு—சிறை என்றனர், அறிவோம் என்றோம், தள்ளு உள்ளே, என்று உத்தரவிட்டனர் தமது அதிகாரிகளுக்கு, எண்ணிக்கொள், என்று கூறினார் நமது தலைவர்—சிறைக் கூடங்களில் நமது தோழர்கள் புகுந்தனர்—சென்னையில் திருச்சியில், தூத்துக்குடியில் வேலூரில், கடலூரில் பலப்பல இடங்களில். அறப்போரை இடையே, ஹைதராபாத் சம்பவத்துக்காக, நிறுத்திவைத்தோம், நமது அறப்போர் உச்ச நிலையில், மிக மிக உற்சாகத்துடன் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், பத்துத் தொண்டர்களை மட்டும் மறியல் செய்யச் சொன்னால் போதாது, ஏன் இன்னும் பலரை அனுப்பி வைக்கக் கூடாது, தொண்டர்கள்தான் கூட்டம் கூட்டமாக முன் வருகிறார்களே, என்று ஆர்வ மிகுதியுடன் சில நண்பர்கள் நம்மைக் குறை கூறிக்கொண்டிருந்த நேரத்தில், தொண்டைமண்டலம் பள்ளியிலே மட்டுந்தானா, ஏன் எங்கள் பள்ளியில் மறியல் நடத்தக் கூடாது, வாருங்கள் வாருங்கள், என்று பள்ளி மாணவர்கள் தத்தமது பள்ளிக்கூடங்களுக்கு வருமாறு அழைப்பு அனுப்பியவண்ணம் இருந்த நேரத்தில், தாய்மார்களின் உற்சாகம், ஆடவரை அஞ்சச் செய்த நேரத்தில், காட்டிலே விட்டால் என்ன, பட்டினி போட்டால் என்ன, பதட்டமாக அடித்தால்தான் என்ன, தக்க விலை கொடுக்காமலா, உரிமை கிடைக்கும், என்று கூறி, நமது தோழர்கள் மார்தட்டி நின்ற நேரத்தில், ஹைதராபாத் தொல்லை குறுக்கிட்டு, நாம் அறப்போரை நிறுத்தி வைக்கும் நிலையை ஏற்படுத்தி விட்டது.

என்ன இருந்தாலும் இதற்காக இந்தி எதிர்ப்பை இப்படி ஒரே அடியாக நிறுத்தி விடுவதா—என்று குறை சொல்லும் நண்பர்கள் இருக்கிறார்கள். அறப்போர் நடைபெற வேண்டும், நாம் அதிலே கலந்து யணியாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தால், இதுபோலக் கூறுபவர்களுக்கு என் பாராட்டுதல். ஆனால், அந்த நேரத்தில் நாம் அறப்போரை நிறுத்தி வைத்தது, நமது மாண்பையும் மதிப்பையும் நிச்சயமாக உயர்த்தியிருக்கிறது என்பதை மட்டும் நண்பர்கள் உணரவேண்டும். ஆளவந்தார்களே கூட நாம், அடியோடு அறப்போரைக் கைவிட்டுவிட்டவர்களல்ல என்பதை அறிவார்கள்—மீண்டும் அறப்போர் தொடுத்தே தீருவோம்-தொடுக்கப்போகிறோம் — அதற்கே கூடி இருக்கிறோம்—நாள் குறித்துத் தருவார் நம் தலைவர்—விட்ட இடத்திலிருந்து தொடங்குவோம், அதிகரித்த ஆர்வத்துடன் — விறுவிறுப்புடன், அதற்கான முன்னேற்பாடே, இம்மாநாடு.

அறப்போர் நிறுத்தப் பட்டிருந்த இடைக்காலத்தை மந்திரிமார்கள் தந்திரமாகத் தமது பிரசாரத்துக்குப் பயன் படுத்திக் கொண்டனர். ஒவ்வோர் நாளும் இந்தியை ஆதரித்துப் பேசுவதும், எதிர்ப்பவர்களை ஏளனம் செய்வதுமாக இருந்தனர். கல்வி அமைச்சர் குறள் கற்றவர் என்கிறார்கள்—வாய்மை தெரிந்திருக்க வேண்டும்—ஆனால் அவரோ, போகுமிடமெங்கும், இந்தி கட்டாயமில்லை, என்று பேசியே வருகிறார். அறப்போர் துவக்குமுன்பே ஆயிரம் தடவை, கூறினோம், அமைச்சரின் திட்டத்தால், இந்திகட்டாயமாக்கப் படும் விதத்தை. அவருடைய துணிவும், பொதுமக்களின் மறதியிலே அவருக்குள்ள நம்பிக்கையும், அவ்வளவு தூரம் அவருக்குப்பொய்பேசும் சவுகரியத்தை அளித்திருக்கிறது. ஆனால், கெட்டிக்காரன் புளுகுக்கும் எட்டே நாளல்லவா தவணை வைத்திருக்கிறார்கள்—அமைச்சரின் சொல்லின் போக்கும் வெளுத்துவிட்டது, சின்னாட்களுக்கு முன்பு, அவர் பேச்சின் மூலமே.

ஆளவந்தார்கள், மக்களை மாளவைத்தார்கள்!

கட்டாயப்படுத்தவில்லையே இந்தியை—என்று அவரே கூறுகிறார்—திருநெல்வேலியில் ஒரு ஆசிரியர், இந்தி இஷ்டபாடமானாலும் எனக்கு வேண்டாம், நான் படிக்க மாட்டேன், என்று ஒரு மாணவன் சொன்னால் என்ன செய்வது என்று கேட்டாராம். ஆசிரியர் அவர்! அவர் கேட்கிறார் இந்த அர்த்தமற்ற கேள்வியை! நாலும் நாலும் எட்டு என்று சொன்னால், நான் அவன் தலையில் குட்டவா, என்று கேட்கிறார், அறிவு பரப்ப வந்தவர் — ஆசிரியத் தொழிலை அவர் அறிவு பரப்பும் தொழிலாகக் கருதவில்லை போலும் — அங்கத்தை வளர்க்கும் தொழிலாகக் கருதுகிறார் போலும்! மாணவன் சொல்கிறான், எனக்கு இந்தி இஷ்டமில்லை, படிக்கமாட்டேன் என்று, ஆசிரியரே கூறுகிறார், இந்தி இஷ்டபாடமென்று—மாணவனுக்குந்தெரிவிக்கிறார் இஷ்ட பாடம் என்பது உண்மையானால், மாணவன், தனக்கு இந்தி படிக்க விருப்பமில்லை என்ற உடனே, ஆசிரியர் செய்யவேண்டியதென்ன—சரி, நீ படிக்கத் தேவையில்லை—விருப்பமில்லாத உன் மீது இந்தியைத் திணிக்கமாட்டேன், என்றல்லவா கூற வேண்டும். ஆனால் ஆசிரியர் என்ன செய்கிறார், அமைச்சரைக் கேட்கிறார்; அவருக்குத்தான் இப்படிப் பாதி மதி! அமைச்சருக்கு இருக்கக் கூடாதோ முழுமதி-அவர் கூறுகிறார், அப்படிச் சொல்லும் மாணவனை, வெளியே துரத்து—என்று. எவ்வளவு தெளிவு—நாடாள வந்த மந்திரியாரின் நல்லறிவு இப்படி இருக்கிறது. இந்த இலட்சணத்தில், ஐயா இந்தி இஷ்டபாடம்தானே எனக்கு இஷ்டமில்லை, இந்தி; எனக்கு வேண்டாம் என்று மாணவன் கூறினால், அவனை வெளியே துரத்து என்று உத்தரவிடும் மந்திரியார், அதேபோது, இந்தியைக் கட்டாயப் படுத்தவில்லையே, என்றும் பேசுகிறார்.

இந்தி சம்பந்தமாக, தமிழ் நாட்டுக்கென, முதலில் தாம் பிறப்பித்த உத்தரவை, அமைச்சர் மாற்றியது ஏன்—என்ன காரணம் அதற்கு—ஏன் முதலில், தமிழ்நாட்டிலே மட்டும் இந்தி கட்டாயபாடமாக இராது என்று சொன்னவர், ஒருமாதகாலத்திலே, தமது உத்தரவை மாற்றி, தமிழ்நாட்டுக்கும் இந்தி கட்டாய பாடம் என்று கூறினார்—இதற்கு ஒரு விளக்கம் — அறிவுக்குப் பொருத்தமான ஒரு சமாதானம், இந்த அமைச்சரால் கூறமுடியவில்லை. ஆணவம் இருக்கிறது நிரம்ப, அதிகாரம் பெற்ற காரணத்தால்—இதைவிட அதிக ஆணவம்படைத்தவர்களின் அதிகாரமும் அந்தஸ்தும், என்ன ஆயிற்று என்பதை அவர் அறியார்—ஆச்சாரியார் அறிவார்—சொந்த அனுபவத்தின்மூலம்.

ஆட்சியாளர்களுக்கு, விளக்கம் கூறினோம், கேட்க மறுத்தனர், வேண்டுகோள் விடுத்தோம், நிராகரித்தனர், வீணான விரோதம் வேண்டாம் என்று கூறினோம், அலட்சியம் செய்தனர், மொழித் துறை நிபுணர்களின் பேச்சுகளைத் திரட்டித் தந்தோம், அவைகளைத் துச்சமென்று தள்ளினர், பிறகே போர் தொடுத்தோம்.

இந்த மாநாட்டிலே, மீண்டும் நாம் காரணம்காட்டிக் கொண்டிருக்கப் போவதில்லை— கருத்திழந்தவனுக்கு நல்லுரையும், கண்ணிழந்தோனுக்குக் காட்சியும், செவி மந்தமடைந்தவனுக்குக் கீதமும் பயனில்லை—யாரும் இல்லை தட்டிக்கேட்க என்ற செருக்குடன் இருக்கும் இந்த மந்திரிசபையினருக்கு, விவேகம், வேம்பு—எதிரியார், நண்பன் யார் என்று விளக்கம் தெரியமுடியாத அளவுக்கு அதிகார போதை தலைக்கேறி விட்டிருக்கிறது, இனி அவர்களால் ஆனதைச் செய்து பார்க்கட்டும் என்று அறிவிப்பதைத்தவிர, வேறு எதும் சொல்லப் போவதில்லை.

ஆளவந்தோரே! அமைச்சர்களே! அடக்குமுறையைக் கூசாமல் வீசுகிறீர்கள்—தாராளமாகச் செய்யுங்கள்—டயரின் டைரியைப் படித்துப் பார்த்தும் செய்யுங்கள். தாயகத்தின் விடுதலைப் போருக்காகத் தன்னையே அர்ப்பணிக்கும், அறப்போர் வீரர்களின், இரத்தம் கீழே சிந்தச்சிந்த அடிக்கும்படி, உத்தரவிடுங்கள்! உங்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது, அறிவோம். உங்கள் மனம் அதற்கு இடந்தரும் — பழக்கமும் பெற்று விட்டீர்கள். தொழிலாளர்களை அடித்துப் பழக்கப்பட்டிருக்கிறீர்கள்! தடியால் அடித்தீர்கள், கண்ணீர்ப்புகைக்குண்டு வீசினீர்கள்! அவர்கள் கேட்டது வாழ்வு, நீங்கள் கொடுத்தது சாவு! உழவரை அடித்தீர்கள்! மாணவர்களை அடித்தீர்கள், அதிகாரிகளை அடித்தீர்கள். வேலைநிறுத்தக்காரர்களை எல்லாம், விலா நொறுங்க அடித்து வெற்றி பெற்றிருக்கிறீர்கள். உங்களால், முடியும், இரக்கத்தை மறக்க, நீதியைநசுக்க, அறப்போர் வீரர்களை அடித்து நொறுக்க, ஆனால், ஒன்று அறியுங்கள், அவகாசம் இருக்கும் போதே, அறைக்க அறைக்கச் சந்தனம் மணப்பது போல, உங்கள் அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க, திராவிட இயக்கத்தின் சக்தி வளருவதைக் காணப்போகிறீர்கள்! இந்தியை எதிர்த்துத் துவக்கப்பட்ட இந்த அறப்போர், எங்கள் நாட்டின் விடுதலைப்போரின் முதல் கட்டம் என்பதை நாங்கள் மறக்கவில்லை. தடியடி விழும்போதெல்லாம், தாலமுத்து! நடராஜா! என்ற முழக்கமே, கேட்பீர்கள். செத்துக்கீழே வீழ்ந்தாலும், இதோ மற்றோர் வேலாயுதம் என்று செந்தமிழ் நாட்டார் பேசிடக் கேட்பீர்.

அடக்குமுறை ஒரு விசித்திரமான சக்தி! அது யார்மீது வீசப்படுகிறதோ, அவர்கள், முதல்தாக்குதலுக்குப் பிறகு, மும்மடங்கு பலம் பெறுவர்.

பகத்சிங்கும், குமரனும் இந்த மொழிப் போராட்டத்திலே எங்களில் உண்டு என்பதைக் காட்டுவதற்குத் திராவிடம் தயாராக இருக்கிறது.

ஆளவந்தார்கள், ஆங்கிலர் புகுத்திய அடக்குமுறைக்கு ஆளானவர்கள்—அதை எண்ணும்போது அவர்களுக்கு, உரிமை உணர்ச்சியின் உன்னதமான சக்தி தெரியும் என்று நான் நம்பினேன்—அவர்களுக்கோ, அடக்குமுறையால் தாங்கள் அனுபவித்ததைப் பிறர் அனுபவிக்கக் கண்டு ஆனந்தப்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது. அந்த ஆசையும் தீர்ந்து போகட்டும். அறப்போர் வீரர்களே! இந்த அமைச்சர்களால், ஆளமுடியாவிட்டாலும், தமிழரை மாளவைக்கவாவது முடிகிறது என்ற பெயர் அவர்களுக்குக் கிடைக்கட்டும்-நற்பெயர்—நாடு புகழும் பெயர்—சரித ஏடுகளிலே பொறிக்கப்பட வேண்டிய பெயர், ஆளவந்தார்கள், மக்களை மாளவைத்தார்கள் என்ற பெயர்.

மொழி, வாழ்க்கையின் வழி!

நமது கட்சிக்குச் செல்வாக்கு உச்சநிலைக்குச் சென்றிருக்கிறது, இனி அடுத்த தேர்தலில் நாமே வெற்றி பெறுவோம், சட்டசபையில் இடம் கிடைக்கும், என்று ஆசைமொழி கூறி, பிறகட்சியினர் அழைப்பர், நாம், நமது கழகத்துக்கு வருமாறு அழைப்பது, ஆசைமொழி கூறியல்ல, வீரரை அழைக்கிறோம், வீணரை அல்ல! அடக்குமுறையைத் தாங்கும் தீரரை அழைக்கிறோம் அரசியல் சூதாடிகளை அல்ல! வீட்டுக்கும் சிறைக்கும் வித்யாசம் தெரியாதவர்களை அழைக்கிறோம், சட்டசபைக்குக் கொலுப் பொம்மைகளை அல்ல! நமது நாட்டின் பாட்டுமொழியைக் காக்க வீட்டிற்கொரு பிள்ளை, தேவை! வெறி பிடித்தலையும் எதேச்சாதிகாரத்தின் கோரத் தாக்குதலை, மொழிக்காக, நாட்டுக்காகத் தாங்கும் உள்ள உரம் படைத்த உத்தமர்கள் தேவை!

உலகிலே, எந்த உன்னதமான கொள்கையையும் நிலைநாட்டியது, நீண்ட பேச்சினால் மட்டுமல்ல, நாசுக்கான அரசியலால் அல்ல, அந்தக் கொள்கைக்காக, உயிரை இழக்கவும் தயாராக இருந்த உத்தமர்கள் சிந்திய இரத்தத்தால்தான். எனவேதான், நமக்கு இந்த உறுதி பிறக்கிறது. நமது கொள்கை நியாயமானது, நாணயமானது, அவர்கள் கூறுவது போல இது அரசியல் கட்சிமாச்சரியத்தின் விளைவு அல்ல. மொழி, வாழ்க்கையின் வழி. வாழ்க்கையின் காரணமாக இனப்பண்பு அமைகிறது. மொழி ஒன்று நமக்கிருக்க, அதன் வளம் குன்றாமல் இருக்க, முடியுடை வேந்தர்கள் அதனை வளர்த்திருக்க, மங்காத புகழ் பெற்ற இலக்கியங்கள் அம்மொழியில் இருக்க, ஏன் ஒரு வேற்று மொழி, நாகரீகமற்ற, இலக்கண இலக்கியமற்ற, ஒருமுறை உள்ளே புகுந்து விரட்டப்பட்ட, இரு தமிழ் இளைஞர்களின் இன்னுயிரைக் குடித்த, இந்திமொழி, எமக்கு ஏன் என்று கேட்கிறோம்! இதைக் கேட்கவும் உரிமை இல்லையோ! இதற்கான கிளர்ச்சி செய்வது எந்த விதத்திலே இவர்களுடைய ஆட்சிக்குக் கேடு செய்யும். ஆச்சாரியார் கூறுகிறார் பத்துநாட்களுக்கு முன்னால் கூட, வடநாட்டில், கட்டாயப்படுத்தாதே, எதையும் என்று. அவர் பட்ட கஷ்டம் அவருக்குத் தெரியும். இஷ்ட தேவதையைத் தொழுது விட்டு, கையில் கிடைத்ததைக் கொண்டு தாக்குவேன் என்று வீம்பு பேசி, ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களைச் சிறைப்படுத்திப் பார்த்துத் தோற்றவர் கூறுகிறார், கவர்னர் ஜெனரலாகி கருப்புக்கொடி பிடிக்கக் கண்டவர் கூறுகிறார். ஏன், இந்த மந்திரிமார்களுக்கு, அவர் கூறுவதன் சூட்சமம் தெரியவில்லை! அடக்குமுறையையே நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் தடி இருக்கிறது, நம்மிடம் அதைத் தாங்கும் உடல் இருக்கிறது—அவர்களிடம் சிறை இருக்கிறது, நமக்கு அங்கு சென்று சிப்பி ஏந்தத் துணிவு இருக்கிறது, பலருக்குப் பழக்கமும் இருக்கிறது — அவர்களிடம் துப்பாக்கி இருக்கிறது, நம்மிடம் மார்பு இருக்கிறது குண்டுகளை ஏற்றுக் கொள்ள.

திராவிடர் கழக தனிமாநாடு, இதைத்தான் துரைத்தனத்தாருக்குத் தெரிவிக்க விரும்புகிறது—எங்கள் உரிமை அழிக்கப் படுவதைக் கண்டும் ஊமைகளாக இருக்கமாட்டோம்-உயிரைப் பற்றிய கவலையை உங்கள் போக்கு, போக்கிவிட்டது—வாருங்கள் களத்துக்கு மீண்டும், வந்த ஹைதராபாத் வம்பும் ஒழிந்தது, சொந்த மொழிக்காக நாங்கள் உயிர் கொடுக்க முன் வருகிறோம், நீங்கள், அயலான் மொழிக்காக, உங்கள் உடன் பிறந்தோரைக் கொல்லும் உத்தமர்கள் என்ற நற்பெயருடன் வாழுங்கள்—என்று ஆளவந்தார்களுக்கு கூறிவிடுவதே, இம் மாநாட்டின் முக்கியமான நோக்கம்.

எங்கள் பிரசாரத்தைத் தடுத்து, பத்திரிகைகளை நிறுத்தி, புத்தகங்களைப் பறிமுதல் செய்து, நாடகங்களைத் தடை செய்து, முக்கியஸ்தர்களைக் கைது செய்து, இயக்கத்தை ஒடுக்கிவிடலாம்—ஒழித்துவிடலாம், என்று எண்ணும் மந்திரிமார்களுக்குக் கூறுகிறேன், ஜீவசக்தி பொருந்திய இந்த இயக்கத்தை உங்களால் ஒழிக்க முடியாது — இந்த முறைகளும், உங்களுடைய ஆபூர்வமான மூளையிலே மட்டும் உதித்தவையல்ல — பலகாலமாக எதேச்சாதிகாரிகள், எந்த விடுதலை இயக்கத்தின் மீதும் பூட்டிய பாணங்கள்தான் இவை—பாணங்கள் உரிமை உணர்ச்சியைத் துளைத்து அழித்ததில்லை—கூர் மழுங்கியே வீழ்ந்தன. இதுதான் வரலாறு—இதைத்தான் இங்கு காணப்போகிறீர்கள். சற்றேனும் தீரயோசிக்கும் பண்பு இருக்குமானால், இந்தப் பெரிய இயக்கத்தின் தன்மையைக் கவனியுங்கள். பணபலம் அற்ற இயக்கம், பாடுபடும் சாதாரண மக்களைக்கொண்ட இயக்கம் — இதற்குச் சட்டசபையிலே வேலை இல்லை—பதவிபற்றிக் கவலை இல்லை—தேர்தலைத் தொல்லை என்று ஒதுக்கிவிட்டது — இதற்கோர் தலைவர், அவருக்கு வயது எழுபது, அவர் இதுவரை எட்டுமுறை சிறை சென்றிருக்கிறார், நாட்டிலே உள்ள பல்வேறு சக்திகளுக்கும், சூட்சித் தந்திரம் படைத்த தலைவர்களுக்கும் எதிராக நடத்தப்பட்டு வருகிறது—பலமுறை தாக்கப்பட்டது பலம் இழக்கவில்லை — கேட்டதும் திடுக்கிடக்கூடிய கொள்கைகளைக் கூறிவந்தது, எனினும் ஒவ்வொன்றாக அந்தக் கொள்கைகள் வெற்றி பெற்றனவே தவிர ஒன்றேனும் கைவிடப்படவில்லை, எப்படிக் கிடைத்தது இந்த மகத்தான வெற்றி என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். சாகும்போதும் சாக்ரடீசுக்கு இருந்த மன உறுதி, இந்த இயக்கத்துக்கு இருக்கிறது. உடனடிப் பலனை உதறித் தள்ளுவதால், உல்லாச புருஷர்களை விரட்டிவிட்டதால், உள்ளத் தூய்மை கொண்டவர்களைக் கொண்டிருப்பதால், அறிவுத் தெளிவும் ஆண்மைத் திறனும் இருப்பதால், இந்த இயக்கம், கொள்கைகளை வெற்றிகரமாக்கி இருக்கிறது.

எங்களை அடக்கப் போலீசை ஏவு முன்னம்,—அந்த அளவு பொறுமை இல்லையானால் - எங்களை அடித்தான செய்தி கேட்டு உங்கள் சித்தம் களித்த பிறகாவது சிந்தித்துப்பாருங்கள், நாங்கள் சொல்லிவந்தவைகளில், எதனையாவது நாடு, முதலில் விரும்பி ஆதரித்ததா, கடைசியில் எதையாவது வேண்டவே வேண்டாம் என்று தள்ளிவிட்டதா வெறுத்து, என்பதைப்பற்றிச்சற்றே கவனம் செலுத்துங்கள்.

திருப்பணத்தில் ஐயர் ஏன் என்று கேட்டபோது திடுக்கிட்டனர், தூற்றினர், சபித்தனர்,—கல்லடி, சொல்லடி!

யார் இவர்கள் பழையகால ஏற்

சில்லறைகளில் சிந்தனை செலுத்தவில்லை!

பாட்டை உடைக்க என்று கூறினர்.

கடைசியில் நடந்ததென்ன! ஆயிரக்கணக்கில் இன்று ஐயரில்லாத திருமணங்கள் நடக்கவில்லையா!

தலைமுறைதலைமுறையாக இருந்து வந்த தர்ப்பைக்காரரின் துரைத்தனத்துக்கே இந்தக்கதி என்றால், தம்பிவாடா, அண்ணவாடா, கண்ணேவாடா, மணியே வாடா! என்று கெஞ்சிக்கூத்தாடி ஓட்டுப்பெற்று ஒரு ஐந்துவருஷகாலம் அதிகாரம் செலுத்தும் அளவுமட்டுமே, அந்தஸ்த்து படைத்த அமைச்சர்கள் எம்மாத்திரம் என்று கேட்கிறோம்.

பார்ப்பனச் சமுதாயத் தலைவர்களுக்கு வெட்கமும் ரோஷமும் இருந்திருக்குமானால், மிக மிகச்சாமான்யர்களான எங்கள் பிரசாரத்திற்கு எதிராக இவர்களின் வேத புராண இதிகாச சாஸ்திரங்கள்நிற்க முடியாமல் ஓடி ஒளிந்ததைக்கண்டு, காலத்தின் போக்கை உணர வேண்டாமா! வெள்ளைக்காரன் எவ்வளவு விவேகத்துடன் உணர்ந்து கொண்டான், இனிநமதுஏகாதிபத்யச்சரக்கு விற்பனையாகாது, என்பதை; எவ்வளவு புத்திசாலித்தனமாகக் கடையைக் கட்டிக்கொண்டான். ஏன் அந்த விவேகம் இவர்களுக்கு இல்லை. நமது அமைச்சர்கள் அளிக்கும் தைரியம், இதற்குக் காரணம். அமைச்சர்களுக்கு உள்ள தைரியத்துக்குக் காரணம், தங்களைத் திராவிடர் கழகம் எவ்வளவுதான் எதிர்த்தாலும், மக்களிடம் பிரசாரம் செய்து, நாட்டை விடுவித்த நாயகர்களல்லவா நாங்கள்! எங்களை மறக்கலாமா? என்று கொஞ்சு மொழி பேசி, தேர்தல் தந்திர பலத்தில் வெற்றி பெற்று தர்பார் நடத்தலாம் என்ற நம்பிக்கைதான்.

இந்தியா மட்டுமல்ல, பக்கத்திலுள்ள பர்மா, தெற்கே உள்ள சிலோன், போன்ற பற்பல நாடுகளிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யப் பிடி ஒழிந்துவிட்டது. எகிப்து நாட்டிலிருந்துவந்த பிரிட்டிஷ் படைகள், வீடுவந்து சேர்ந்துவிட்டன. பலஸ்தீனப் பரிபாலனத்தையும் பிரிட்டன் விட்டுக் கொடுத்துவிட்டது.

இந்தநாடுகளிலே எல்லாம், ஏகாதிபத்ய எதிர்ப்புச் சக்தியாக களத்தில் இருந்து வந்த கட்சிகளுக்கு, ஆளும் வாய்ப்பும், மக்களுக்கு, அவைகளிடம் பற்றும் பாசமும் ஏற்படுவது சகஜம். இந்த முறையிலே காங்கிரசுக்குக் கிடைத்துள்ள செல்வாக்கை நமது மந்திரிமார்கள், 'பார் உள்ளளவும் பஞ்சபூதமுள்ளளவும்' நிலைக்கக் கூடியது என்று நம்பி, எதையும் செய்யலாம் என்று இருக்கிறார்கள். நாட்டிலேயோ பொது அறிவும் அதன் பலனாகமட்டுமே ஏற்படக் கூடிய ஜனநாயக ஆர்வமும், அரும்பளவிலும் இல்லை. எனவே அடித்தது இலாபம் என்ற முறையிலே ஆளவந்தார்களால் நடந்து கொள்ள முடிகிறது.

நாட்டுக்கு விடுதலை வாங்கித்தந்தவர்கள் காங்கிரஸ் கட்சியினர்—அந்தக் காங்கிரஸ் கட்சியை இந்தத் திராவிடக்கழகத்தார் எதிர்க்கிறார்கள்—மந்திரிகளை எதிர்க்கிறார்கள்—மேலும் இவர்கள் பார்ப்பனத் துவேஷிகள், மதத்தை நிந்திப்பவர்கள், என்று கூறி வருவதன் மூலம், கடைசி வரையில், கொடிகட்டி வாழலாம் என்று நம்புகிறார்கள்.

காங்கிரஸ், நாட்டு விடுதலைக்காக அமைக்கப்பட்டது தானே, அந்த விடுதலைதான் கிடைத்து விட்டதே, இனியும் காங்கிரஸ் கட்சி ஏன் இருக்கவேண்டும் என்று, பொது மக்கள், உரத்த குரலில் அல்ல, அந்தக்காலம் இன்னும் வரவில்லை—மெள்ளக் கூறுகிறார்கள்—ஆளவந்தார்களின் செவிக்குச் செந்தேளாகிறது அந்தப்பேச்சு.

எங்களால்தானே நல்லாட்சி நடத்த முடியும்—என்று மார்தட்டும் மந்திரிமார்களைப் பார்த்து மக்கள், மெள்ளக் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள், பேச்சளவிலே சரி, ஆனால் காரியத்திலே காணோமே என்று.

நாடு, இன்று, காங்கிரசின் பாசிசப் போக்கைக்கண்டு ஜனநாயக முறைப்படி, வேறோர் கட்சி வேண்டும், என்று எண்ணுகிறது—தேடுகிறது—நாட்டிலே நல்லறிவாளர்கள் பலரும், இதனை வலியுறுத்துகிறார்கள்—திராவிடர் கழகமே, இத்தகைய ஒரு எதிர்க்கட்சியாகிவிடும், என்று காங்கிரஸ்காரர்கள் அஞ்சுகிறார்கள், நண்பர்கள் விரும்புகிறார்கள், பதவிப்பிரியர்கள் பிரார்த்திக்கிறார்கள்!

திராவிடர்கழகம், பதவிபெறப் பாடுபடுவது என்ற அரசியல் நோக்கத்தை மட்டுமே கொண்ட கட்சியாகி விட்டால் நிச்சயமாக, காங்கிரஸ் மந்திரிசபையின் போக்கின் காரணமாக நாட்டிலே குமுறிக் குழம்பிவரும் எதிர்ப்புச் சக்திகளைத் திரட்டி, அவைகளுக்கெல்லாம் புகலிடமாகத் தன்னை அமைத்துக் கொண்டு, அடுத்த தேர்தலில், காங்கிரசைத் தோற்கடித்து ஆட்சிப்பீடம் ஏறவும் முடியும்.

திராவிடர்கழகம், காட்டுக் கூச்சலிடும் அளவே உள்ளது, நாட்டை ஆளும் வேலைக்கு வரக்கூடிய அளவு வளர்ச்சி இல்லை, என்று, தவறான கணக்கிட்டுக் கொண்டு நமது காங்கிரஸ் நண்பர்கள் தர்பார் செய்கின்றனர். நாட்டு நிலையோ, வேறு. காங்கிரசின் ஆட்சியால் ஏற்பட்டுள்ள விளைவுகளும், அந்த விளைவுகளால் உண்டான வேதனைகளும், கொஞ்சமல்ல. காங்கிரசாட்சிக்கு மாறாக, வேறோர் ஆட்சி அமைப்பது மட்டுமே நமது வேலை என்று, திராவிடர்கழகம் கருதினால், நிச்சயமாக, காங்கிரசுக்கு எதிர்ப்பாக உள்ள, பலவகைச் சக்திகளையும், பயன்படுத்தி, வெற்றிபெற முடியும். திராவிடர்கழகம் அவ்விதமான வெற்றியை விரும்பவில்லை—அதன் நோக்கம் அவ்வளவு சாமான்யமானதுமல்ல.

திராவிடர் கழகத்தின் நோக்கம், ஆட்சியைக் கைப்பற்றி அனுபவிக்க விரும்பும் அரசியல் இலாபப்போராட்டமல்ல, நாட்டுக்குப் புதியநிலை ஏற்படுத்தும், மிகப் பெரிய இலட்சியத்தைக் கொண்டதாக இருக்கிறது. எனவே தான் சில்லறைகளில் சிந்தனையைச் செலவிட மறுக்கிறது.

தேர்தலும் வேண்டாம்—ஆட்சியும் வேண்டாம்—என்று கூறும் இவர்கள், காங்கிரஸ் மந்திரிகளைக் கண்டிப்பதும், காங்கிரசின் போக்கைக் குறை கூறுவதும், பார்ப்பனரைத் துவேஷிப்பதுமாகச் சதா பேசிக்கொண்டிருப்பானேன்—என்று காங்கிரசாரும் கேட்கின்றனர், எப்படியேனும் ஆட்சிபீடத்தில் அமர வேண்டும் என்ற ஆசைகொண்ட அன்பரும் கேட்கிறார்கள். இரு

(25-ம் பக்கம் பார்க்க)

தீர்ப்பளியுங்கள்

அவன் ஒரு புலையன். தாழ்த்தப்பட்டவன். உழைப்பின் உருவம், ஊருக்கு வெளியே குடி இருக்கிறான். வயிறார உணவு அவன் வாழ்நாளில் என்றுமே உண்டதில்லை. சொந்தத்தில் சொத்தொன்றும் இல்லை. தினம் தினம் வேலை செய்தால்தான், வேளைக்கொரு கவளமாவது கிடைக்கும். வேலையும் சில நாட்களில் கிடைப்பதில்லை. அவனுக்குப் புத்தி தெரிந்த நாள் முதலாக, அவன் நிலை இது தான்.

சமுதாய அமைப்பின் பாதாளப் படியில் இருப்பவன் அவன். பிறருக்குப் பணிபுரியும் நிர்ப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டுக் கிடப்பவன். கெஞ்சிக் கூத்தாடி, நிலப்பிரபுக்களிடம் கொஞ்சம் நிலம் பெற்று, உழுது - எரு விட்டு - விதை தூவி - நீர் பாய்ச்சி - களை எடுத்து - காவல் காத்து - அறுவடை செய்து - களம் சேர்த்து - கட்டடித்து - அம்பாரம் குவித்து - அதனைப் பண்ணையாரின் பாதுகாப்பிலே ஒப்படைத்து - வயிற்றைக் காட்டி—பயந்து — பல்லிளித்து— உழைப்புக்கு ஊதியம் கேட்கும் நிலை-கடமை அவனுக்கு இருந்தது. இந்தக் கடமை, அவன் விருப்பப்படி அவனுக்கு ஏற்பட்டதல்ல. சமுக அமைப்பிலே அவனுக்குக் கிடைத்திருக்கும் இடம், இந்தக் கடமையை அவனிடம் பலவந்தமாகப் புகுத்தி இருக்கிறது. இந்த நிர்ப்பந்தத்திலிருந்து அவன் தப்பமுடியாது. எனவே, தன்னுடைய கடமையில் துளியும் தவறாமல் பல காலமாகவே பண்ணையாருக்கு வாழ்வளிக்கும் பெரும்பணியையே புரிந்து வந்தான். முணுமுணுக்காமல், முகம் சுளிக்காமல், சோர்வு காட்டாமல், தனது கடமையை — பிறருக்கு உழைத்து உருக்குலையும் பணியை— பிறந்த நாள்முதல் செய்துவந்தான்.

“கடமையைச் செய்து வந்தால் உரிமை தானாகவே வந்தடையும்!” என்ற விருப்பத்தகாத இந்த உபதேசத்தை, எத்துக்காரர்கள் சிலர், சீமானிகளுக்கு உருக்கமாகச்செய்து வருகிறார்களே, அதன்படி, அந்த உபதேசத்தை என்றும் கேட்டறியாமலே, தனது கடமையை நிறைவேற்றி வந்தான். உரிமை அவனுக்குக் கிடைத்ததா? இல்லை!

வயிறு நிறைய ஒருவேளையாவது உணவு கொள்ளும் நிலையாவது உண்டாயிற்றா? கிடையாது! ஒழுக்கல் இல்லாத கூரை அமைந்த குடிசைக்காவது வழி ஏற்பட்டதா? இல்லை! நல்ல ஆடை அணிகளை, அவன் கனவிலாவது அணிந்துகளிப்படையும் மாற்றம் பிறந்ததா? அறவே இல்லை! சலிப்படையாது, பாட்டன் முப்பாட்டன் காலமுதல், ஒரே கடமையைச் செய்துவரும் அவனுக்கு, மனிதனாகப் பிறந்திருக்கும் காரணத்திற்காகவே இயல்பாக ஏற்படும் உரிமைகளில் ஒன்றாவது— அவனை வந்து அடைந்ததுண்டா? இதுவரை கிடையாதே!

இன்றும் சேரிதானே அவன் வாசஸ்தலம்! பஞ்சமும் பசியுந்தானே அவன் உறவு! பிணியும் சாவுந்தானே அவனுக்கு ஓய்வளிக்கும் வாய்ப்பு! தான் விரும்பிப் பெறாத கடமையை இதுவரை அவன் தவறாமல் செய்து வந்தும், அவன் நிலையிலே புதுமை— புரட்சிகரமான மாற்றமில்லையாயினும்—சிறு மாற்றம் — ஏற்பட்டதுண்டா? மனிதாபிமானம் சிறிது உள்ளவர்களாவது இதனைச் சிந்தித்துத் தீர்ப்பளிக்கட்டும்.

* * *

அய்யம்பிள்ளை, ஒருசிறு கிராமம். ஏர்க்குளத்திற்கு முப்பதுகல்தொலைவில் உள்ளது. மழவஞ்சேரி பரம்பரையைச் சேர்ந்த நிறித்துவர் அவர். வயது அறுபதை நெருங்கிவிட்டது, குறிப்பிடத் தகுந்த நிலப்பிரபு. தமக்கிருந்த நிலத்தின் சிறுபகுதியை ஒருபுலையனுக்குக் குத்தகைக்கு விட்டிருந்தார்.

அந்தப்புலையன், நிலத்தை ஆழ உழுது, நல்ல நாற்றைநட்டு, கருத்தாகக் கண்காணித்து, செழிப்பாக நெற்பயிர் வளருவதைக்கண்டு களித்தான். பலப்பல நினைத்தான். பலன் அதிகம் கொடுக்குமே, சிலகாலைக்காவது பசி தெரியாமல் சாப்பிடலாமே என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தான்.

இதுவரையில் இல்லாத அளவிற்கு நெற்கதிர்கள் கட்டமாக இருப்பதைப் பார்த்து, தன் உழைப்பைத் தானே வியந்து கொண்டான். அவனை அறியாமலே அவன் தோள்கள் பூரித்தன. பாட்டு—கூத்து—களியாட்டம்—இவ்வளவும் மாறி மாறி அவனிடத்தில் உருவாகி இருக்கும்! ஏன் இருக்காது?

சோம்பேறி அல்லவே அவன்? பிறர் உழைப்பை உறிஞ்சி உல்லாச வாழ்வு நடாத்தும் உலுத்தன் அல்லவே அவன்! நிலத்தில் வியர்வை சொட்டச் சொட்ட, பாடுபட்ட பஞ்சையல்லவா அவன்? கண்களை இமை பாதுகாப்பதைப் போன்று, ஆடுமாடு மேய்ந்து விடாமல் பயிரைப் பாதுகாத்தவன் அல்லவா அவன்? எதிர்பார்த்ததற்கு அதிகமாக—இது வரையில் இல்லாத அளவில்—விளைவு இருக்கிறது என்றால், பாடுபட்டவனுக்குப் பரமானந்தம் ஏன் உண்டாகாது? வயிறு நிறைய உணவு உண்டறியாத ஒருவனுக்கு, எதிர்காலத்தில் அந்த நிலை இருக்காது என்னும் நம்பிக்கை ஏற்

படும் தன்மையில், விளைவு இருக்குமானல், அதனை நினைக்கும் பொழுதே, அவன் உள்ளத்தில் இன்பம் பொங்கிவழிபத்தானே செய்யும்.

கழனியைப் பார்ப்பதும், இன்பக் கனவு காண்பதுமாக இருந்தான் அந்தப்பாட்டாளி—இன்னும் கதிர் முற்றிப்பழுக்க வில்லையே என்று கடவுளைக்கூட நொந்துகொண்டிருப்பான் அவன்! ஏன்? அவனுக்கன்றோ தெரியும் பசியின் கொடுமை! பாட்டாளியன்றோ அறிவான் பஞ்சத்தின் நிலைமை!

அறுவடை செய்யவேண்டிய காலமும் வந்து விட்டது. ஆண்டை வீட்டுக்குச் சென்ருன். அடிபணிந்து நின்ருன் அனுமதி கோரினன் அறுவடைக்கு. கிடைத்ததா?

* * *

பயிர்முளைத்திருக்கும் பாங்கினைக் கண்டு பாட்டாளி பரவசப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், பண்ணையாரின் சிந்தனையில் செந்தேள் தீண்டி விட்டது. "மனிதனைச் சோதரனுகப் பாவித்து நேசிப்பாய்' என்னும் இயேசுவின் போதனை அவர் உள்ளத்தில் இடம் பெற வில்லை. சுயநல-பேராசை அவருக்குச் சுகமளிக்கும் பாதையைக் காட்டிற்று.

"சுகுமாரா! பயிரைப்பார்த்தாயா? தலைசாய்ந்து கிடக்கும் கதிர்களைப் பார். இது உனக்கே சொந்தமானது. உன் மூதாதையர் உனக்கு விட்டுப்போன நிலத்தில் முளைத்தது இது. வேறுயாருக்கும் இல்லை இதில் பாத்யதை. பலனை அனுபவிக்கும் உரிமை உனக்கு மட்டுந்தான் உண்டு."

"முன்பின் பார்க்காதே. அறிவுக்கு இதில் வேலை இல்லை. பாட்டாளிக்குப் பரிவுகாட்ட முற்பட்டால் அவன் கொழுத்து விடுவான். பின்னர், ஆள்கிடைக்காது பாடுபட. அடங்கி ஒடுங்கி பதில்கூறமாட்டான். வரண்ட வயிற்றைக் காட்டினலும், விரட்டியடி அவனை."

"வீணனல் என்ன செய்துவிட முடியும்? உன் நிலை என்ன? அந்தப் பஞ்சையின் நிலை என்ன?"

"உன்னிடத்தில் பணம் குவிந்து கிடக்கிறது. பணத்துக்குள்ள சக்தி அந்தப் பஞ்சையின் கண்ணீருக்கு ஏது? அடிமையின் அழுகுரலைக் காட்டிலும், அதிகாரிகளின் செவிகளில் புகும் ஆற்றல் உனது பண ஒலிக்கு உண்டு. சிந்திக்காதே. பாட்டாளிக்கு புத்தி கற்பி! தயங்காதே, தலைகாய்ந்தவனைத் தூக்கி அடி! கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விடாதே! அவன் கொட்டத்தை ஒடுக்கு! அதட்டிப் பேசு அடங்கி விடுவான்!"

"கெஞ்சுவான், மிஞ்சு! அழுவான், அதட்டு! அடிபணிவான், அடிப்பேன் என்று கூறு! கோபிப்பான், குனிந்து கொடுக்காதே! பாய்வான், பணிந்து விடாதே! பார், பின்னர் அவன் படும் பாட்டை!"

இவ்வாறு அவருக்கு, போதித்தது சுயநலம்—பேராசை! இயேசுவின் போதனையிலும், இது அவருக்குப் பிடித்திருந்தது! செயலாற்ற முனைந்தார்.

அறுவடைக்கு அனுமதி கேட்டான் பண்ணையாள். 'நீ அறுக்கக் கூடாது' என்று அகம்பாவத்தோடு கூறினர் பண்ணையார். பதறினன் பஞ்சை. பார்த்துச் சீறினர் பண்ணையார். பேசவில்லை புலையன். வீடு திரும்பிவிட்டான். ஆனல், ஆனல்…………

* * *

வேலையற்றோர் பட்டாளம் முகாமிட்டிருக்கும் இந்த நாட்டில் ஆள் பஞ்சமா கிடைக்கப் போகிறது? வேறு கூலி ஆட்களைப் பிடித்தார், அறுவடை செய்வதற்கு. நல்ல நாளாகப் பார்த்து அறுவடை வேலையைத் துவங்கினர். பாட்டாளி, நீர்பாய்ச்சி நெல்விளைத்த பாட்டாளி, கழனியைக் கரம்பாக வைத்திராமல் அறுவடைச் செய்வதற்கு வாய்ப்பளித்த பாட்டாளி—கனத்த கதிர்காண கடும் வெய்யலையும் கருதாமல் உழைத்த உழைப்பாளி—ஆண்டையின் இந்த விபரீதப் போக்கினைக் கண்டான். நெஞ்சு திடுக்கிட்டான். கண்ணீர் பெருக்கினன். கோவென்று கதறினன். முகத்தில் மோதிக்கொண்டான். தரையிலே விழுந்து கடகடவெனப் புரண்டான். இன்பக்கனவெல்லாம் ஈடேறவில்லையே என்று அலறினன்.

இந்த நாட்டில் நீதி இல்லையா என்று கர்ஜித்தான். நேர்மையாளர்கள் இங்கு கிடையாதா என்று குமுறினன். இந்த அக்கிரமத்தை அடக்க அதிகாரிகளுக்கு ஆற்றல் அற்றுப் போயிற்ரு என்று அங்கலாய்த்தான். சட்டம் வெறும் சருகுதான? ஏழையைக் கண்டு எத்துக்காரர்கள் ஏளனம் செய்வது போலவே, சட்டமும் கேலி செய்கிறதா என்று ஆத்திரங் கொண்டான். இவ்வளவும் காற்றிலே கலந்தது. களைத்துப்போனன் பயிர்விளைத்த பண்ணையாள்.

முடிவில் பண்ணையாரை நெருங்கினன். பயிரிட்டது 'நான் — பாடுபட்டதுநான்—கதிர்கள் தலைசாயும் வரையில் காவலிருந்ததுநான்—அறுவடைக்கு மட்டும்வேறு ஆட்களா!?' என்ருன். நிலப்பிரபு, முகத்தை உயர்த்தி, புருவத்தை நெறித்து, பற்களை நர நர எனக்கடித்து நிலையை விளக்கினர். பண்ணையாளரின் இந்த உருவமாற்றத்தால், அறுவடைக்கு அமர்த்தப்பட்ட கூலி ஆட்களுக்கு, பாடுபட்டும் பலன் அனுபவிக்காத பஞ்சையிடத்தில் பச்சாதாபம் ஏற்படுவதற்கு பதில்—ஆத்திரம் உண்டாயிற்று. பாம்பிற்கு தன் பசியின் வேதனைதான் தெரியுமேயன்றி, தேரையின் உயிரின் உணர்வு எப்படித் தெரியும்?

'யாராவது அறுவடை செய்யட்டும், எனக்குக் கவலை இல்லை. நான் பாடுபட்டதற்கு-முன்னர் ஒப்பந்தம் செய்துகொண்டபடி-பலனில் பங்கு கொடுங்கள் — அதுவே போதும்' என்று பண்ணையாள் கேட்டான்.

'யாசகமல்ல; என் உழைப்புக்குப் பங்கு! இது புதிய பிரச்னை அல்ல; முன்னுள் தீர்த்துப் பேசிய முடிவு!' என்றும் பண்ணையாள், தனது உரிமையை வற்புறுத்தினன்.

ஆத்திரம் பொங்கினவராக, நிலத்துச் சொந்தக்காரர், அறுவடை செய்து கொண்டிருந்த ஆசாமிகளுக்கு ஆணை பிறப்பித்தார். அவ்வளவுதான். உழைத்த உழவனின் உடம்பில் தழும்புகள் ஏற்படும் வரையில், இந்தக் கூலிகள் அடித்துத் துன்புறுத்தினர். பண்ணையார் உள்ளம் பூரித்தார். பாட்டாளியும் மனமுடைந்தவனுய்த் தன் மண்குடிசைக்குத் திரும்பினன்.

* * *

பண்ணையாரின் இந்த அளவு மீறிய நடத்தை, உழவனின் உள்ளத்தில் புரட்சிப்புயலைத் தோன்றச் செய்துவிட்டது. மனிதப் பண்பை

(22-ம்பக்கம் பார்க்க)

தற்காலத் தர்மம்

'உழவனுக்கு நிலம் வேண்டும்'

'உணவு உற்பத்திப் பெருக வேண்டும்'

'உழைக்காதவர்கள் வாயில் மண் விழவேண்டும்'

'ஆடை நெய்து குவிக்க வேண்டும்.'

'ஆலை அரசுகளின் ஆதிக்கத்தைக் குலைத்தாக வேண்டும்.'

'அனைவருக்கும் நல்ல வீடு வேண்டும்.'

'இலவசக் கல்வி அளிக்க வேண்டும்.'

'அறியாமையை அடித்துத் துரத்த வேண்டும்.'

'செல்வம் பெருக வேண்டும் வாழ்வு வளமாக வேண்டும். வறுமையை விரட்டவேண்டும்.'

'வேற்றுமையைவிளைவிக்கும் வீண் தத்துவங்களையும், பக்திமார்க்கங்களையும், சாஸ்திரக் குப்பைகளையும் தீயில்போட்டு பொசுக்கியாக வேண்டும். ஒற்றுமைவேண்டும். அனைவரும் ஒன்றென்னும் எண்ணம் உறுதியாக வேண்டும்.'

'ஆண் உயர்வு பெண் தாழ்வு என்று பேசும் பேதமை விலகவேண்டும். பிறந்தவர் எவரும் ஒரு தாயின் மக்கள் என்று நினைக்கும் நல்லறிவு பரவல் வேண்டும்.'

'நான்குஜாதி பேசும் நலிந்த கொள்கை நாசமாகவேண்டும். தீண்டாமை தொலையவேண்டும். நல்ல மக்களாக நாட்டில் நாம் வாழ வேண்டும்.'

இவ்வாறு பேசுகிறவர்கள், இதற்காகத் தொண்டாற்றுகிறவர்கள், இத்தகைய உயர்ந்த சமுதாயத்தைக் காண விழைகிறவர்கள், எவராக இருந்தபோதிலும், எந்த நாட்டவராகப் பிறந்திருந்தாலும், மக்களின் போற்றுதலுக்கும் புகழுக்கும் அவர்கள் பாத்திரமானவர்களேயாவர்.

வேலை இல்லை, உணவு இல்லை, கட்டத் துணி இல்லை, குடி இருக்க குடிசை இல்லை என்பன போன்ற இல்லாமை அகவல் எங்கும்—எவர் வாயிலும் இருந்து கிளம்பிக் கொண்டிருக்கும் பொழுது, ஜாதி இருக்க வேண்டும், சனாதனம் தழைக்க வேண்டும், சதுர் மறை ஓதவேண்டும் எனச் சலசலப்பு செய்வோர்களை, சஞ்சலத்தைத் தெரிந்துகொள்ளாத கபோதிகள்—மக்கள் நலத்தை நாடாத நரிகள்—இவர்களைக் காண்பதும், இவர்கள் சொல் கேட்பதும், மேலும் நாட்டு மக்களுக்கு நலிவைத் தருமேயன்றி தகுந்த நிலையை உண்டாக்காது என்னும் முடிவிற்கே வருவர். நாடு சுடுகாடு ஆனாலும் இவர்கள் கவலை கொள்ளார். நல்ல மாற்றமும் கூறார். தாங்கள் வாழ்ந்தால் போதும், தரணியிலுள்ளோர் தங்களைத் துதித்துத் தோத்திரம் செய்வதே சிறப்பு—இதுவே தரும சாஸ்திரம் தரும்போதனை—இதனைப் பின்பற்றுவதே மாந்தர்தம் கடமை—என்று எங்கும் எப்பொழுதும் இவர்கள் பிதற்றிக்கொண்டுதான் இருப்பர். காட்டு முறையைநாட்டில் மீண்டும் நிலை நிறுத்த முயற்சிக்கும் நயவஞ்சகர்கள் இவர்கள்!

* * *

சென்னைக்கு வந்திருக்கிறார் காசி மடாதிபதி ஒருவர். அவர் பெயர் கரபாத்திர சுவாமி மகாராஜ் என்பது. சென்றவாரத்தில் மைலையிலுள்ள வடமொழிக் கல்லூரியில் சென்னை பத்திரிகை நிருபர்களைச் சந்தித்துச் சிலபல கூறியுள்ளார். வடமொழியில் அல்ல; அதன் மாற்றுப் பதிப்பான ஹிந்தியில்! அவர் கூறியவற்றின் சுருக்கம் 18ந் தேதிய ஹிந்து பத்திரிகையில் காணப்படுகிறது.

அவர் ஓர் மடாதிபதி. எனவே மக்கள் தெளிவு பெறுவது, காலத்துக்கு வேண்டிய கருத்து கொள்வது, பிறநாட்டு மக்கள் போன்று வாழ முயற்சிப்பது—போன்ற கொள்கைகள், அவருக்கு வெறுப்பளிப்பதாக, வேதனையை மூட்டுவதாக, அதர்மமானதாக, சாஸ்திரங்களுக்கு விரோதமானதாகத் தெரிவதிலே ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால், இந்தப் பத்திரிகை நிருபர்களுக்கு, மக்களின்சுகவாழ்வும், அதற்காக எடுத்துக்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் எட்டியாக வேம்பாக இருக்க வேண்டியதுமில்லை; எதற்கும் ஆதாரம் உண்டா இல்லையா என்று பார்க்க ஏடு தேட வேண்டிய அவசியமுமில்லை! இன்று மக்களுக்குள்ள எந்தக் கேட்டினை மாற்றுவதற்கு இந்த நிருபர்களுக்கும், இவர்களை அமர்த்திக்கொண்டுள்ள பத்திரிகை ஆசிரியர்களுக்கும் வழிவகை தெரியாமல் இருக்கிறது, புதுவழி தெரிந்து கொள்வதற்காக இந்தகாரபாத்திரத்தினிடம் போயினர் என்னும் நியாயமான கேள்வி எவருக்கும் பிறக்கும்.

* * *

இந்தியப் பிரதமர் இங்கிலாந்து

(21-ம் பக்கம் பார்க்க)

திராவிட மாநாடு

வாழ்த்து

கண்ணிகள்

திராவிட மாநாடு வாழ்க
செல்வத் திருநாடு (திரா)

விரோதியென்றாலும் விருந்திடத்தேடும்
புராதனமாகப் புகழ் பெற்ற நாடு (திரா)

செந்தமிழின் வழி வந்தது
தெலுங்கொடு கன்னடமென்பதும்
சொந்தமிகும் மலை யாளமும் சேர்ந்து
சொற்கள் வழங்கிடும் விற்பன்னரோங்கிடும் (திரா)

வாழ்வில் மாந்தர் தவறாவிதம் வள்ளுவன்
மாமறை தந்த தென்னாடு
காவலனும் இளங் கோவின் சிலப்பதி
காரத்தினாலே சிறப்புற்ற எங்கள் (திரா)

மாசில்லாமலே சுதேசக் கப்பல் தன்னை ஓட்டினான் தங்கள்
மரபுயர்ந்ததென்று வலிமை கொண்டு நிலைநாட்டினான்
பேசும் வாய்மை தவறாத சிதம்பரம்
பிள்ளையாங்கருணை வள்ளலார் வளர்ந்த (திரா)

தேவைப்படும் தேச சேவைக்கும் மனம்
தித்திக்கவும் நன்மை செய்விக்கும் (இன்று தேவைப்)
நாவலர் பாரதிதாசன் என்ற பெயர்
நாட்டுங் கனகசுப்பு ரத்தினம் பிறந்த (திரா)

சொல்லில் உயர்வென்று முரசு கொட்டும்
தெள்ளு தமிழ்ச்சுவை யரசு
கல்விப்பெருங்கடலாகிய எங்களின்
கல்யாண சுந்தரக் கலைவாணரைத் தந்த (திரா)

பழமையான மூடப் பழக்க வழக்கத்தில்
பாழ்பட்ட நெஞ்சர்க்குப் புரியார்
படித்துணர்ந்து பகுத்தறிவுக் கட்சி தன்னை
பரவச் செய்து வரும் நெறியார்
இழிவை நீக்கும் ஈவெ ராமசாமி என்ற
எங்கள் தந்தை உண்மைப் பெரியார்
இன்பமெய்து அவரெண்ணம் வாழ்க என்றும்
இயக்கம் இயல்புமேவுந் தமிழ்
இயக்கம் வாழ்க எங்கள் (திரா)

இது, உடுமலை நாராயணக்கவி அவர்களால் இயற்றப் பெற்று, ஈரோடு திராவிடர் கழகத் தனிமாகாண மாநாட்டில் நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களால் பாடப்பெற்றது.

திராவிட நாடு

மலர் 7] [இதழ் 20

காஞ்சி] 31—10—48 [ஞாயிறு

ஈரோடு மாநாடு

காட்சியும்—கருத்தும்

சோளக்கொல்லையில், ஓர் பெரும் பந்தல்—அதிலே இருபக்கமும் பெரும்பகுதியிலே, ஓலை வேயப்படவில்லை—ஓலைக்கட்டுகள் கீழேகிடந்தன. தரையோ, சதுப்புநிலமாகிவிடும் நிலை! வானமோ இருண்டு கிடந்தது—இடிமுழக்கம், மிரட்டிய வண்ணம்! மழைபெய்வதும், ஓய்வெடுப்பதும், மீண்டும் வருவதும், வளருவதுமாக இருந்தது; தேதியோ 22!!

நாளை மாநாடு—இன்றிரவுதான், பந்தல்வேலை பூர்த்தியாக முடிந்தது—பண்டங்களைச் சேகரித்தும் பராமரித்தும் வந்தனர், பலநாட்களாக, 'பாழும்மழை' வந்து, பட்டபாடு அத்தனையையும், விழுங்கி விடுமோ என்ற பயம், மாநாட்டுச் செயற்குழுவினரைப் பிடித்தாட்டியபடி இருந்தது, எனினும் செயற்குழு, புயலையும் பொருட்படுத்தப் போவதில்லை என்ற உறுதியுடன் இருந்தது—எப்படியும் மாநாட்டை நடத்தியே தீருவது, எவ்வளவு இடையூறுகள், இயற்கைக் கோளாறுகள் ஏற்படினும் சரி, மாநாடு நடந்தே தீரவேண்டும் என்ற உறுதியுடன் பணிபுரிந்தனர் செயற்குழுவினர்.

பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமி, கோவை மாவட்டத்தை ஒரு சுற்றுச்சுற்றிவந்தார், கிராமப்புறங்களில் உள்ள இயக்கத் தோழர்களைக்கண்டு பேசியும் ஆதரவு திரட்டியும், ஆர்வமூட்டியும் வந்தார். அவருக்குத் துணைநின்றார், தோழர் சம்பத்.

இருவரும், சோளக்கஞ்சி குடித்தவர்கள், சிறையில், அறப்போர் காரணமாக! அதிலேதான் என்ன இனிப்பு கண்டனரோ அக்காளைகள், மீண்டும் விரைவிலே கஞ்சிக்கலயத்தைக் காணவேண்டுமென்ற துடிப்புடன், மாநாட்டு வேலைகளைத் துரிதப்படுத்திய வண்ணம் இருந்தனர். தூறல் மழையாவதும், மழைதூறலாவதும், வெண்மேகம் கருநிறம் கொள்வதும், இடிஒலி கிளம்புவதும், மின்வெட்டுகள் தோன்றுவதுமாக, இருந்தது. சோளக்கொல்லை, சேறு நிரம்பியதாகிவிடுமோ என்ற கவலை தரும் அளவுக்குக் காலநிலை இருந்தது. எனினும் மாநாட்டுக்கான வேலைகளை மட்டற்ற ஆர்வத்துடன் கவனித்தவண்ணம் இருந்தனர்.

பல ஊர்களிலேயும் திராவிடர்கழகத் தோழர்கள், கவலையும் கலக்கமும் கொண்டவர்களாகவே இருந்திருப்பர்—ஏனெனில் எங்கும் மழை!

இந்தக்கவலை மடிந்து, களிப்பு மலருவது போல, 23-ந்தேதி காலை மலர்ந்தது, கதிரொளி மேகத்தை விரட்டி அடித்தழித்தது. இரவெல்லாம், அவசர அவசரமாக வேலை செய்து, பந்தலைச் சரி செய்தனர்—அலங்கார அமைப்புகளும் ஏற்பட்டன, வளைவுகள், தோரணங்கள், காட்சிதந்தன; முகப்புவாயல் அலங்காரமும் முடிந்தது, எல்லாம் அன்றிரவு நடந்தேறின. இந்த அரும் பணியில், தூத்துக்குடி K. V. K. சாமியும் அவர்தம் நண்பர்களும் பெரும்பங்கு கொண்டனர்.

23-ந்தேதி, விடிவதற்குள்ளாகவே ஈரோடு எங்கும் திராவிடத் தோழர்கள், பவனிவரலாயினர்—மணி ஆக ஆக கூட்டம் வளர்ந்தவண்ணம் இருந்தது.

காலையில், முக்கியமான நிகழ்ச்சி, ஊர்வலம், ஈரோடு வாசிகள் அது போல் என்றுமே கண்டதில்லை என்று வியந்து கூறக்கூடிய முறையிலே ஊர்வலம் இருந்தது. மூன்று மணிநேரம்! நகரில் எல்லாப்பகுதிகளிலும் ஊர்வலம்! பிற்பகல் மாநாட்டு நிகழ்ச்சி துவக்கப்பட்டது.

எல்லாருடைய ஆர்வமும் கரைபுரண்டோடிற்று, அதுபோது, நகைச்சுவை அரசு, N. S. கிருஷ்ணன் அவர்கள், புன்னகை தவழும் முகத்துடன், கூப்பியகரத்துடன், மாநாட்டுக்குவந்ததால்.

திராவிடர்கழக மாகாண மாநாட்டிலே முதல் நிகழ்ச்சியாக தோழர் N. S. கிருஷ்ணன் அவர்களின், நாட்டு வாழ்த்து இசை அமைந்திருந்தது. பொருள் செறிந்த அந்த வாழ்த்துப்பாடலை ஆக்கியவர், உடுமலை நாராயணக்கவி, சீர்திருத்த ஆர்வமிக்க, கொங்கு நாட்டுக்கிழவர்—பெரியாரின் இயக்கக்கொள்கைகளைத் தமது பாடல்கள் மூலம், படக்காட்சி உலகில் பரப்பும் பணி புரிபவர்.

திராவிடநாட்டின் சீர்சிறப்பினை விளக்கிடும் அந்த வாழ்த்துப்பாடலை, நமது நகைச்சுவை அரசர், பின்னணி வாத்யத்துடன், சுவைபடப் பாடி, மாநாட்டினருக்கு மகிழ்ச்சியும் எழுச்சியும் ஊட்டினார்.

வெற்றிக்களையுடன், விளங்கிய தோழியர் இந்திராணி பாலசுப்ரமணியம் அம்மையார், "இருண்ட வாழ்விலே இருக்கும், திராவிடர்களாகிய நாம் ஈடேறுவதற்கான அறிகுறி தெளிவாகத் தெரிகிறது; கருப்புக்கொடியின் நடுவே உள்ள சிகப்பு வட்டம் இந்தச் சேதியைத்தான் நமக்களிக்கிறது. நமது நாட்டு விடுதலைப்போர், வெற்றிகரமாக நடந்தே தீரும்" என்ற உறுதியும் உற்சாகமும் ஊட்டினார், தமது சுவைமிக்க சொற்பொழிவில்.

அம்மையார், திராவிடர்கழகக் கொடியை ஏற்றுவித்தார்கள்.

குத்தூசி—குத்தூசி! — என்று குதூகலத்துடன் மாநாட்டினர் கூவினர், தோழர் குருசாமி, மாநாட்டைத் திறந்துவைக்கும் பணியாற்ற எழுந்ததும்—அவர் பேசி முடித்ததும், குத்தூசியா, குருசாமி, அல்ல, அல்ல, ஆரியத்தின் குடலை வெளியே கொண்டுவரும் கூர்மையான ஈட்டி!—என்று மாநாட்டினர் வியந்துரைத்தனர்—அவ்விதமாக அமைந்திருந்தது அவருரை. ஆட்சியாளருக்கு அவர் இடித்திடித்துரைத்தார், திராவிடர் கழகத்தின் திட்டங்களை, கரை புரண்டோடும் இந்த ஆர்வத்தைக் கொண்டு, காங்கிரஸ்கட்சியை அடுத்த தேர்தலின்போது முறியடித்துக் காட்ட முடியும், என்று முழக்கமிட்டார். அவினாசியாரின்பிடிவாதத்தின் போக்கையும், ஓமந்தூராரின் வீண் வீம்பையும், நண்பர்குருசாமி, எள்ளி நகையாடினார். ஆட்சியாளர்களின் எந்தச் செயலாவது, மக்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதாக இருக்கிறதா என்று கேட்டார். அறப்போரின் சரிதையை விளக்கிக் கூறி ஆர்வமூட்டினார். எழுத்துக்கு, 2000 கேட்டனரே சர்க்கார், இந்தப் பேச்சுக்கு 10,000 கேட்பரோ—என்று திராவிடர்கள்,

பெருமையுடன் பேசிக்கொண்டனர், அவருரை கேட்டு.

பெத்தம்பாளையம்தோழர் பழனிச்சாமியும், தோழர் சம்பத்தும் மாநாட்டினரை வரவேற்றதுடன், தலைவரைப் பிரேரேபித்தனர். அதனைவழிமொழிந்தனர், தோழர்கள் சித்தையன், ஜீவரத்தினம், நீலமேகம், பெரியார் ஆகியோர், தலைவரின் முன்னுரைக்குப் பிறகு, நண்பர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் காந்தியார் படத்திறப்பு விழாச் சொற்பொழிவாற்றியதுடன், அதற்கென அமைக்கப்பட்ட அருங் கவிதையையும் பாடினார்.

இருண்டது வானம்—இடி முழக்கம் கேட்கலாயிற்று—மழை விரைந்தது—எனவே மாநாட்டு நிகழ்ச்சி, அந்த அளவோடு முடிந்தது.

இடியை விரட்டலானார் நண்பர் M R. ராதா! மழையைப் பொருட்படுத்தாமல், அன்றிரவு நடைபெற வேண்டிய நாடகத்துக்கான, காட்சி அமைப்பு வேலைகளைச்செய்யலானார். ‘போர் வாள்’ உண்டல்லவா அவரிடம், மழைக்கும் கிலிதானே, அதனால், விடைபெற்றுக்கொண்டது—விண் மீன்கள் சிரித்தபடி வந்தன, நாடகத்தைக் காண.

‘மகாத்மாவின் தொண்டன்’ எனும் நாடகம், நடைபெற்றது—மக்களின் பெருங்கூட்டம், மகிழ்ச்சிப் பெருக்கிலாழ்ந்தது. தோழர் கே. கே. நீலமேகம் தலைமை வகித்தார். அன்றிரவு நாடகத்தின்போது, நடுநிசிக்கு மேல், சிறுதூறல் இருந்ததாக, மறுநாள் காலையிலே, மக்கள் பேசிக்கொண்டனர்! அவ்வளவு ஆழ்ந்திருந்தனர், நாடக ஆர்வத்தில்! கீழே தரை நனைந்திருந்தது—மழை வாடைக்காற்று வீசியபடி இருந்தது—எனினும் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்டமக்கள், நாடகம் முடியும் வரை, அந்த இடத்தில் ஆர்வத்துடன் வீற்றிருந்தனர்.—டார்னிங் சீன்கள் காணவா—டான்சுகள், பார்க்கவா — டபுள் ஹார்மோனியம், போட்டா போட்டி தபேலா, ஆகியவற்றுக்காகவா, கூடினர் — இல்லை! இல்லை!! அறிவுச் சுடரொளி காண! பகுத்தறிவு வெடிகுண்டுகள் வெடித்திடுவதைக் காண! சுயமரியாதைக் கருத்து மிகுந்த, நாடகத்திலே, மக்கள், தம்மை மறந்து இலயித்திருந்தனர்.

மறுநாள் காலை, பந்தலில் ஒரு பகுதி, கழிகள் மட்டும் கொண்டதாகக் காட்சி அளித்தது—ஓலைகளை முன்னாள் இரவு, நனைந்துவிடுங்க தரையிலே விரித்து அமர்ந்தனர், மக்கள் என்பது தெரிந்தது. மீண்டும் அவசர அவசரமாகப் பந்தலை அமைக்க முயன்றனர்-முழு வெற்றி இல்லை—ஆனால் அதற்காக மாநாட்டுக் காரியம் தாமதிக்கப்படவில்லை. நிகழ்ச்சிகள் தொடங்கின.

படத்திறப்பு விழாக்கள் நடைபெற்றன — சொற்பொழிவுகள் — உண்மையாகவே படத்திறப்பு விழாக்களல்ல—ஒரு படமும் அங்கு கிடையாது! ஆனால் எல்லோருடைய படங்களையும் மனக்கண்ணால் காண முடிந்தது!

“சமதர்மத்துக்கு வித்தூன்றியவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்! பாட்டாளிகளின் விடுதலைக்கான போரை முதன் முதலில், தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலேயே துவக்கிவைத்த பெருமை அவரையே சார்ந்ததாகும். ஏகாதிபத்யத்தாலும், முதலாளித்வத்தாலும் சிங்காரவேலர் பலமாகத் தாக்கப்பட்டார் — பல ஆண்டுகள் சிறையிலே கிடந்து வாடினார், ஆனால், அவருடைய பணியின் காரணமாக, சமதர்ம உணர்ச்சி மலர்ந்தது. நாட்டு விடுதலைக்குப் போரிடுவதாகக் கூறிக்கொண்டு, பல தலைவர்கள் வேலை செய்தனர், சுயராஜ்யம், சுயராஜ்யம் என்ற சுலோகத்தை ஒலித்துக்கொண்டு. நமது சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்தான், தைரியமாகவும் ஆணித்திறமாகவும் கேட்டார், சுயராஜ்யம் யாருக்கு? என்று. பாட்டாளிகளின்ராஜ்யமாக இருக்கவேண்டும் என்று பலமாக வாதடினார் — அதற்காகவே அவர் கடைசி வரை போராடினார். இந்தியைப் பற்றியும்அவர் தமதுகருத்தை வெளியிட்டிருந்தார்-கட்டாய இந்தி கூடாது என்பதே அவர் கருத்து. சுயமரியாதைக் கோட்பாட்டிலே, அவருக்கு மிகுந்த பற்று உண்டு—நாட்டு மக்களின் அஞ்ஞானத்தைப் போக்கி, அறிவுத் தெளிவுள்ள அருமையான நூற்களை வெளியிட்டார். விஞ்ஞானத்தின் மேம்பாட்டை விளக்கினார். அந்த மாவீரனை, நாம் மறக்க மாட்டோம்.” என்று பேசினார் நண்பர் என். வி. நடராஜன்.

வெள்ளை ஆடை அணிந்த வேந்தன் தியாகராயரின்சிறப்பினை விளக்கிப் பேசினார், தோழர் T. P. வேதாசலம், “ஜனநாயக ஆட்சிமுறையிலே இருவகை—ஒன்று பார்லிமெண்டரி முறை, மற்றொன்று ஒரே கட்சி ஆதிக்கம் வகிக்கும் முறை—பின்னது தீமை தருவது, ஆனால் காங்கிரசோ இதனைத்தான் அமைக்க முயற்சிக்கிறது. தியாகராயர் உண்மையான ஜனநாயகத்துக்காகப். பாடுபட்டார் —சமுதாயத்தின் சீர்குலைவுக்குக் காரணமான பேதங்களை ஒழித்தாக வேண்டும் என்பது அவருடைய பெருநோக்கம்—ஒரு குலத்தாரிடம் சகலதுறைகளும், சகல அதிகாரங்களும் சிக்கிக்கொள்வது, நியாயமுமல்ல, நல்லதும் ஏற்படாது அதனால், என்பதை விளக்கினார். அவர் காலத்திலே தூவப்பட்ட வித்தே இன்று இவ்வளவு பிரம்மாண்டமான காட்சியாகக் காட்சி அளிக்கிறது. தியாகராயர், சட்டவரம்புக்கு உட்பட்ட கிளர்ச்சி செய்வதிலேதான், நம்பிக்கை கொண்டவர். அவருடைய அரும்பணி இன்று நமக்கு, புதிய அந்தஸ்தைக் கொடுத்திருக்கிறது. அவர் காலத்தில் அரும்பிய ஜனநாயக மலரை, இன்றைய ஆட்சியாளர்கள், தங்கள் ஆதிக்கத்தால் நசுக்கப்பார்க்கின்றனர். இன்றைய ஆட்சியாளர்களுக்கு, ஜனநாயக முறைகளைப் பற்றிய விளக்கமே தெரிவதில்லை—படிக்கவில்லை—படிக்கத் தெரியாதவர்களல்ல—படிக்கநேரமே இல்லை அவர்களுக்கு. ஒரு மூன்று மாத காலம் ‘லீவ்’ எடுத்துக்கொண்டாவது, படித்துப் பக்குவம் பெற வேண்டும்”—என்று நகைச்சுவை ததும்ப, நண்பர், வேதாசலம் பேசினார்.

“இருபத்திநாலு பேர் மட்டுமே ஏறிச் செல்லலாம் இந்த மோடார் பஸ்ஸில், அதற்குமேல் ஏறினால், வண்டிக்கும் கேடு, ஏறுபவர்களுக்கும் தொல்லை, என்று, விஷயமறிந்த அதிகாரிகள் விதிஏற்படுத்தி இருக்க, இருபத்து எட்டுப்பேரை ஏற்றிக்கொண்டு அந்த மோடார் சென்றால் போலிஸ்காரர், அதை நிறுத்தி, புத்திகூறி, தண்டிக்கமாட்டாரா, அதுபோலத்தான், சிறு பிள்ளைகளுக்கு, மூன்றுமொழிகளைப் போதிப்பது அவர்களால் தாங்கக் கூடியதல்ல, என்று மொழி நிபுணர்களும், கல்வித்துறையில்வல்லவர்களும் கூறியிருக்க, அவர்களின் நல்வழியை நாடாது, இந்தச் சர்க்கார், மூன்று மொழிகளை இளம் பிள்ளைகளுக்குத் திணிக்கத்துணிவதால், நாம், போலீசார் போல், அவர்களைத் தடுத்துத்

கூறுகிறோம், ஆகாதய்யா இந்த அக்ரமம் என்று. எனவே நாம்தான் சட்டத்தை நிலைநாட்டுகிறோம், இதற்காக, நம்மையே தண்டிப்பதா!—" என்று கேட்டு மக்களைச் சிரிக்க வைத்தார் விருதுநகர் தோழர் ஆசைத்தம்பி—களிப்பூட்டும் பேச்சைப் பேசிக்கொண்டே வந்தவர், கடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது உயிர் இழந்த தாலமுத்து, நடராஜன் ஆகியவர் பற்றி உருக்கமாகப் பேசி, மக்களின் கண்களையும் கசியச் செய்தார். சர்க்காருக்கு விளக்கம் கலந்த எச்சரிக்கையும் விடுத்தார். "திராவிடர்கழகம், பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டில்லை—பலம் இல்லாததால் அல்ல, பாதகமானது, அறிவீனமானது அத்திட்டம் என்பதால். பலாத்காரச் செயல்களைச் செய்துவரும் கட்சியினருடன் கூடிக்கொண்டு நாட்டிலே கலாம் விளைவிக்கவும் திராவிடர் கழகம் முற்படவில்லை—அறப்போரே தொடுக்கிறது—கஷ்ட நஷ்டத்தைத் தாங்கிக்கொள்ள முன் வந்திருக்கிறது—இந்தச் சிறந்த பண்பு, ஆட்சியாளர்களின் சிந்தனைக்கு வேலை தர வேண்டும்" என்று பேசினார். செல்வம் படத்திறப்பு விழா சொற்பொழிவாற்றினார், தோழர் சித்தய்யன்.

"பட்டம் இல்லை, பதவி இல்லை, தேர்தலும் இல்லை, என்று சேலம் மாநாட்டின் போது தெரிந்து கொண்டதும், நமது கட்சியைவிட்டுச் செல்வவான்கள் ஓடி விட்டனர்—இனி இக்கட்சியால் இலாபம் இல்லை என்று. கொள்கைப் பற்றும், கஷ்டநஷ்டம் ஏற்கும் தூய்மையுள்ளமும், கொண்டவர்கள் மட்டுமே, கட்சியில் இருக்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டது. திராவிடர்கழகத்தில் சேர்ந்து பணிபுரிவதென்றால், சர்க்காரின் சீற்றமும், சனாதனியின் கோபமும், காங்கிரசின் எதிர்ப்பும், வந்து தாக்கும், வாழ்க்கையைக் கூட நொருக்கிவிடும், என்ற நிலைமை ஏற்பட்டது. அப்படிப்பட்ட நிலையிலும் நேரத்திலும், திராவிடர் கழகத்திலே வந்து சேர்ந்து, ஆர்வத்துடன் பணிபுரியலானார், நம்மைவிட்டுப் பிரிந்த, நண்பர் அர்ஜுனன், கொங்குநாட்டுப் பெருங்குடி உதித்த சீமான். சொகுசான வாழ்வை வெறுத்து, உல்லாச வேலைகளைமறந்து, திராவிடர்கழகப் பணியிலே ஈடுபடலானார். அவருடைய பொன்னிற மேனியையும், கனிவுவழியும் கண்களையும், அரும்பு மீசையையும், ஆர்வமும் அன்பும் ததும்பும் உரையையும் கண்டும், கேட்டும், திராவிட இளைஞர்கள், எழுச்சி பெற்றனர். இந்தப் பகுதியிலே, முடிசூடா மன்னராக விளங்கும் நிலை, பழையகோட்டை பட்டக்காரருக்கு—அவருடைய திருமகனார், திராவிடர்கழகத்திலே சேர்ந்து, நாட்டைத் திருத்த, சமுகத்தைத் திருத்தப் பாடுபட்டார், என்றால், அவருடைய பெருங்குணத்தை யார்தான் பாராட்டாமலிருக்க முடியும்" என்று பேசி, தோழர் C D. T அரசு அர்ஜுனன் அவர்களின் திருஉருவை மாநாட்டினரின் மனக்கண்முன் நிறுத்திக் காட்டினார். மக்கள் சோகத்திலாழ்ந்தனர், அர்ஜுனனின் நினைவின் காரணமாக—மெல்லிய குரலில் கூறிக்கொண்டனர், நாம் கூடியுள்ள இந்த மாநாட்டுப்பந்தலுக்கு, அந்த மாவீரனின் பெயர்தான் சூட்டப்பட்டிருக்கிறது என்று. பேராசிரியர் சுந்தரனார் படத்தைத் தோழர் நெடுஞ்செழியன் திறக்கும் முறையில் சொற்பொழிவாற்றினார்.

ஒரு விளக்கம்

அன்பர் பலர், இந்தத் தனி மாநாட்டுக்கு நான் தலைமை வகித்ததால், மாகாண மாநாட்டுக்குத் தலைமை வகிப்பவர், நிர்வாகத் தலைவராகிவிடுகிற முறைப்படி, இனி, நான், திராவிடர்கழக நிர்வாகத் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதாகக் கருதி, இருப்பதாகத் தெரிகிறது. இம்மாநாடு, ஒரு குறிப்பிட்ட பிரச்னைக்காக—அதாவது அறப்போர் திட்டத்துக்காக — கூட்டப்பட்டது. எனவே மாகாண மாநாடு என்ற போதிலும், இதன் மூலம், அறப்போர், துவக்கப்படுவதை அறிவிப்பதுதான், முக்கியமான சம்பவமே தவிர, தலைமைப் பதவி பற்றிய பிரச்னையே இதில் எழவில்லை. எப்போதும் போல, திராவிடர்கழகத்துக்கு நமது பெரியார்தான்; நிரந்தரத் தலைவர்—நிர்வாகத் தலைவர், தோழர் T P. வேதாசலம் அவர்கள்தான்.

அண்ணாதுரை.

அழகிரி வந்திருக்கிறாரா—அழகிரி வந்துவிட்டாரா?—என்று ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்த மக்களின் மனம் உருகிவிட்டது, எலும்புந் தோலுமாக, நிற்கவும் சக்தியற்ற நிலையிலே, அந்த அஞ்சாநெஞ்சன் பேச எழுந்ததும். ஒலி பெருக்கியின் முன்பு அவர் நின்று பேசும் காட்சியே, ஒரு படைத் தலைவன், கோட்டை மேல்முகப்பில் நின்றுகொண்டு கீழே அணிவகுத்து நிற்கும் படைகளுக்கு, வீர உரை கூறும், பாணியாக இருக்கும். அப்படிப்பட்ட அழகிரி, அன்று, இரண்டு நிமிஷங்களுக்குமேல் நிற்க முடியவில்லை — கால் உதற, கரம் உதற, குரலில் துக்கம் கப்பிக்கொள்ள, நின்றார் — பேசலானார், பிறகு, நிற்கவே முடியாத நிலையில், மேடைமீது உட்கார்ந்துகொண்டார். அழகிரியை இந்தக் கோலத்திலா நாம் காணவேண்டும்! என் உடல் துரும்பாகிவிட்டது—இந்நிலை இவருக்கு இருப்பதுபற்றி நமக்கு இதுநாள்வரை தெரியாதே! என்று எண்ணி ஏங்கிய மக்களை, அழவே வைத்துவிட்டார், தமது பேச்சினால்.

"தோழர்களே! இந்த மாநாட்டுக்குப் பிறகு சிறை செல்ல வேண்டி நேரிடும், எனவே அவ்வகையில் இது கடைசி மாநாடு என்றெல்லாம் பத்திரிகையிலே பார்த்தேன். என்னைப் பொறுத்தவரையில், என் உடல் நிலையைக் கவனித்தால், எனக்கு இதுவே கடைசி மாநாடாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன். என் தலைவனுக்கு என் இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளவே, இன்று வந்தேன்" என்றார், தாங்கொணாத் துயரம் தாக்கிற்று, கூடியிருந்த அனைவரையும். தன் நிலை கண்டு மக்கள் தத்தளிப்பது அறிந்து, "என் உடல் நிலை மிகவும் மோசமாகி இருக்கிறது — நோயினால் — படுத்த படுக்கையாக இருந்துவந்தேன்—இனி, என் உடல் தேறும் வரையில் இயக்கப் பணி புரிவதிலிருந்து விலகித்தான் இருந்தாக வேண்டும்" என்று கூறிவிட்டு, அந்த மெலிந்து நலிவுற்ற நிலையிலும், வீரத்தைச் சற்றுவது விட்டுக்கொடுப்பவனல்ல நான் என்பதை விளக்கும் விதத்திலே, இன்றைய ஆட்சிப் போக்கைக் கண்டித்துப் பேசினார்; அன்னை நாகம்மையாரின் அருங்குணத்தை விவரித்துப் பேசும் போது, அவர் மனதிலே, "இந்த நலிவுற்ற நிலையில், என் அன்னை இருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும்" என்ற எண்ணம் ஊசலாடிக் கொண்டிருந்தது நன்கு விளங்

நிற்கும் அவர் சொல், காதிலே விழுந்ததே தவிர, விளக்கமாக மக்களுக்கு அதனைப் புரிந்துகொள்ள முடியவில்லை—சொல்லிலே விளக்க முறை இல்லாததால் அல்ல—மக்களின் சிந்தனை எல்லாம், அவருடைய நிலைமையைப் பற்றியதாகவே இருந்துவிட்ட காரணத்தால்.

அறப்போரிலே, நண்பர் அழகிரி, தலைவருடன் சிறை புகுந்தபோதே, அவருடைய உடல் நலம் கெட்டிருந்தது—ஓயாத இருமலால் தாக்குண்டு கிடந்தார். அவருடைய நிலை கண்டு, பதறினர் மக்கள்—அவருடைய கண்களிலேயோ, அந்த மாபெரும் கூட்டத்தைக் கண்டதும் ஓர் பூரிப்பு! இருக்கத்தானே செய்யும்! தலைவருடன், நாலைந்து பேர்களில் ஒருவராக, நாடு சுற்றி, புரட்சிநாதத்தைக் கிளப்பி, கல்லடியும் சொல்லடியும் பட்டவரல்லவா! இந்த விதண்டாவாதிகளுடன் யார் பேச முடியும்!—என்று பொதுமக்கள் பேசியதை, ஏசியதைக் கேட்டுக் கலங்காமல் பணி புரிந்தவர். சில நூறு பேர் கூடுவதும் கஷ்டம் என்ற அளவிலே துவக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம், இன்று அரை இலட்சம் பேர் கொண்ட மாநாட்டினை நடத்தக் கண்டால், அவர் உள்ளம் பூரிக்காமலிருக்க முடியுமா! வெற்றி! வெற்றி! என்று அவர் செவியிலே காலம் ஒலித்தது—அவர் நிலைமையைக் கண்ட மக்கள், வெற்றிபெற்றுத் தந்த வீரனுக்கா இந்நிலை—வேதனை—வேதனை—என்று மெள்ளக் கூறினர், சோகத்துடன்.

அந்தச் சோகத்தை மட்டுமல்ல, திராவிடப் பெருங்குடி மக்களின் சோகத்தையே இதோ போக்க நான் வந்திருக்கிறேன், என்று கூறுவது போல, திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைக்க முன்வந்தார், திரு. வி. கலியாணசுந்தரனார், அழகிரியின் நிலை கண்டு, புண்பட்ட உள்ளங்களைத் தமது தமிழ்த் தென்றலால், இன்பமூட்டலானார்.

திரு. வி. க. — பெரியார் — இரு துருவங்கள்!!—ஆம்!— பலகாலமாக இருந்துவந்த நிலை அது.

“நாயக்கரே! உமது தீர்மானத்தை நான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. மாநாட்டிலே கொண்டுவர அனுமதிக்கப் போவதில்லை—தள்ளிவிடுகிறேன்”

“முதலியாரே! பார்க்கிறேன் உம்மையும் உமது காங்கிரசையும் ஒரு கை! வகுப்புவாரி முறையை நாடு ஏற்றுக்கொள்ளச் செய்கிறேன் பாரும்.”

பெரியார், காங்கிரசைவிட்டு விலகிய, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, காஞ்சிபுரம் மாநாட்டிலே, இப்படி உரையாடல்!

பிறகு, இரு துருவங்களாயினர்! சைவமெய்யன்பர் படையுடன் சாந்தக்காந்திப்படையும் சேர்ந்தது, திரு வி. க. வின் பக்கம்; பெரியாரின் பெரும் படையுடன் மோதிற்று.

தெள்ளு தமிழ்நடை, திரு. வி. க. வுக்கு, ஆயுதம்.

கேட்போரைக் கலங்கவைக்கும் கர்ஜனை பெரியாருக்கு ஆயுதம். நாவலரிடம் நவசக்தி-பெரியாரிடம் குடிஅரசு! தமிழகத்திலே, இந்த இரு சக்திகளும் மோதிக்கொண்டதால் உண்டான விளைவுகள் பலப்பல.

இந்த இருதுருவங்கள், ஒன்று கூடுவதேது—தென்றலும் புயலும் ஒன்றுசேர முடியாதன்றோ, என்று வஞ்சக நினைப்பினர் எண்ணினர்.

அன்று அவ்விருவரையும் ஒன்று சேரக்கண்டனர் மக்கள், சிலபல நாட்களாகவே காணுகின்றனர் — கடலூரில், வேறு பலஇடங்களில் இருவரும் கூடினர், மாநாடுகளில், ஆனால் அன்று, உண்மையிலேயே ஒன்றுகூடி நின்றனர்; என்பது முழுப் பொருளுடையதாயிற்று. திராவிடர் கழகத்தலைவர் பெரியாரின் அழைப்பின்படி, திராவிடநாட்டுப் படத்தைத் திறந்துவைக்கும்சொற்பொழிவாற்றினார், திரு. வி. க.

ஆரியமாவது திராவிடமாவது, அப்படி ஒன்றும் இருந்தது கிடையாது என்று வாய்ப்பறை அடித்து வருகிறார்களே, அவர்கள் வாய் அடைத்துப் போகுமாறு, பாலி—பிராகிருத மொழி இலக்கியங்களிலும் ‘திராவிடம்’ என்னும் சொல்பற்றியும், அதற்குரித்தான மக்களின் பண்புபற்றியும் பேசப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டினார். திராவிடம் குறித்து வங்கக்கவிஞர் தாகூர் ‘ஜனகணமண’ வில் சிறப்பித்துக் கூறி இருப்பதையும் எடுத்து விளக்கினார்.

தீந்தமிழுக்கு வந்துள்ள கேட்டினைப் போக்குவது ஒன்றையே குறியாகக் கொண்டு திராவிடர் கழகத்தில் கலந்து தொண்டாற்றிய தாம் இனித் திராவிடநாடு பெறவும் அதனைச் சமதர்ம நாடாக அமைக்கவும் முழுமனதுடன் பணிபுரிய உறுதிகொண்டு விட்டதாக அவர் கூறியபொழுது கூடி இருந்தவர்கள் அளவற்ற மகிழ்ச்சிகொண்டனர் என்பதற்கு அவர்கள் எழுப்பிய கரவொலியே போதிய அத்தாட்சியாகும்.

திராவிடத்திற்குக் கிழக்கிலும் மேற்கிலும் அரண் செய்து நிற்கும் மலைகளையும் வாணிபத்துக்குச் சிறப்பாகத் தேவைப்படும் நீண்ட கடற்கரையையும் இலக்கியங் கண்ட காவிரிப்பூம் பட்டினம் - காயல் பட்டினம் - முதலிய கடற்கரை நகரங்களையும் பட்டினப்பாலை எனும் பெயரிய இலக்கியம் எழுந்த பாங்கினையும் விளக்கிக் கூறினார். தொழில் வளத்திற்கான இயற்கை வளம் இங்கு நிரம்பி இருக்கிறது; ஆதலால் திராவிடம் முன்னாள் தனித்து வாழ்ந்தது போலவே எதிர்காலத்திலும் வாழ்வதற்கு வசதியும் தகுதியும் கொண்டிருக்கிறது என்று அவர் கூறிய தெளிவுரையை, திராவிடத்தின் பகைவர்களும் தெரிந்து கொள்வது முக்கியம்.

அவர் வளர்த்துவந்த காங்கிரசை அவரே அழிக்கிறார் என்று அவர் மீது சுமத்தப்படும் பழிக்கு, தூயவர் காந்தியார் கண்ட காங்கிரசையோ- திலகர் வளர்த்த காங்கிரசையோ - ஆகஸ்டு பதினைந்துக்கு முன் நாட்டு விடுதலைக்குத் தொண்டாற்றிய காங்கிரசையோ - தாம் அழிக்க முனையவில்லையென்றும், பட்டேல் உள்ள காங்கிரசை - பாசீசப் பாதையில் வேகமாகச் சென்றுக்கொண்டிருக்கும் காங்கிரசை - முதலாளிகளுக்கு அரண் தேடித் தரும் இன்றைய காங்கிரசைத்தான் அழிக்க விரும்புகிறேன் என்று அவர் விளக்கமுரைத்தது, விரோதிகளாலும்மறுத்துக் கூற முடியாத விவேகமுள்ள உரையாகும்.

பி அண்டு சி மில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் ஆளவந்தார் எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பதை விரிவாகக் கூறிவிட்டு, தமது நீண்ட நாள் நண்பர் டாக்டர் இராஜன் செய்த நம்பிக்கை துரோகத்தையும் சுட்டிக் காட்டினார். அதாவது, தோழர் அந்தோனிப்பிள்ளையை அனுப்புங்கள், மனந்திறந்து பேசி சமரசத்திற்கு வருவோம் என்று அமைச்சர் அறிவிக்க, அந்த வார்த்தையில் நம்பிக்கை வைத்து அமைச்சரைச் சந்தித்துப்

பேச அந்தோனிப் பிள்ளையை அனுப்ப, அந்தோனிப் பிள்ளை வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டது தான் பலனாகக் கிடைத்தது. பின்னர், தொழிலாளர் உறுதியைக் குலைக்க ஆளவந்தார்கள் மேற்கொண்ட அடக்குமுறைகளையும், மிருகத்தனமான செயலினையும் சிந்தனையாளர்களுக்கு சீற்றம் ஏற்படும் முறையில் எடுத்து இயம்பினார். திராவிட நாடு பட்டேலின் பாசப் பிடியிலிருந்து விடுபட்டு, சமதர்ம ஆட்சியைக் காணும் நன்னாளில்தான் இதற்கெல்லாம் பரிகாரம் கிடைக்குமென்றும், எனவே திராவிடநாடு பிரிவினையைத் துரிதப்படுத்துவதுதான் நம் அனைவரின் முன்புமுள்ள பணி என்றும் அறிவுரை வழங்கினார்.

இந்தியா விரைவில் சமதர்ம நாடாக மாறுவதற்கான அறிகுறிகள் எதுவும் கிடையாது,முதலாளிகளின் ஆதிக்கமே ஓங்கி வருகிறது, தென்னாட்டைச் சுரண்டுவதிலேயே அதன் முழுநோக்கமும் இருக்கிறது, இந்தக் கேட்டிலிருந்து நாம் தப்புவதற்கான ஒரேமுறை, நமது நாட்டை வடவர் தொடர்ப்பிலிருந்து அறவே அறுத்துக்கொள்வதுதான் என்று திரு. வி. க. விளக்கிக்காட்டின போது வரண்டுகிடந்த வயல்கள் வளமைபெற்ற நிலம்போல் வாலிபர் உள்ளம் பூரித்தனர்.

ஜாதிஇன்றி வாழ்ந்த தமிழர்களிடை சமதர்மம் காண்பதற்கான பண்பாடுகள் நிரம்பி இருக்கின்றன. வடவரிடம் அது ஒன்றும் கிடையாது. சமதர்ம நோக்குடைய சிறந்த பல இலக்கியங்களைக் கொண்டவர்கள் தமிழர்கள். இந்தநிலையை வடவர் பெறப் பலகாலம் பிடிக்கும்; ஆதலால், அவர்களுடன் சேர்ந்திருந்து நாட்டை நலிவுறச் செய்வதை விடுத்து, திராவிடம் காணத்தொண்டாற்ற வேண்டியது என்று, திராவிடர்களுக்கு உள்ள பொறுப்புணர்ச்சியைச் சுட்டிக்காட்டினார்.

உள்ளத்திலே உருவாகி இருக்கும் திராவிடத்தை இன்னும் பத்து ஆண்டுகளில் அடைந்து தீருவோம் என்றும், அதுகாலை செயலில் உருவாகிவிட்ட திருவிடத்தை தீட்டிய ஓவியத்தில் திறந்துவைத்து களிப்படைவோம் என்று திரு. வி. க. திட்டவட்டமாகக் குறிப்பிட்டது, பல நாள் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட நாவலரின் நெஞ்சத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் ஆழத்தையும், உறுதியையும் படம்பிடித்துக் காட்டிற்று.

நம்மைக்குறித்து பழித்துப்பேசி வரும் காங்கிரசிலே உள்ள நண்பர்களுக்கு, நாட்டு விடுதலைக்கு நற்பணிசெய்து வந்த நல்லவரின் நெஞ்சத்தில் இன்று எழுந்துள்ள வேதனையைக் கண்டபின்னராவது, திராவிடம் காணத்தொண்டாற்றுவார்கள் என்ற நோக்கத்தோடு, திரு. வி. க. வின் தெளிந்த சொற்களைத் தூதாக அனுப்புகிறோம், அவர்கள் துணையும் நமக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கை நமக்கிருப்பதால்.

இன்பத்திராவிடத்தின், இணையில்லாத இந்த இருசக்திகளும் ஒன்று கூடியபிறகு,விடுதலைப்போரின் முடிவு எப்படி இருக்கும் என்பதுபற்றி யாருக்குத்தான் சந்தேகம் இருக்க முடியும்! இந்த இருசக்திகளும் ஒன்று சேர்ந்தானபிறகு, அறப்போருக்கு, புதிய உரம், புதிய பொலிவு, கிடைத்துவிட்டது என்பதுதானே பொருள்.

அந்த மகிழ்ச்சியுடன் பெரியார் பேசலானார்—"பயணம் சொல்லிக் கொள்ள வந்திருக்கிறேன்— உடன் வரவிருப்புவோரை அழைத்துக் கொண்டு ஆளவந்திருப்போர்காட்டும் சிறைக்குள் சென்றிருக்க முடிவு செய்துவிட்டேன்" என்ற துவக்கத்துடன், அரசியல்நிலைபற்றியவிளக்க உரையாற்றினார், வீரத் திராவிடப் படையின் தலைவர்.

இந்தி எதிர்ப்புக்கான காரணம்- முதலமைச்சருடன் கூடிப்பேசியது- எதிர்ப்பை முறியடிக்கச் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் — சர்க்காரின் நிர்வாகத்திலே காணப்படும் குறைபாடுகள், ஆகியவற்றை விளக்கலானார்.

"எனக்கும் அண்ணாத்துரைக்கும் ஏதோ பெரிய சண்டை வந்துவிட்டது, ஆகையால் இந்தி எதிர்ப்புமறியலை மீண்டும் நடத்தப்போவதில்லை என்று சர்க்கார் எண்ணுவதாகக் கேள்விப்பட்டேன். ஒரு சர்க்கார், இப்படியா வாழ்வது-எங்கள் விரோதத்தை நம்பியா, சுந்தப்பலத்தைக் கொண்டா, வாழவிரும்புவது - இது மானக்கேடல்லவா?" என்று இடித்துரைத்துவிட்டு "இதோ பாருங்களேன், எங்களுக்குள் ஏற்பட்ட சண்டையை" என்று மேடைமீதிருந்த அண்ணாத்துரையைக்காட்டினார்-மக்களின் பேராரவாரத்திடையே.

மைனர் தர்பார் நடத்துவது போலக் சர்க்கார் செலவினங்களை பெருக்கிக்கொண்டேபோகும் செயலைக்கண்டித்தார்.

"சட்டத்தை மீறும் மனப்பான்மையை மக்கள் கொள்ளக்கூடாது என்பதிலே நான் மிகுந்த அக்கரை கொண்டவன். எனினும் இன்று, சர்க்கார், எங்களை அந்த நிலைக்குத் துரத்துகிறார்கள்" என்று நிலைமையை விளக்ினார்.

"காங்கிரசின் ஊழலான முறைகளை நான் எடுத்துக்கூறினால்கோபிக்கிறார்கள், தேசிய வீரர்கள்; அவர்களுக்குக்கூறுகிறேன்,என்னைப்பிறகு கவனித்துக்கொளளட்டும், முதலில் ஆந்திரநாட்டுக் காந்தியாக உள்ள கொண்டா வெங்கடப்பய்யா எவ்வளவு பச்சையாகக் காங்கிரசின் ஊழல்களை-அம்பலப்படுத்தினார் என்பதைக் கவனிக்கட்டும் — என்மீது கோபிப்பது பிறகு நடக்கட்டும், முதலில், தேசியத் தோழர்கள், கொண்டா கூறியதுகேட்டு வெட்கப்படவேண்டாமா?" என்று குத்திக்காட்டினார்.

பெரியாரின் பேருரைக்குப்பிறகு, காலை நிகழ்ச்சி முடிவடைந்தது.

பிற்பகலில், தீர்மானங்கள் நிறைவேறின-திராவிட முரசுகள் எனத் தகும் நண்பர்கள் பலரும் தீர்மானங்களை விளக்கிப் பேசினர்.

நவம்பர் முதல்தேதி முதல்சென்னையில் மீண்டும் இந்தி எதிர்ப்புமறியலைத் தொடங்குவது—என்பதுதான், முக்கியமான தீர்மானம், மற்றவை கழகத்தின் அரசியல் சமுதாய பொருளாதாரத்திட்டங்களின் வெற்றிக்கான வழிவகைகளைக்கூறும் தீர்மானங்கள். திராவிடச் சமுதாயத்தின் வாழ்க்கையிலே புதியமணம் வீசுவதற்கான மார்க்கங்கள்.

திராவிடச் சமுதாயத்துக்கு வாழ்க்கை முறைக்கு ஒரு வழிகாட்டி வேண்டுமல்லவா — திராவிடப்பண்புக்கு ஒரு துணை தேவையல்லவா, அந்த அரும் நோக்குடன் பெரியார், திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைக்கும் முறையில், குறளைப்பற்றிச் சிறப்புரை பேசினார்.

பாரதம், இராமாயணம், பாகவதம் போன்றவைகள் நடக்கக்கூடாதன, நம்பமுடியாதன, நடைமுறைக்கு

ஒத்துவாராதன, ஒழுக்கக்கேடானவைகள், ஒருகுலத்துக்கொரு நீதி கொண்டனவாகும், அவை ஆரிய ஆதிக்கத்துக்காக அந்த நாளில் ஆக்கப்பட்டவைகள். திராவிடருக்கு வாழ்க்கை வழிகாட்டியாக இருக்கும் இலட்சணம் குறள் ஒன்றுக்கே உண்டு. ஆரிய ஆதிக்க நோக்கத்துடன் கம்பராமாயணத்தையும் மற்ற இதிகாசங்களையும் மக்களிடையே பரப்புகிறார்கள்— மகாபண்டிதர்கள் கூட, குறளுக்குத்தரவேண்டிய அளவு மதிப்புத் தருவதில்லை. ஏனெனில் குறள் இந்து தர்மத்தின்பேரால்புகுத்தப்படும் ஜாதிமுறை வர்ணாஸ்ரமக் கொடுமை ஆகியவற்றைக் கண்டிக்கும் அறிவுநூல். அதனிடம் உள்ள கருத்துப் பரவினால் ஆரியம் அழியும் என்ற அச்சம் அவர்களுக்கு; இது வரையில் என்னையாரேனும் ஏதேனும் ஒருமார்க்கம் வேண்டுமே திராவிடருக்கு, ஒருமதம் தேவையாயிற்றே, எதைக்கொள்வது எத்தகைய தர்மத்தை அனுஷ்டிப்பது என்றுகேட்டால், நான் மனிததர்மம் தான் என்மார்க்கம் என்று கூறுவது வழக்கம். இனி நானும் கூறுவேன் நீங்களும் தைரியமாகக் கூறலாம் திராவிடருக்கு என்ன மதம் என்றால் குறள் மதம் என்று. திருக்குறளில் இன்று தேவையற்றசில இருக்கலாம்; சிலவற்றுக்குப் புதிய பொருள் தரலாம்; என்றபோதிலும் மொத்தத்தில் பார்க்கும்போது திருக்குறளின் நீதியும் ஒழுக்கமுறையும் திராவிடருக்குத் தகுந்தவை; திராவிடருக்குப் புதியதோர் வாழ்வைத்தரும் அரியநூல், அறிவு நூல், என்றுகூறுவேன்" என்று எழுச்சியுடன் கூறினார். திராவிடர் கழக மாகாணத் தனி மாநாட்டிலே, கிடைத்த சிறந்த பலன், இதுவென்று, மாநாட்டினர் கருதினர். திராவிடர் கழகத்தார், எந்த ஏட்டையும் கேடுள்ளன என்று கூறிக்கண்டித்தவண்ணம் உள்ளனர், மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்ட ஏதேனும் ஒருஏடு, ஒரு ஒழுக்கநூல், வேண்டாமா, என்று பலரும் கேட்பதுண்டு. இனி, எமக்குத்திருக்குறள் உண்டு-என்று திராவிடச்சமுதாயம் தலை நிமிர்ந்து கூறலாம், பெருமையுடன் வாழலாம். குறளின் சிறப்பினை நாட்டவருக்கு விளக்கிக் காட்டும் புதிய பொறுப்பான பணியினை இனித்திராவிடர் கழகம் மேற்கொள்ளவேண்டும் என்று மாநாட்டினர் பேசிக்கொண்டனர்.

தோழர் அண்ணாத்துரை, தமது முடிவுரையில் இக்கருத்தினை வலியுறுத்திப் பேசினார்.

"இதுநாள் வரை நாம் அறிவு எனும் வாளை வீசி, ஆரியத்தை எதிர்த்துப் போரிட்டுவந்தோம், இன்று பெரியார், நமக்குக் கேடயமும் கொடுத்திருக்கிறார்—குறளே நமக்குக் கேடயம். முழு ஆயுதபாணிகளாகிவிட்டோம், ஆகவே அறப்போர் வீரர்களே! புறப்படுங்கள் சென்னை நோக்கி, அறப்போருக்கு" என்று கூறினார், மாநாடும் முடிவுற்றது.

"முரசொலி" ஆசிரியர் தோழர் கருணாநிதி தமது நண்பர்களுடன் அன்றிரவு தூக்குமேடை எனும் நாடகத்தை நடத்தி மக்களிடை அறிவுப் பிரசாரம் செய்தார். தோழியர் குஞ்சிதம் குருசாமி தலைமை வகித்தார்

ஈரோடு மாநாடு, இவ்வண்ணம் கூட, பல அரிய காரியங்களைச் சாதித்தது.

மாநாட்டின பலனாக கிளர்ச்சியிலே இருந்துவந்த தளர்ச்சி போக்கப்பட்டு, அறப்போருக்கான துவக்கநாள் குறிக்கப்பட்டுவிட்டது.

அறப்போருக்கு எவ்வளவு ஆதரவு திரட்ட முடியும் என்பதை அளவிடுவதற்கு, மாநாடு ஓர் வாய்ப்பாக இருந்தது.

பலநெருக்கடிகளுக்கிடையே நடைபெற்ற மாநாடு வசதிக் குறைவு அதிகம் இருந்தும் மாநாட்டுக்கு வந்திருந்த கூட்டமோ அரை இலட்சம்!

"சாப்பிட்டானதும், தோழர்கள், பக்கத்திலுள்ள வாய்க்காலில் போய்க் கை கழுவிக்கொள்ள வேண்டும்—போதுமான தண்ணீர் சப்ளை, இல்லை"

"அரிசி உலையில் போட்டாகிவிட்டது, அரைமணி நேரமாகும், கொஞ்சம் பொறுமையாக இருங்கள்."

இப்படிப்பட்ட முறையிலே வரவேற்புக் குழுவினர் கூறவேண்டிய நிலையில், நடைபெற்ற மாநாடு எனினும், இதற்கு குடும்பம் குடும்பமாக வந்திருந்தனர், பெரியதோர் கூட்டம்.

கிராமப் பகுதிகளிலே, திராவிட இயக்கம் பரவி வருவதை விளக்கும் விதத்திலே, நாட்டின் பல கிராமங்களிலே இருந்து மக்கள் வந்திருந்தனர்.

இருநாட்கள்—இரவுகளுந்தான்—விழாக்கோலம், ஊர் முழுதும்!

ஊரெங்கும் மாநாட்டுக்கு வந்திருந்தோரின் நடமாட்டந்தான்.

ஒரு கடைவீதியே புதிதாக அமைந்துவிட்டது என்று கூறலாம், மாநாடு நடைபெற்ற இடத்தில்.

இவ்வளவு எழுச்சியும் 'மந்திரக்கோல்' வேலையா!—மக்கள் மனதிலே நமது இயக்கக் கொள்கைக்கு, அவ்வளவு தூரம் இடம் கிடைத்திருக்கிறது—இந்த நிலைகண்டு பெருமையும் பூரிப்பும் நம்பிக்கையும் கொள்ளாதார் யாரிருக்க முடியும்.

இந்தக் காட்சி, நமக்குக் களிப்பூட்டுவது போல, ஆளவந்துள்ள கட்சியினருக்கு, கிலியை மூட்டத்தான் செய்யும். எனவே அவர்கள் இந்த எழுச்சியை அடக்க, அவசர அவசரமாக, அடக்கு முறையை வீசக்கூடும் நாம் அதற்குத் தயாரிருக்கவேண்டும். இப்போது நமது சமுதாயத்துக்குக் கிடைத்துள்ள புதிய நிலையிலே, நாம் இந்தத் தாக்குதலைத் தாங்கியாக வேண்டிய கட்டம் வருகிறது. இதிலே நாம் வெற்றி பெற்றாக வேண்டும். அறப்போரை, கொடுமையான முறைகளைக் கையாண்டு அழிக்க முனைவர் ஆளவந்தார்கள். மாநாட்டுக்கு வந்திருந்தோர், செய்தியைக் கேள்விப்பட்டோர், அனைவருமே, இதற்குத் தயாராக இருக்கவேண்டும். திராவிடத்தின் விடுதலைப் போரைத் திறம்பட நடத்தக்கூடிய பெரும் படை திரண்டிருக்கிறது. படையினர், கூடினர், பொறுமையுடன்—எதிரிகள் கண்டவர்—இனித் தாக்குவர்—144 ஐக் கொண்டோ, நூற்றுவேழா, நாற்பத்தி ஒன்றோ, எந்த செக்ஷனோ, கூறமுடியாது—ஆள்தூக்கிச் சட்டம் வரலாம்—வீட்டில் அடைக்கும் சட்டம் வரலாம்—தடியடி வரலாம்—கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்படலாம்—துப்பாக்கியும் வரலாம்—எது வரினும் என்ன என்ற கலங்காத உள்ளம் வேண்டும். அந்த உள்ளம் கொண்டவர்கள், மாநாட்டினுக்கு வந்திருந்தவர்களில் பத்திலோர் பகுதியினர் இருந்தாலும் போதும், வெற்றி நமதே, என்றார் பெரியார். ஆம்! உண்மை! அந்த வெற்றிப் படை வரிசையில் வந்து சேருக, விரைவில், என்ற அன்பழைப்புடன் இதனை முடிக்கிறோம்.

"இதற்காகவா போராட்டம்!"

(3)

ஈராறு கரமன்றோ
ஈசனார் புதல்வர்க்கு?
ஓராறு முகத்தாருக்கு
ஈராறு கரம் என்னல்
மாறுமோ உண்மைக்குச்,
சீராரே, செப்புவீரே!!

இராகபாவத்துடன், புராணப்பிரசங்கி, இதுபோல் பாடி, வாதாடி, பொய்யை அழகாக மெய்யாக்க முயல்வதுண்டு. ஆறுமுகமுடையார் முருகன், எனவே பன்னிரண்டு கரம் இருந்தாக வேண்டுமல்லவா, இதை எவரேனும் மறுப்பரோ!—என்று கூறிப், புராண ஆபாச விளக்கம் கூறுவோரை, எள்ளிநகையாடுவர்!

கேளுமய்யா விந்தையை! முருகனுக்குப் பன்னிரண்டு கைகள் உண்டோ?—என்று, கேட்கின்றன, சில, மனித உருவங்கள்! மனிதனுக்கொருமுகம்—இருகரம்—இதை அறியாதார் ஏதும் அறியாதாரே! எனதப்பன் வேலனுக்கு, ஆறுமுகம்—முகத்திற்கு இரு கரம், ஆறு இரண்டு, பன்னிரண்டு-தவறு! இதையும் மறுக்கின்றனரே, மாபாவிகள்! -என்று விளக்கமும் கூறுவர். ஆறுமுகம், என்பதற்கு என்ன அத்தாட்சி-எப்படி அமைப்பு-இவை பற்றி வாய் திறவார். ஏதேனும் ஒருவிஷயத்தைத் தாமே தயாரித்து வைத்துக் கொண்டு, அதை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வழிதரும் விதமாகக் கேள்வியைத் தயாரித்துக்கொள்வர் அதேமுறையை அரசியல் புராணீகர்களும் பின்பற்றிப் பேசி வருகின்றனர்.

கட்டாய இந்தியை எதிர்த்து நாம் நடத்தும் அறப்போர், நாட்டு மக்களின் நல்லெண்ணத்தை நம்பக்கம் திரட்டியவண்ணமிருக்கிறது. சிறுவர் மீது மும்மொழி திணிப்பதா என்று, நாடுகேட்கிறது.

இந்தியே, வேண்டாம் என்று கூறவில்லையே, திராவிடர்கழகத்தார், கட்டாயப்படுத்தும் முறை எப்போதுமே கூடாது என்றும் அவர்கள் கூறவில்லையே, இந்தியைக் கட்டாயப்படுத்தாதே சிறு பிள்ளைகளுக்கு என்றுதானே கூறுகிறார்கள், இவ்வளவு நியாயமான கோரிக்கையைக் கூடவா, ஒரு ஜனநாயகசர்க்கார், உரிமைப்போர் நடத்துபவர்களால் நடத்தப்படும் சர்க்கார், மதிக்கக் கூடாது—அதற்காக, பிடி, சிறையில்! அடை! அடி, தடியை! உடை மண்டையை! போடு 144! என்றெல்லாமா, கூறுவது. செச்சே! மக்களாட்சிக்கு உள்ள இலட்சணம் இது தானா!—என்றெல்லாம், பொதுமக்கள் பேசுகிறார்களல்லவா, இது, தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைமைப் பீடத்தில் வீற்றிருக்கும் காமராஜருக்கு, கலக்கத்தைக் கொடுத்திருக்கிறது. ஏதாவது கூறிப் பிரச்னையை மறைக்க வேண்டும், என்று முயற்சிக்கிறார்—அதற்கு, புராணப் பிரசங்கியின் முறையே அவருக்குத் தக்கதெனத் தெரிகிறது—புராணம் பேசுகிறார்.

மாயவரத்திலே பேசுகிறார் களம் பல கண்ட காமராஜர்—அறப்போர் களத்துக்குத் தயார் என்று அரை இலட்சம் தமிழர்கள் ஈரோட்டில் கூடின அதே சமயத்தில்—மக்களுக்கு, விளக்கம் தருகிறாராம் எம் முறையில்!

போராட்டம், தேவையற்றது—போராடுவதற்கு ஏற்ற அளவு பெரிய விஷயம் ஏதும் இல்லை வேண்டுமென்றே, அவர்கள், சாதாரண விஷயத்துக்காகப் போராடுகிறார்கள்—வீணாக, வீம்புக்காக, விரோதத்தால் என்று கூறுகிறார்.

புராணீகரின் உருக்கமான பேச்சு முறைப்படி, காமராஜர், "சர்க்கார் முதல்பாரத்திலிருந்து இந்தியைப் போதிக்கும்படி உத்தரவிட்டிருக்கிறது. திராவிடர்கழகத் தலைவர், நான்காம் பாரத்திலிருந்து இந்தி போதிக்க வேண்டும் என்கிறார். இந்தச்சொற்பவித்யாசத்துக்காகவா, போராட்டம் ஆரம்பிப்பார்கள்?" என்று கேட்கிறார் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்.

சொற்ப வித்யாசம்! சர்க்கார்கூறுவதற்கும், திராவிடகழகத் தலைவர் கூறுவதற்கும்!! இந்தச் சொற்ப வித்யாசத்துக்காகவா, போராட்டம் என்று கேட்கிறார்—தமிழரும் இதையே கேட்கிறார்கள், இந்தச் சொற்ப வித்யாசத்தைப் போக்கும், பெருங்குணம் ஏன் சர்க்காருக்கு இல்லை! இந்தச்சொற்பவித்யாசத்தை நாட்டு மக்களுக்குச் சட்டத்துக்கு உட்பட்ட முறையிலேஎடுத்துக் கூறினதற்கா சோளக்கஞ்சிக் கலயத்தை எங்களிடம் தருகிறீர்கள்!

பெரியார், பலமுறை கூறினார்—முதலமைச்சரிடம் நேரிலும் சொன்னார், நான்காம்பாரத்திலிருந்து, இந்தியைக் கட்டாயமோ, இஷ்டமோ, எதையோ செய்து கொள்ளுங்கள், முதல் மூன்றுபாரங்களில், மாணவர்கள் சின்னஞ் சிறுவர்களாக உள்ள நிலையில், இந்தியைக் கட்டாயமாக்க வேண்டாம், என்று கூறினார்.

சர்க்காருக்கு, பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளும் நோக்கமிருந்தால், என்ன செய்திருக்க வேண்டும்—இவ்வளவுதானே! சரி, செய்கிறோம் உமது கருத்தின்படியே—என்று கூறிவிடுமல்லவா?

காமராஜர், நம்மைக்கேட்கிறாரே, இந்தச்சொற்பவித்யாசத்துக்காகவா, போராட்டம் என்று. அவரை நாம் கேட்கிறோம், இந்தச்சொற்ப வித்தியாசத்துக்காக, ஏன் இவ்வளவு பிடிவாதம் காட்டுகிறதப்பா, உமது சர்க்கார்?

"பைத்யக்காரா! ஒரு அரை அணுவுக்காகவா இப்படி மூச்சுத்திணறும்படி பேசுகிறாய், போடா போ!" என்று ஏழைப்பாட்டாளியின் வயிற்றிலடிக்கும், கனவான்போலப் பேசுகிறீரே, காமராஜரே! வித்யாசம் சொற்பமானது என்கிறீரே, இந்தச் சொற்பவித்யாசத்துக்காகவா, உமது நண்பர்களால் நடத்தப்படும் சர்க்கார் இவ்வளவு பிடிவாதம் செய்கிறது — அடக்குமுறைப்படையை ஏவுகிறது—எங்களைச் சிறையில் அடைக்கிறது—எமது தாய்மார்களை நடுக்காட்டில் தவிக்கவிடுகிறது-கர்ப்பிணியையும் காட்டுக்குத் துரத்துகிறது-சொற்பவித்யாசம் என்கிறீர், சொல்லொணாக் கொடுமையும் புரிய வைக்கிறீர்!!

இந்தச் சொற்பவித்யாசத்தை நீக்கக்கூடவா, ஒரு ஜனநாயக சர்க்கார் பிடிவாதமாக முடியாது என்று சொல்லும் என்றுதான் நாங்களும் முதலில் எண்ணினோம்-மாநாடுகள் -மகஜர்கள்-மதிவாணர்களின் அறிக்

கைகள்-இவைகளே போதும், சர்க்காரின் மனதைமாற்ற என்று எண்ணினோம்! ஆனால், இந்தச் சொற்ப வித்யாசத்தை, எங்கள் கண்ணீர் கொண்டும், போக்கமுடியாதுபோன பிறகுதான், உரிமைப் போர்வீரரே! எங்கள் இரத்தம் கீழே சிந்தட்டும் என்று நாங்கள் துணிய நேரிட்டது. ஆட்சியாளரின் ஆணவக்கறையைத் தூய உள்ளம்கொண்ட எமது இரத்தந்தாலாவது, போக்கப்பார்க்கிறோம்.

கேலி பேசுகிறீரே, இந்தச்சொற்ப வித்யாசத்துக்காகவா, போராட்டம் என்று. வித்யாசம் சொற்பம் என்றது உண்மையானால், அங்கே, அதை நீக்கிவிடுமே - போராட்டம், ஏது பிறகு; ஒருசிறு மாற்றந்தானேகேட்டோம், மதிக்க மறுத்தீர்களே.

சொற்ப வித்யாசத்துக்காகக்கூட உங்கள் ஆட்சியிலே, போராட்டம் நடத்தித்தீரவேண்டி இருக்கிறது, அவ்வளவு நல்லவர்கள் நீங்கள்!!

அடிப்படையைக் கெடுக்கக்கூடிய, அந்தஸ்த்தைப் பாழாக்கக்கூடிய, எட்டிக்குப்போட்டியான, காரியத்திற்கு உதவாத யோசனையை, எதிர்க்கட்சி கூறினால் ஆட்சியாளர் எப்படி ஏற்பது என்று எண்ணவும் ஒருக்காலும் இணங்கமுடியாது என்று கூறவும், பிறகும் எதிர்ப்புக் கிளர்ச்சி ஏற்பட்டால், அடக்கவும் முற்படும்.

மேதைகளான உங்கள் ஆட்சியிலே, நீங்களே எதைச் சொற்பவித்யாசம் என்று கூறுகிறீர்களோ, அதற்குத், திராவிட கழகத்தலைவரையே 151-வது செக்ஷன்கொண்டு தாக்கித் தனிப் பெருமை தேடிக்கொண்டீர்கள்.

சொற்ப வித்யாசந்தானே! இதற்காக நாங்கள் போராடுகிறோம் என்கிறீரே, நீக்கிவிடுமே, இந்தச்சொற்ப வித்யாசத்தை!

இந்தியை, நான்காம் பாரத்திலே, கொண்டுபோய் நிறுத்தினால் என்ன கேடு நேரிட்டுவிடும் என்று அஞ்சுகிறீர்கள்? மதிப்பு மங்கிவிடுமா? பாரதமாதா சபித்திடுவாளோ என்ற பயமா? எது கெட்டுவிடும், சொற்ப வித்தியாசந்தானே சர்க்காரின் திட்டத்துக்கும், எங்கள் தலைவர் கூறுவதற்கும்—இதற்கு, ஏன் வீண்பிடிவாதம்! இதற்கா போராட்டம் என்று கேட்கப்பயன்படும் அறிவைக்கொஞ்சம் ஆளவந்தார்களின் போக்கைத் திருப்பவும் உபயோகித்தப்பாருமே!

நமது திட்டத்துக்கும் அந்த இராமசாமியாரின் யோசனைக்கும், அதிக வித்யாசம் இல்லையே, சொற்பவித்யாசந்தானே, இதற்காக ஒருபோராட்டத்தை உண்டாக்கிக்கொள்வானேன், போலீசை ஏவுவானேன், மாற்றிவிடலாமே பாடத்திட்டத்தை என்று, ஏன் மந்திரிசபைக்குக் கூறக்கூடாது? மாயவரத்தில் மக்கள் முன்பு, மதிமிருந்த பேச்சுப் பேசுவதாக மனப்பால் குடித்து உரைத்த அந்த வாதத்தைச் சற்று, ஆட்சியாளர்களின் பக்கம் திருப்பி வீசிப்பாரும், முடிந்தால் — துணிவுமிருந்தால்!

சொற்ப வித்யாசமாம், சொற்பம்! ஒருவாரம் முதல், மூன்றுமாதம் வரை, பலரகச்சிறைத்தண்டனைகள் இந்தச் சொற்பத்துக்கு!! தடியடிகள் இந்தச் சொற்பத்துக்கு!! கூட்டம் கூட்டமாகப் பிடித்துச் சிறையில் தள்ளுவது இந்தச் சொற்பத்துக்கு.

இந்தச் சொற்ப வித்யாசத்துக்கே இவ்வளவு அடக்குமுறை வீசுகிறீர்களே, அற்ப அதிகார போதையினால் தம்மை மறந்து, ஏன், என்று, அறிவுலகம் கேட்கிறது, உம்மைப் பார்த்து!

இதற்காகவா, இந்தப் போராட்டம்—என்று கேட்கிறீர், வேறு காரணமும், காட்டுறீர், எமது போராட்ட நோக்கமென. நானும் கேட்கிறேன், இந்திக்காகவா ஆளவந்தார்கள் இவ்வளவு பிடிவாதம் செய்கிறார்கள்! அதிலும், சொற்ப வித்யாசமே இருக்கும்போது, பாடத்திட்டத்தை மாற்றிவிட்டால், கேடு ஏதும் வாராது என்ற நிலையில், இவ்வளவு பிடிவாதம் காட்டுகிறீர்களே, இந்தி மட்டுமா, இதற்குக் காரணம்! அல்ல! அல்ல!!

இதற்காக அல்ல இந்தப் போராட்டம். காங்கிரஸ்மீது உள்ள கெட்ட எண்ணம் தான் இவ்வாறெல்லாம் செய்யச் சொல்கிறது—என்று மாயவரத்தில், எம்மீது பழி சுமத்திப் பேசினீர்.

இந்திக்காக அல்ல நீங்கள் இவ்வளவு பிடிவாதம் காட்டுவது—எதையாவது சாக்காகக்கொண்டு, எதிர்க்கட்சியை ஒழித்துவிடவேண்டும், என்ற கெட்ட எண்ணம் உங்களைப் பிடித்து ஆட்டுகிறது, என்று நான் குற்றம் சாட்டுகிறேன்—மறுப்பு உண்டா, மதிவழி நிற்கும் காரணத்தோடு கூடிய மறுப்பு!

இந்தியைப் புகுத்துவது இந்திக்காக அல்ல—இந்நாட்டை வடநாட்டுக்கு 'எடுபிடி' ஆக்குவதற்காக, அடிமை முறிச் சீட்டில், வடநாட்டினருக்குத் தெரிந்த மொழியிலே கையொப்பம் இடச் செய்ய வேண்டும் திராவிடமக்களை என்பதற்காக, இந்தியைத் திணிக்கிறீர்கள் என்று குற்றம் சாட்டுகிறேன். இல்லை என்றால், ஏன், இந்த இந்திக்காக இவ்வளவு பிடிவாதம் காட்டுகிறீர்கள்!! நாலைந்துவைதீகர்கள், இரண்டொரு பணம் பிடுங்கி வக்கீல்கள் போட்ட கூச்சலைக் கேட்டு, உமது நண்பர்கள் கூட அல்ல, உமது எஜமானர்களான மேலிடத்தார்கள், இனாம்களை, ஜெமீன் இனாம் ஒழிப்புச் சட்டத்திலிருந்து நீக்கினார்கள்—சிங்கமெனச் சீறிய சர்க்கார், பிறகு பங்கப்பட்டதைக்கூட மறந்துவிட்டு, இனாம்களை விலக்கிவிடவில்லையா! வீரம், ரோஷம், ஏதாவது, குறுக்கிட்டதா! ஆளவந்தார்கள் கொண்டுவந்த ஜெமீன் இனாம் ஒழிப்புத் திட்டத்துக்கும், டெல்லி திருத்தி அனுப்பிய திட்டத்துக்கும் இடையே உள்ள வித்யாசம், சொற்பம் கூட அல்லவே, அடிப்படையே மாறுகிறதே, இருந்தும் சரி, என்று தானே சொன்னீர்கள்! இந்தி விஷயத்தில், சொந்த நாட்டினர், சொற்ப வித்யாசமுள்ள மாற்றத்தைக் கூறும் போது மட்டும், ஏன் பிடிவாத குணம் கொள்கிறீர்கள்! காரணம் வேண்டுமே!! கூறுமே. யாராவது விஷயமறிந்தவர்களைக் கேட்டுப் பார்த்து, நீராவது தெரிந்து கொள்ளும்.

இந்தி விஷயம், மொழி சம்பந்தமானது மட்டுந்தான் என்றால், அதற்கு, எந்தச் சர்க்காரும் இவ்வளவு பிடிவாதம் காட்டாது. வேறு ஏதோ, உள் எண்ணம் இருக்கவேண்டும் இந்தப் பிடிவாதத்துக்கு!

நள்ளிரவில், கொல்லைப்புறக் கதவின் தாளை ஓசைப்படாமல் நீக்கிடும் கள்வனைக் கையும் பிடியுமாகக் கொண்டு வந்தால், அவன், "நான் என்ன செய்தேன் வீட்டுக்குடையவரே! நீர் தானே ஓசைப்படத் திறப்பீர்—நான் ஓசை எழாதபடி திறந்து பார்த்தேன் — இந்தச் சொற்ப வித்யாசத்துக்காகவா, அடியேனைப் பிடித்துப் போலீசில் ஒப்படைப்பது, உங்களுக்கு, என்மீது ஏதோ ஒரு

(31-ம் பக்கம் பார்க்க)

11-ம் பக்கத் தொடர்ச்சி

சென்றுள்ளார், பாகிஸ்தான் பிரதமர் இங்கிலாந்திலிருந்து திரும்பும்பொழுது கெய்ரோவில் சிலநாள் தங்குவார், அமெரிக்க அதிகாரி மார்ஷல் பாரிசில் இருக்கிறார், பெர்லின் பிரச்னையில் கொஞ்சமும் விட்டுக்கொடுக்கக் கூடாது என்று சோவியத் பிரதிநிதி விஷன்ஸ்கி தீர்மானித்திருக்கிறார், என்பன போன்ற செய்திமக்கள் உள்ளங்களில் மருட்சியையும் மகிழ்ச்சியையும் தருகின்றன. இவைகளை நன்கு விளக்கிக்கொள்ளுகின்ற முறையில், பற்றநாட்டுப் பத்திரிகை நிருபர்கள் மேற்குறித்துள்ளவர்களைப்பேட்டி காண்பதும், எப்படியாவது அவர்களின் அந்தரங்கக் கருத்துகளை அறிந்துகொள்ள முயற்சிப்பதும், அவ்வாறு அறிந்துகொண்டதை அனைவரும் புரிந்துகொள்ளும் முறையில் பிரசுரிப்பதுமாக இருக்கிறார்கள். அந்தச் சிலர் எடுத்துக்கொள்ளும் செயல்களில் உலகத்தின் எதிர்காலம் அடங்கி இருக்கிறது. அதனைமக்கள் தெரிந்துகொள்வதும், அதற்கான முறையில் தங்கள் போக்கினை மாற்றிக்கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது. ஆனால் சென்னைப் பத்திரிகை நிருபர்கள், காசிவாசியைச் சந்தித்து, சனாதனத்தின் சீர்மையைத் தெரிந்துகொண்டு, மக்களுக்கு ஏற்பட்டுள்ள சஞ்சலத்தை மாற்ற முயற்சி எடுத்துக்கொள்ளுகிறார்கள். இரு நாட்டிலும் உள்ள நிருபர்களின் போக்கில் இதுபோன்ற முரண்பாடு இருக்கக் காரணமென்ன? "கெட்டாலும் கெட்டான் என்மகன் ஆச்சாரத்தோடு கெட்டான்" என்று கூறி, தன்மகனின் ஒழுங்கீனத்தைக் கண்டித்து ஒருவனுக்கு, ஒரு சாஸ்திரியார் சமர்த்தியமாகக் கூறினாராம். அதுபோலச், செய்யுந் தொழில், சிந்தனையைத் தூண்டக்கூடியச் செயலாக இருந்தாலும், பிறந்த குலம், போதிக்கப்பெற்றுள்ள போதனையிலுள்ள பற்று, இந்த நிருபர்களை அவசியமற்ற, ஆபத்தைப் பயக்கக் கூடிய பணியில் ஈடுபடச்செய்கிறது!

வந்த மடாதிபதியோ, பழைய காலப்படி கால்நடையாகவோ, பல்லக்கில் ஏறியோ சென்னை வந்து சேரவில்லை. விமானத்தின் மூலம்—அமெரிக்காவிலோ இங்கிலாந்திலோ செய்தது—சென்னை வந்து சேர்ந்திருக்கிறார். மனு, மாந்தாதா, பராசரர், யாக்ஞவல்கியர்—இயற்றியதாகச் சொல்லப்படும் தர்மசாஸ்திரங்களில், விமானம் செய்வது குறித்து எழுதப்பட்டுள்ள ஏடொன்றும் கிடையாது. இந்நிலையில் விமானத்தில் ஏறிப்போகவேண்டிய இடத்தை விரைந்து அடைவது தர்மமான செயல் என்று அவர்கள் ஏடுகளிலே இருக்கக்காரணமில்லை. இருந்தாலும் தரும சாஸ்திரம் அனுமதிக்கிறதா என்று ஆராய்ந்து பாராமல், கரபாத்திரசாமி, நவீன சாதனமான விமானத்தில் தமது திருமேனியை ஆரோகணஞ் செய்து, சென்னை வந்து இறங்கி சனாதனத்தின் சிறப்பைச் செப்புகிறார்! பத்திரிகை நிருபர்களும் நவீன அச்சுச் சாதனங்களின் துணைகொண்டு, அதனை மற்றவர்களுக்கு அளிக்கின்றனர்!

விமானம் ஏறினாலும், அருமையான அச்சு இயந்திரத்தைக் கைக்கொண்டாலும், பழமை பேசும் பண்பு இந்த ஒரு இனத்துக்கு மட்டும் என்றென்றும் தொலைவது முடியாத காரியமாகும்.

கை முதல் இல்லாமல், சொந்தத்தில் உழைக்கவேண்டிய நிர்ப்பந்தமில்லாமல் சுகவாழ்வுவாழ்வதற்கு, முன்னோர்களின் ஏடுகளும் ஏற்பாடும் தங்களுக்குச் சாதகமாக இருப்பதால், காலம்மாறினாலும், உலகிடை கருத்துப் புரட்சி ஏற்பட்டாலும், இவர்கள் உள்ளத்தில் மட்டும் மனிதப் பண்பு ஏற்படும் என்று சொல்வதற்கில்லை!

பலதாரமணத்தடுப்பு, சகோத்திர மணம், கலப்பு மணம், மணவிலக்கு பெண்கள் சொத்துரிமை, முதலிய உரிமைகளை வழங்குகின்ற இந்துச் சட்டத்திருத்த மசோதாவைக் கண்டிக்கிறது கரபாத்திரம். மதத்திலே தலையிட இந்தச் சர்க்காருக்கு ஏது உரிமை என்று கேட்கிறது. தருமசாஸ்திரங்களும், அதனைச் சுமந்துகொண்டிருக்கும் உடலங்களுமன்றோ அதற்கு உரிமையுடையவர்கள் என்று பேசுகிறது. இது போன்ற சட்டத்தை மற்ற மதத்தினர்—கிறிஸ்து—பார்சி—முஸ்லீம்—முதலியவர்களுக்குச் செய்யாமல், ஹிந்துக்களுக்கு மட்டும் செய்வதற்குக் காரணம் என்ன என்று கேட்கிறது. மாபாரதம், இராமாயணம் அன்றோ நம்மக்களுக்கு நீதிபுகட்டும் நிலையிலுள்ளன என்றும் ஆர்ப்பரிக்கிறது. இந்தப் பாழ்மதியோடு, உலக ஆசிரியர் நாம் என்றும் பீத்திக் கொள்ளுகிறது.

விமானத்துக்கு வாய் இருந்தால் என்ன சொல்லி இருக்கும்?

"வீணனே! உன் உலக ஆசிரியத் தன்மையால் நான் உருவாகவில்லை. நன்றி கெட்டவனே! என்மீது ஏறிக்கொண்டு நினைத்த இடத்திற்கு நிமிஷத்தில் போய்ச் சேருகிறாய். நான் வந்தவகையைப் பற்றி ஒரு வார்த்தை கூடப்பேசவில்லை. நாணயமற்றவனே! என்னையும், என்போன்ற மற்றச் சாதனங்களையும் தோற்றுவித்தவர்கள் உன் போதனையை ஏற்றுக் கொள்ளாதவர்கள். இன்றும் ஏற்கத் தயாராக இல்லாதவர்கள். அதுமட்டுமல்ல, எதிர்ப்பவர்கள். உண்மை அறியாதவனே! உன் போதனையை என்னைப் பிறப்பித்த உலகத்தார் ஏற்றுக் கொண்டிருந்தால் பெருச்சாளியும் பிள்ளையாரும், வராகமும் வயிரவரும் அன்றோ அங்கெல்லாம் குடியேறி இருக்கும். பழமை பேசியே! உனக்கு, உனது முன்னோர்கள் போக்கிலே நம்பிக்கை இருந்தால், அவர்கள் நடவடிக்கையிலே நல்லெண்ணமிருந்தால், இறங்குஎன்னைவிட்டு—இனிக் கனவிலும் நான் தரும் சுகத்தை விரும்புவதில்லை என்று சபதம் செய்துகொள்—செய்வாயா? சுயநலச் சொரூபியே! நீ ஏற்றிப் போற்றும் சனாதனம் தெரியாத சமுதாயத்தின் சிருஷ்டி நான். அந்தப் புதிய சமுதாயத்தை உன் நாட்டிலும் ஏற்படுத்தினால் தான் என்போன்ற சாதனங்கள் இங்கும் உர்பத்தியாவது சாத்தியமாகும்—இதனை உணர்ந்துகொள். நாடு அந்நியனிடம் சிக்கினதற்கு உன் கொள்கைதான் அடிப்படை. அந்த அடிப்படை—இனி நேர் செய்ய முடியாத நிலையில் சரிந்துபோன காரணத்தால் தான்—உன் நாட்டுமக்கள் உள்ளங்களில் உரிமைப் பயிர் முளைத்தது. அதன் விளைவுதான் அரசியல் விடுதலை. காலம் மாறிவிட்டது. கருத்தும் மாறிவிட்டது. காலத்திற்கு ஏற்ப நீயும் என்மீது ஏறிச்சவாரி செய்கிறாய். ஆனால் கருத்து மாற்றத்தை மட்டும்—அது பிறர் இடம் ஏற்படுவதை மட்டும் மட்டந்தட்டப்பார்க்கிறாய். தோல்வி அடைவாய். விடுவாய் இச்செயலை!"

* * *

திரௌபதிகளாக இருக்க இந்தக் காலத்தில் எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள். குந்தியின் ஒழுக்கத்தைக் கூட ஒப்பாத சமு

தாயத்தை அமைப்பதில் தான் அறிஞர்களின் முயற்சி இருக்கிறது.

தசரதன் அறுபதனாயிரத்து மூவரை மணந்து, அவர்களின் சுகத்தைக் கெடுத்து, அவர்களைச் சோகத்தில் ஆழ்த்தி, இளையாளின் மோகத்தில் சிக்கி, அவள் விருப்பத்தைக் கேட்டு மூர்ச்சித்து, முடிவில் வெறுங்கூடு ஆனான்! அவன் மகன் அயோத்தி இராமன், ஒரு மனைவியுடன் வாழ்ந்தான் என்று கதை பேசுகிறது. தன் தந்தையின் போக்கு, தாரணிக்காகாத் தன்மையது தையலர்களைக் கதிகலங்கச் செய்யும் தகுதியிலுள்ளது, என்று குற்றஞ் சுமத்துவது போன்று, இராமனின் மணவினை இருந்ததாக இராமாயணம் கூறுகிறது.

தந்தையின் நீதியை, தனயன் மாற்றிவிட்டான். 'ஏக பத்தினி விரதன்' இராமன் என்று இராமபக்தர்கள் பேசிப் பூரிப்படைகிறார்களே, அவர்களைக் கேட்கிறோம், அதே நீதி முறையை கடைப்பிடித்து மக்கள் ஒழுக வேண்டுமெனும் போதனையை, கரபாத்திரங்கள் இதுவரை மேற்கொண்டிருந்தால், தசரதனை போன்று, சில பெண்கள் ஒருவனை மணந்து, எதிர்பார்த்தது கிடைக்காமல் ஏமாற்றமடைந்து, இழிந்த செயலில் ஈடுபட்டு, பிறந்த குலத்தையும், தங்கள் சீலத்தையும் பிறர் கண்டு பழித்துப் பேசும் நிலை இருக்குமா இன்றும் என்று. இத்துடனா இது நிற்கிறது? இன்பத்தைப் பெற, எந்தப் பாதையில் செல்லுகிறார்களோ, அதே பாதை முடிவில் அவர்களைச் சித்ரவதை செய்து சீரற்றவர்களாகவும், பல பிணிகளின் பிறப்பிடமாகவுமன்றோ மாற்றிமைக்கிறது! இக்கோர முடிவிற்கு, அவர்களை மட்டும் பொறுப்புள்ளவர்களாக ஆக்கி, தூற்றிப் பேசிக்கொண்டிருப்பது, சன்மார்க்க போதனையாளர்களுக்குத் தகுந்ததோர் பணி புரிவதாகத் தெரியலாம். ஆனால், இம்முறையால், ஒழுக்கக் குறைவு என்றென்றைக்கும் நிலைத்து பெருகிக் கொண்டிருக்கவும், இதனைக் கண்டித்து உபதேசம் புரிவோர் வாழ்ந்துகொண்டிருக்கவுமான நிலைதான் நாட்டில் நிலைத்து நிற்க முடியும். பலதார மணத்தைத் தடுப்பதின் மூலமே, இந்த ஒழுங்கீனத்தை நேர் செய்ய முடியும். இந்த உயர்ந்த குறிக்கோளைக் கொண்டுதான், தசரதன் போன்று பல பெண்களை மணப்பதைத் தடுத்து, இராமன் நிலையில் நின்று, நாட்டுக்கு நலந் தேடும் நல்ல முறையில், பலரை மணக்கும் அக்கிரமத்தைத் தொலைக்க சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

காலத்துக்கேற்ற கருத்தை வரவேற்பதாகவும் காணோம், இந்தக் கரபாத்திரங்கள், இவர்கள் ஏற்றிப் போற்றும் இராமன் வழியைப் பின்பற்றுவதாகவும் காணோம்!

இராமன் ஏகபத்தினியுடன் தான் வாழ்ந்தானா இல்லையா என்பது நமக்குத் தெரியாது. இதிகாசம் கூறுவதையும், அதனை பூஜிப்போர் பிரசங்கிப்பதையும் கொண்டுதான், புராணத்தில் நம்பிக்கை இருப்பவர்களுக்குச் சிறப்பாக இதனைச் செப்புகிறோம்! அவர்கள் திருந்தட்டும் என்ற நல்ல நோக்கத்தோடு!

தசரதன் செயலை, இராமன் தன் செயல் மூலம் அறிந்தோ அறியாமலோ குற்றஞ் சாட்டுகிறான். இதுவே, புராண மரியாதைக்காரர்களின் பக்திக்குப் போதுமான நீதி!

மந்தம், வயிற்றுக்கோளாறு, செரிமானமின்மை முதலிய வயிற்று வேதனை உள்ளவர்களுக்குத்தான் வைத்தியரின் உதவி தேவைப்படுகிறது. ஆரம்பத்தில் இலகுவான மருந்தையும், பலன் கிடைக்கவில்லையானால் பின்னர் கடுமையான மருந்தையும் கொடுத்துத் தீரவேண்டிய நிர்ப்பந்தம் மருத்துவருக்கு ஏற்படுகிறது. கல்லையும் செரிக்கச் செய்துவிடும் நிலையில் உள்ளவர்களுக்கு மருந்து கொடுக்கவேண்டிய தேவை இல்லை. பிணியற்றவர்களுக்கும், தங்களுக்குக் கொடுத்தது போன்றே ஏன் மருந்து கொடுக்கவில்லை என்று பிணியாளர்கள் கேட்கமாட்டார்கள். அப்படி கேட்பதானால், பிணியாளர்களுக்கு வயிற்றுக்கோளாறு மட்டுமல்ல, மூளைக்கோளாறும் ஏற்பட்டிருக்கிறது என்று மருத்துவர் தீர்மானித்து, அதற்கான மருத்துவச் சாலையில் அவர்களைக் கொண்டு சேர்ப்பார். இந்த இடத்திற்குத்தான், தாம் தகுதியானவர் என்பதை, மற்ற மதத்தினருக்கு ஏன் இது போன்றதோர் சட்டம் செய்ய முன்வரவில்லை என்று வினவுவதன் மூலம், சரபாத்திரர் காட்டிக் கொள்ளுகிறார்! நிற்க,

அன்று தரும சாஸ்திரம் வகுத்தவர்கள், ஆளும் அரசனை அண்டி, அவன் ஆணையைப் பெற்றுத்தான், தங்களுடைய ஆகாத நீதிகளை நாட்டு மக்களிடை நிலை நிறுத்தினர். அந்தக் காலம் மலை ஏறிவிட்டது. இது மக்கள் ஆட்சிக் காலம். இன்று மக்களுக்குத் தேவையானதை, மக்களே முன்வந்து கூடித்தீர்மானித்து திட்டம் வகுத்து, அதனைச் சட்டமாக்க, அவர்களின் அரசை அனுமதி கோருவது, எந்த வகையிலும் தவறுடையதன்று. கரபாத்திர சாமிகள் வேண்டுமானால், மடத்துச் சொத்தை சனாதனப் பிரசாரத்துக்கும், சொந்தபோக போக்யங்களுக்கும் செலவிடுவதை விடுத்து, அனுமதி இருந்தால் ஏதாவது ஒரு ஆலையை ஏற்படுத்தி, உற்பத்தியைப் பெருக்கி, உழைப்பாளிகளுக்கு நல்வாழ்வு அளிக்கட்டும். உழைப்பாளிகளில் ஒருவராக இருந்து உழைத்து, தனக்குத் தேவையான அளவிற்கு சாதனங்களைப் பெறட்டும். இது—இந்த உயர்ந்த உலகநீதி—சனாதன சக்திக்கு நேர்மாறானது. இருந்தாலும், இதுவே தற்காலத் தர்மம் உலகம் ஒத்துக்கொண்ட தர்மம். இந்த கரபாத்திரம் இதனை ஏற்குமா?

●

தீர்ப்பளியுங்கள்

10-ம் பக்கத் தொடர்ச்சி

மறந்தான். மிருகச் சுபாவம் பெற்றான் புழுப்போன்று கிடந்த புலையன் சீறும் பாம்பானான். பூனை நிலைமாறி புலித்தன்மை பெற்றான். நாட்டு முறையை மறந்தவர்களுக்குக் காட்டு நீதி வழங்கக் கருத்துள் கொண்டான்.

முகத்தில் கோபம் பொங்க, கண்களில் தீப்பொறி கிளம்ப, கையில் கூறிய அரிவாளுடன், முடிந்த உறுதியுடன், பண்ணையாரின் மாளிகையின் உள், பட்டப்பகலில் பிரவேசித்தான் பாட்டாளி. பண்ணையாரின் இரத்தம் தரையில் பாய்ந்தோடியது. துண்டித்த பனைமரம்போல் தரையில் சாய்ந்தார். சில விநாடிக்குள் பிணமானார். கொலைஞன் அத்துடன் நிற்கவில்லை. மேலும் விரும்பத் தகாத விபரீதச் செயலிலேயே நாட்டஞ் செலுத்தினான். தனக்குத் தீங்கிழைக்காத பண்ணையாரின் பேரனையும் பதினாறு வயதுடை பேத்தியையும் அரிவாளால் காயப்படுத்

திறான். ஆத்திரத்தால் அறிவிழந்தான்!

இத்துடனும் நிற்கவில்லை அவன். அங்கு கிடந்தத் துணிகளை எல்லாம் ஒன்று சேர்த்துக் கொளுத்திவிட்டான். பின்னர், மேல் மாடிக்குச் சென்று தூக்கிட்டுக்கொண்டு, தன்னுயிரையும் போக்கிக் கொண்டான். தன்னுடைய தகாதச் செயலுக்கு, தானே விதித்துக் கொண்டான் தண்டனையும்.

* * *

இதனை ஆளுவோர்கருதிப்பார்க்க வேண்டும், நல்லவன் கெட்டவனுவதும், குணசாலி கொலைஞனுக மாறுவதும் எதனுல் ஏற்படமுடிகிறது என்னும் தன்மையை ஆராய்ந்து அறிவது முக்கியம். தென்றல் புயலாகவும் மாறிவிடக்கூடும் என்பது இதிலிருந்து விளங்குகிறது.

பயிரிடுவோருக்கு நிலம் சொந்தமாக்கப்படும் வரையில், பண்ணையின் ஆதிக்கத்திற்கு ஆபத்து ஏற்படாமல் பார்த்துக்கொள்வதே முக்கியம் என்னும் கொள்கையை மேற்கொண்டிருக்கிறவரையில், மேல்குறித்துள்ள கண்டிக்கத்தகுந்த போக்கு—காட்டுமுறை — நாட்டில் இருக்கத்தான் இருக்கும். சாஸ்திர போதனை—சன்மார்க்க சொற்பொழிவு — கடமையைச் செய்யுங்கள் உரிமை தானுக வரும் எனும் உருப்படாத உபதேசம—ஊராளவந்தவர்களே செய்துகொண்டிருப்பது, எந்தவிதப் பயனையும் கொடுக்காது. இதுவரையில் கொடுத்ததுமில்லை. கொள்ளை — கொலை—சூது சமுதாயத்தின் உச்சியில் இருப்பவர்களால் உற்பத்திச் செய்யப்படும்— அவர்களுக்குத்தெரியாமலே சிருஷ்டிக்கப்படும்—தொத்து நோய்க் கிருமிகளாகும். இதனைத் தொலைக்க எடுத்துக்கொள்ளும் உபதேசமுறைகளால், இக்கொடிய நோயைச் சிலநாள் பரவாமல் தடுக்கவும், சிலகாலம் வெளிக்குத் தெரியாமல் ஒடுக்கவுந்தான் முடிகிறதேயன்றி அறவே இதனை அழித்துவிட முடிவதில்லை. இத்துறையில் இதுவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளினுல் நல்லபலன்ஏற்படவில்லை என்று தெளிவாகத் தெரிந்த பின்னரும், பழையமுறைகளையே நம்பி இருப்பது அறிவுடைமையாகாது. மக்கள் அனைவரும் விரும்புகின்ற— அமைக்க ஆசைப்படுகின்ற—மனித சமுதாயத்தை நாம் நம் வாழ்நாளில் காண முயற்சித்தல் வேண்டும். இல்லாமைகுரல் எழுப்பாத—எவரும் கண்டு வெட்கப்படக்கூடிய—இணையற்ற சமுதாயம் இங்கு ஏற்பட— நாம ஒன்றுபட்டு உழைப்போமாக.

இந்த நிகழ்ச்சி 13-10-48 ஹிந்து பத்திரிகையில் காணப்படுகிறது.

ஆரம்பிக்கவில்லை—ஏன்?

இந்தியத் துணை கண்டம் ஓர் விவசாய நாடு. இங்கு நூற்றுக்கு எழுபது மக்களுக்குக் குறையாதவர்கள் பயிர்த் தொழிலை நம்பி வாழ்கிறவர்கள். இந்தத் தொழிலில் கிடைக்கும் பலனும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வருகிறது. இவர்களில் பெரும்பாலோருக்கு பயிரிடுவதற்குச் சொந்தத்தில் நிலம் கிடையாது. சிலரிடமே வயல்கள் முடங்கிக் கிடக்கின்றன. எனவே, விவசாயத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும் சூழ்நிலை இருக்கவில்லை. அதிகமான பேர்கள், வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவில், பயிர்த் தொழிலை நம்பி வாழவேண்டிய கட்டாயம் இருப்பதால், அவ்வாறு பயிர்த்தொழிலில் ஈடுபடுபவர்களின் வருமானம் உயர்வதற்கு வழி இல்லாமல் குறைந்துகொண்டே போகிறது. அவர்களின் வாழ்க்கைத் தரமும் மிருகத்தின் நிலையிலும் கேவலமானதாக இருக்கிறது.

விவசாயத் தொழிலில், தொழிலாளர்களின் தொகைக் கூடுதலாக இருக்கிற காரணத்தால், தொழிலாளர்கள், மேலும் கூலி குறைத்துக் கொள்வதாக இருந்தாலும் பாதகமில்லை பயிரிடுகிறோம் என்று மேல் விழுந்து, தொழிலில் போட்டியிடும் தன்மை இங்கு இருக்கிறது. இது மட்டுமல்லாமல் விவசாயத்தில் இருக்கும் போட்டி நிலையை, புதுப் புது கைத் தொழில்களை நிர்மாணிப்பதின் மூலம், காலா காலத்தில் குறைத்திருக்க வேண்டும். ஆனால், ஆட்சியில் ஆங்கிலேயர் வீற்றிருந்த காரணத்தால், பெருந் தொழில்கள் எதனையும் தேவையான அளவில், இங்கு ஏற்படுத்த முயற்சிக்கவில்லை. சொந்த நாட்டின் நலம், அவர்களை இத்துறையில் கருத்துச் செலுத்தவிடாமல் தடைசெய்து விட்டது. எனவே, விவசாயத்தைநம்பி வாழ்வு நடத்த முடியாது என்னும் உண்மையை அனுபவத்தில் கண்டுகொண்டு, உயிர் வாழ்ந்தால் போதும் என்ற முடிவிற்கு வந்து, தேயிலைப் பறிக்க-இரப்பர் பால் எடுக்க-அலுமினியச் சுரங்கத்தில் செத்துமடிய-கூலிகளாக பிறநாட்டிற்குக் கப்பலேறினர். இங்கு வேலையற்றுக்கிடந்தவர்களுக்கு—அரைவயிறு உணவும் நல்லதாக உண்டறியாதவர்களுக்கு- வேற்று நாட்டில் கிடைத்த கூலி தங்கள் உழைப்புக்குக் குறைந்ததாக இருந்தபோதிலும்-அதுவே பெருந்தொகை என்று தீர்மானித்தவர்களாகக் காலங்கடத்தி வந்தனர். இங்கு இருப்பதைக் காட்டிலும், அடிமைகளாக அயல்நாடு சென்றவர்களின் வாழ்வு கொஞ்சம் சிறந்திருக்கவே, இங்குள்ள வேலையற்றோர்களுக்கு, வெளிநாடு செல்வதில் மோகம் பிறந்தது. இதன் பலனுக மேலும் பலர் கடல் கடந்து சென்றனர். விளைவு, வேதனையைப் பெருக்கக்கூடிய தன்மை பெற்றுவிட்டது. அதாவது, வெளிநாடுகளில் ஏற்கனவே சென்று வேலைக்கமர்ந்திருப்பவர்களின் நிலை நெருக்கடியாயிற்று. மேலும் பலர் அங்கு செல்லவே, தொழிலின்தேவைக்கதிகமாக ஆட்கள் நிறம்பிவிடவே, தொழிலாளிடை போட்டிவலுத்தது. தோட்ட முதலாளிகளின் கை மேலோங்கிவிட்டது. புதிய ஆட்களை நியமித்துக் கொள்வோம் என்று மிரட்டி, பல காலமாகத் தொழில் செய்துவந்தத் தொழிலாளர்களின் கூலியை குறைக்கும் கற்பணியில் நாட்டம் செலுத்தினர் நயவஞ்சகர்கள். எங்கு வேலை போய்விடுகிறதோ என்னும் அச்சத்தால், முதலாளிகளின் போக்கை எதிர்க்கச் சக்தி அற்றவர்களாகத், தொழிலாளர்கள் முன்னிலும் எவ்வளவு குறைவாகக்கூலி இருந்தாலும் கிடைத்தது போதுமென்று, வேலையை விடாப்பிடியாகக் கட்டி அழுதனர். முன்பிருந்ததைக் காட்டிலும் வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே போய்விட்டது. இங்குச் சிந்தின கண்ணீர்

போதாதென்று, சுகந்தேடிச்சென்ற இடத்திலும் சோகத்தின் சிகரமாக வாழ்ந்து வரவேண்டியதாயிற்று!

நிலத்தை, அதில் உழைப்பவர்களின் சொத்தாக ஆங்கிலேயர்கள் இதுவரை ஆக்கி இருந்தால், இந்த நாடு இவ்வளவு வறுமை உடையதாக இருந்திருக்காது. அதுவுமன்றி மக்களின் எண்ணிக்கையும் அதிகமாகக் கூடி இருக்காது. குழந்தை இறப்பும் குறைந்திருக்கும். கல்வி அறிவும் கொஞ்சம் பெருகி இருக்கும். உற்பத்தியின் அளவும் உயர்ந்து இருக்கும். முக்கிய உணவுப் பொருட்களுக்கு வெளிநாட்டினரின் தயவை நாடவேண்டிய நம்பிக்கை அற்ற நிலையும் இருந்திருக்காது. இந்த நல்ல முறையை, வறுமையை ஓட்டும் ஆரம்ப முறையை, ஆங்கிலேயர்கள் செய்யவில்லை, அன்னியர் என்ற காரணத்தால். தங்கள் ஆட்சியை பலப்படுத்திக் கொள்வதையே குறியாகக் கொண்டிருந்தவர்கள், மக்கள் வறுமை நீங்கி வாழ்வதையும், அறிவு விளக்கம் பெறுவதையும், தங்கள் ஆட்சிக்கு அழிவை உண்டாக்குமென்று அவநம்பிக்கை கொண்டு, நிலச் சீர்திருத்தம் செய்ய முனையவில்லை. நிலப் பிரபுக்களைச் சிருஷ்டி செய்தனர். சிரஞ்சீவிகளாக்கினர். சாதாவரம் கொடுத்தனர். சங்கடத்தை விளைவித்தனர் மக்களுக்கு.

இது பழங்கதை. ஏட்டிலே இடம் பெற்றுவிட்ட செய்தி. இன்று நடப்பது, ஆங்கிலர் நீங்கிய மக்கள் அன்பைப் பெற்றுள்ள, அவர்கள் இருதயங்களில் இடம் பெற்றிருக்கும், அன்பர்கள் ஆட்சியன்றோ? பல காலத்துக்கு முன்னரே செய்யப்பட்டிருக்க வேண்டிய சீர்திருத்தத்தை, தகர்த்தெறிந்திருக்க வேண்டிய நிலப் பிரபுத்துவ முறையை, இன்னமும் ஏன் இங்கு நிறைவேற்றத் தயக்கம் காட்டப்படுகிறது?

இந்த ஆரம்ப வேலையை, என்றோ செய்திருக்கவேண்டிய பணியை, உடனடியாகச் செய்யாமல் மேலும் தள்ளிப்போடுவது, நாட்டுமக்களின் நலத்தைப் பாதிக்கக் கூடியதாகவே முடியும். மக்களிடத்தில் நாலுகாசு இருக்கவும், வாழ்க்கைத் தரம் சிறிதளவு உயரவும் வேண்டுமானால், இந்த நிலச்சீர்திருத்தத்தை இன்றே நடத்திக்காட்டவேண்டும். இதனைப் பொறுத்துத்தான் இருக்கிறது, இங்கு மற்றத்தொழில் வளம் ஏற்படுவது. தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்களை, இங்குள்ள மக்கள்தான் வாங்கியாக வேண்டும். மக்கள் வாங்குவது பெருகினால்தான் தொழிற்சாலையில் மேலும் உற்பத்தி பெருகும். உற்பத்தி பெருகினால்தான் அகவிலையும் குறையும். அகவிலை குறைந்தால்தான், அதிகமாகப் பொருட்களை வாங்க மக்களால் முடியும். அதிகமாகப்பொருட்களைவாங்க, மக்களுக்குவாங்கும் சக்தி இருக்க வேண்டும். முன்னர் குறிப்பிட்ட—பல காலமாக விடுபட்டுபோன—வெள்ளையர்கள்விரும்பாத—நிலப்பிரபுத்துவத்தைத் தொலைத்து—நிலத்தை உழவனின் சொந்தச்சொத்தாக மாற்றி அமைத்தால்தான், நாட்டு மக்களிடை வாங்கும் சக்தி ஏற்படும். இந்தச் சூழ்நிலைதான், ஒருநாட்டில் தொழில்வளத்துக்கு இருந்து தீர வேண்டிய ஆரம்பக்கட்டம். நமது முதலாளிகள் இதனை விரும்புகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. இருந்தாலும், இந்தச் சூட்சமத்தை அறிந்திருக்கிற காரணத்தால்தான் மேலும் பல புதிய தொழில்களை ஆரம்பிக்க அரசியலார் அனுமதி பெற்றிருக்கிற முதலாளிகள் முன்பின் யோசிக்கிறார்கள். அவர்கள் தயக்கத்திற்கு வேறோர் முக்கியமான காரணமும் உண்டு. அதுதான் லாப வேட்டை.

சென்ற யுத்தத்தில், தொழில் வளம் நிறைந்த அமெரிக்காவும் இங்கிலாந்தும் போர்க்கருவி செய்வதிலேயே தங்கள் இயந்திர சாதனங்கள் அனைத்தையும் உபயோகித்தன. இந்திய முதலாளிகளுக்கு இந்நிலை ஒரு எதிர் பாராத வாய்ப்பாக அமைந்துவிட்டது. வியாபாரத்துறையில் போட்டி இடும் நிலையில் இருந்த ஜப்பானும் போரில் ஈடுபட்டு விட்டதால், பாதையில் இருந்த தடைக்கல்லும் நீக்கப்பட்டுவிட்டது. பணம் குவிந்தது இந்திய முதலாளிகளிடத்தில். லாபம் நூற்றுக்கு இருநூறு முந்நூறு பங்கு என்று பெருகிற்று. எனவே, 'அந்த நாளும் வந்திடாதோ' என்று கவலை கொண்டுள்ளனர் இந்தமுதலாளிகள். எங்கு, எதுவேண்டும் தருகிறோம் என்று தடுத்தாட்கொள்ளும் முறையில் அமெரிக்கா முனைந்திருக்கிறது. இங்கிலாந்து, இழந்த முன்னாள் சந்தைகளை எப்படியாவது கைப்பற்றவேண்டுமென்று நயமாகத் தொண்டாற்றுகிறது. முன்போல்—போர்க்காலத்தில் பணம் பண்ணினது போல் இல்லாமல்—போட்டா போட்டியிலன்றோ பணம் தேடவேண்டும் — சரக்கு உயர்ந்ததாகவும் விலை நயமாகவும் இருந்தாலன்றோ நமது பொருளை விரும்பி வாங்குவார்கள் — என்ற கவலை இங்குள்ள முதலாளிகளைக் குடைந்துகொண்டிருக்கிறது. இதனால்தான், புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், ஏற்கெனவே இருக்கும் தொழிற்சாலைகளைப் பெருக்கவும் இங்கு முதலாளிகள் தயக்கம் காட்டுகிறார்கள்.

போட்டித் தொழிற் சங்கம் கண்டு—அதுவும் முதலாளிகள் முன் பணத்தில் — முதலாளிகளின் முன்னேடும் பிள்ளைகளின் பிடியில் தொழிலாளர்களின் ஒற்றுமையைக் குலைத்தாலும், வேலை நிறுத்த உரிமையை நயத்தாலும் பயத்தாலும் ஆளவந்தார்கள் சட்டத்தின் மூலம் மறுத்தாலும், பத்தாண்டு அல்ல 'பார் உள்ள அளவும்' தொழிற்சாலைகளைத் தேசியமயமாக்குவதில்லைஎன்று வாக்குறுதி கொடுத்தாலும், விரும்புகிற அளவிற்கு வரியைக் குறைத்து விடுகிறோம் என்று அபயம் அளித்தாலும், ஏற்றுமதியில் துண்டு விழும்நஷ்டத்திற்கு ஈடு செய்கிறோம் என்று இச்சகம் பேசினாலும், இங்குள்ள மக்களின் இன்றியமையாத் தேவைகளை வெளிநாட்டிலிருந்து வரவழைப்பதை அறவே தடுத்துவிடுகிறோம் என்று வாக்களித்தாலும், பொருட்களின் விலையை நிர்ணயிப்பதில் உங்கள் சொற்படியே நடந்து கொள்கிறோம் என்று நம்பிக்கை செய்தாலும், இந்த முதலாளிகளின் பிடிவாதம் மேலும் மேலும் பலப்படுமேயன்றி தளர்ந்துவிடாது.

'கட்டுப்பாட்டை நீக்கிவிட்ட சில மாதங்களில் நூறுகோடி ரூபாய் கொள்ளை அடித்தார்கள் இந்த முதலாளிகள்' 'இரத்தஉறிஞ்சிகள்' என்றெல்லாம் நெசவாலை அரசுகளைச் சமதர்ம பண்டிதர் குறிப்பிட்ட பின்னரும், தொழில் மந்திரி முகர்ஜி 'நாட்டையும் சர்க்காரையும் துரோகஞ் செய்துவிட்டார்கள் இந்த முதலாளிகள்' என்று தாட்சண்யம் காட்டாமல் பேசிவிட்ட பின்னரும், மேற்கொண்டு எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கை எவ்வாறு இருக்கவேண்டும் என்பது விளக்கமாகத் தெரியும்பொழுது, அந்தப் பாதை வழி செல்வது வளந்தரும்

(2-ம் பக்கம் பார்க்க)

கருப்புடையில் அல்ல—கதருடையில்!

8-ம் பக்கத் தொடர்ச்சி

சாராரும் திராவிடர்கழகத் திட்டத்தை அறியாது பேசுபவர்கள்.

இவர்கள், காங்கிரஸ் மந்திரிசபையின் விரோதிகள். காங்கிரஸ் விரோதிகள். பார்ப்பன விரோதிகள்—என்று, நம்மைக் கூறுகிறார்கள், நாம் மந்திரிகளின் போக்கை நிச்சயமாகக் கண்டிப்பவர்கள் தான், ஆனால் விரோதிகளல்ல, காங்கிரசின் போக்கையும் திட்டத்தையும் கண்டிக்கிறோம், ஆனால் காங்கிரஸ் விரோதிகளல்ல; பார்ப்பனீயத்தைப் பலமாகக் கண்டிக்கிறோம், ஆனால் பார்ப்பனர்களுக்கு விரோதிகளல்ல. நாம், இந்த மூன்றுவகைக் கண்டனங்களையும் செய்து வருவதால், அந்த மூவரும், காங்கிரஸ் மந்திரிகளும், காங்கிரஸ் சூத்ரதாரிகளும், பார்ப்பனர்களும், நம்மை விரோதிக்கிறார்கள், எதிர்க்கிறார்கள், நமது வாழ்வைக் குலைக்கும் வேலையைத் திறம்படச் செய்தும் வருகிறார்கள். நாம், அந்த மூன்று வகையினரின் போக்கைக் கண்டிப்பவர்கள் என்பதை மறைக்கவில்லை, ஆனால் அந்த மூன்று வகையினருக்கும் நாங்கள் விரோதிகள் என்ற குற்றச்சாட்டை மறுக்கிறோம். நாங்கள் அவர்களுக்கு அல்ல, ஆதிக்கக்காரர் யாராக இருப்பினும் என்ன உருவில் இருப்பினும், எந்தப் பெயருடன் இருப்பினும், அவர்களை எதிர்ப்பவர்கள் தான்.

நாங்கள், காங்கிரஸ் மந்திரிசபையின் அரசியல் விரோதிகளாகமட்டும் இருப்பின், இப்படி ஒருமாநாடு தேவையா, கூடினாலும், மதுரை வைத்யநாதஐயரும், மடிசஞ்சி வரதாச்சாரியாரும், காசாசுப்பாராவும், ஆந்திரப்பிரகாசமுமல்லவா, மேடையில்கொலுவீற்றிருப்பர். மந்திராலோசனை நடத்தி மந்திரிசபையைக் கவிழ்க்கச் சதி நடக்குமேயன்றி, மாநாடா கூட்டுவோம்! காங்கிரஸ் மந்திரிகளின்மீது மட்டும் விரோதம் கொண்டவர்களாக இருந்தால், ஈரோடல்ல, மைலையும் திருவல்லிக்கேணியுமல்லவா, முகாம்களாக இருக்கும்—காங்கிரஸ் மந்திரிகளைக் கவிழ்ப்பது தான் எமது நோக்கமென்றால், அறப்போர் ஏன் தொடுக்கப் போகிறோம், இந்த மந்திரிசபையை அடுத்துக் கெடுப்பவர்கள் அமைக்கும் அணிவகுப்பிலல்லவா இருப்போம். இந்த மந்திரிகள் வேண்டாம், வேறுசிலர், இன்னின்னவர்கள் மந்திரிகளானால் நல்லது என்று நாங்கள் சொல்கிறோமா, எண்ணுகிறோமா—இவர்களிடம் இலாபத்தை எதிர்பார்த்து மோசம்போனவர்கள் அவ்விதம் எண்ணுவர்—நாங்கள் அவ்விதம் அல்ல. நாங்கள் இந்த மந்திரிகளின் போக்கைக் கண்டிக்கிறோம், விரோதத்தால் அல்ல—உள் எண்ணம் ஏதேனும் வைத்துக் கொண்டு அல்ல, நாங்கள் மிகமிக அழுத்தமாக நம்பும் கொள்கைகளைக் கெடுக்கவும், எங்கள் இலட்சியத்தைப் பாழாக்கவும் இவர்கள் பயன்படுகிறார்களே, பணி புரிகிறார்களே, என்பதால்—பதவியிலிருந்து இவர்களை விரட்டிவிட்டு, நாம் அமரலாம் என்பதற்கோ, வேறு யாரையேனும் அமரச்செய்து பல்லிளிக்கும் பஞ்சைப் புத்திகொண்டோ அல்ல. பாதையிலே செல்லும் போது, பச்சைக்கொடி ஒன்று பாதத்தைச் சுற்றிக்கொண்டால், அதை எடுத்தெறிந்துவிட்டுச் செல்பவனுக்கு, பச்சைக்கொடியினிடமா பகை! அவனுடைய வேலை, பச்சைக்கொடியை அறுத்து எறிவதா—அல்ல—அவன் மேற்கொண்டுள்ள பெரும்பணிக்காக, அவன் செல்கையில், பாதையிலே, இந்தக்கொடி படர்ந்து இருப்பதுடன், பாதத்தையும் பற்றிக் கொள்வதால், அந்தக் கொடியை எடுத்தெறிய நேரிடுகிறது. அவரைக் கொடியிடம் விரோதம், சுரைக் கொடியிடம் பாசம்என்று, பொருள்! அது போலவே, நாம் மனப்பூர்வமாக நம்புகிற, குறிக்கோளைப் பெற நடாத்தும் விடுதலைப் போர்ப்பாதையிலே, இந்த மந்திரிசபை குறுக்கிட்டுத் தடுப்பதால் தான், இதைக் கண்டிக்கவும் எதிர்க்கவும் நேரிடுகிறது—விரோதமல்ல, வஞ்சகமல்ல, பதவிப் பித்தல்ல, இவைகளும் இவைகளை விட மோசமான குணங்களும் கொண்டவர்கள், அங்கேயே இருக்கிறார்கள், வந்தேமாதரம் பாடும் வாயினர், கதர் உடையினர், மந்திரிகளின் சொந்தக் கட்சியினரில் சிலர் செய்கிறார்கள் அந்தக் காரியத்தை.

எமது நோக்கமும் திட்டமும்வேறு. இவர்கள் மந்திரிசபைக்கு விரோதிகள்—கவிழ்க்க விரும்புகிறார்கள், என்று ஓயாது நமது மந்திரிமார்கள் பேசுகிறார்கள் — அவர்கள் கவிழப் போவது நிச்சயம்—ஆனால் எங்களால் அல்ல—ரோம்நாட்டு மாவீரனைக் குத்திக்கொன்றது, அவனுடைய விரோதிமுகாமில் இருந்தவனல்ல, நீயுமா புரூடஸ்! என்று உள்ளம் வெடித்துக் கதறினான், எதற்கும் கலங்காத அந்த மாவீரன், தன் கூடவே குலவிக்கொண்டிருந்த புரூடஸ் தன்னைக் குத்துவதுகண்டு. **மந்திரிசபைக்கும் புரூடஸ்கள் இருக்கிறார்கள் கருப்புடையில் அல்ல, கதர் உடையில்!**

அதுபோலவே, எங்களைக் காங்கிரசின் விரோதிகள் என்று, காரணமோ, கருத்துள்ள விளக்கமோ கூறாது கூறுகின்றனர் - சிலருக்குச் சில பண்டம் பிடிப்பதில்லை என்பது போல, எங்களுக்கு, ஏனோ காங்கிரஸ் என்றால் பிடிப்பதில்லை, அதை விரோதிக்கிறோம், எதிர்க்கிறோம் என்று கூறுகிறார்கள். காங்கிரசை விரோதிப்பதுதான் எங்கள் வேலை என்றால், எங்கள் முகாம் இப்படியா இருக்கும்-சோளக் கஞ்சிக்கலயத்தை ஏந்தியவர்களின் கூட்டமாகவா இருக்கும், சொர்ணபுரி வாசிகள், வட்டியூர் வேந்தர்கள், ஜெமீன்தார்கள், மிட்டா மிராசுகள், மேனா மினுக்கிகள், மேட்டுக் குடியினர், ஆரியோரும், பச்சை வைதீகப் பார்ப்பனரும், மடாதிபதிகளும், ஜீயர்களும், காங்கிரசை விரோதிக்கும் சகலரும் ஒன்றுசேர்த்த முகாமாகவல்லவா இருக்கும்! இங்கே இப்போது உள்ளவர்கள் யார்? பாடுபடாமல் பிழைக்கும் பிரபுக்களா, பரம்பரைப் பாத்யதையால் கொழுக்கும் சீமான்களா உள்ளனர்! பாட்டாளிகள்! பட்டினியின் கொடுமையை, பாடல் கேட்டு அல்ல, படித்துப் பார்த்து அல்ல, அனுபவத்தால் அறிந்தவர்கள்—சரிந்த சுவருள்ள வீடுகளில் இருந்து வரும் கருகிய வாழ்வினர், வாழ்க்கைப் புயலில் சிக்கிச் சிதைந்தவர்கள், வர்ணாஸ்ரமக் கொடுமைக்காளாகி வதைந்தவர்கள், இவர்களல்லவா உள்ளனர்! ஆலை அரசர்களா, பண்ணை முதலாளிகளா, வியாபாரக் கோமான்களா, வட்டியால் வாழுபவர்களா, காளைகள், பாடுபட முடியும் என்ற உறுதியும் உடலமைப்பும் உள்ள அமைப்பும் கொண்டவர்கள், உழைத்து அலுத்த

பதவிபெறும் பஞ்சை புத்தியல்ல!

உத்தமர்கள், எத்தர்களல்ல, சித்து விளையாடுவர்களல்ல, சொத்து சுகத்தில் புரள்பவர்களல்ல, திராவிடர் கழகத்தார்; காங்கிரசை விரோதிப்பது மட்டுமே எங்கள் இலட்சியம், என்று இருந்தால், இங்கு வரிசை வரிசையாக, ஜெமீன்தார்களும், மிட்டா மிராசுதார்களும், கொள்ளை அடிக்கும் மற்றவர்களும் வீற்றிருக்கச் செய்யலாமே! ஏன் அவர்களை நாங்கள், அண்ட விடுவதில்லை. ஏன், சேலம் மாநாட்டிலே அப்படிப்பட்டவர்கள், புண்ணில் தீபட்டவர்கள் போல, ஓடினர். காங்கிரசை எதிர்ப்பது, ஒன்றுதான் எங்கள் வேலை என்றால், நாங்கள் காங்கிரசினிடம் யாருக்கு விரோதம் இருக்கிறது என்பதைக் கண்டு, அவர்களை எல்லாம் ஒன்று திரட்டியல்லவா, ஒரு முகாம் அமைக்கவேண்டும். செய்தோமா? செய்கிறோமா? செய்வோமா? ஒருக்காலும் இல்லை. காங்கிரசைக் கண்டிக்கிறோம் — காரணத்தோடு — ஆகவே வேறு காரணங்களுக்காகக் காங்கிரசை விரோதிப்பவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து, காங்கிரசை எதிர்ப்பது என்ற கேவல புத்தி ஏற்படவில்லை.

சில ஜெமீன்தார்கள் உள்ளூர எண்ணுவர், காங்கிரசால் தங்கள் வாழ்வுக்குக் கேடு வரும், ஆகவே காங்கிரசை அழிக்கவேண்டும் என்று —விளக்கமற்றவர்கள் அவ்விதம் எண்ணுவர்—எங்கள் வேலை காங்கிரசை எதிர்ப்பது ஒன்றுதான் என்றால் அந்த ஜெமீன்தார்களை அல்லவா நாடுவோம், அவர்களின் புகழை அல்லவா பாடுவோம்—செய்கிறோமா—விரல் விட்டுக் காட்டட்டுமே எங்களிடம் ஜெமீன்தார்கள் யாராவது இருக்கிறார்களா என்று, நாடகத்தில் ஜெமீன்தார் வேஷத்தில் வருபவர் தவிர! ஏன் சேர்க்கவில்லை. எங்கள் நோக்கம், காங்கிரசை எதிர்ப்பது மட்டுமல்ல—காங்கிரசினால், எங்கள் இலட்சியப்பாதைக்கு போடப்படும் தடைகளை நீக்குவதுதான் எங்கள் நோக்கமே தவிர, கண்மூடித்தனமாகக் காங்கிரசை எதிர்ப்பதை ஒரு சுபாவமாகக் கொள்வது அல்ல— அப்படிப்பட்ட இயல்பினராக நாங்கள் இருந்தால், தர்பார் சுந்தரர்களை எல்லாம், கொண்ட முகாம் அமைந்திருக்கும். எங்கள் முகாம் அப்படிப் பட்டதல்ல.

அதுபோலவே நாங்கள் பார்ப்பனத் துவேஷிகள் என்று கூறப்படுகிறதே, அது உண்மையானால், சங்கராச்சாரியார் பார்ப்பனர் என்பதற்காக அவரை வெறுத்து, தம்பிரான் தமிழர் என்பதற்காக அவரை ஆதரித்து, சர். சி. பி. பார்ப்பனர் என்பதற்காக அவரைக் கண்டித்து சர் சண்முகம் தமிழர் என்பதற்காக அவரிடம் சரச சல்லாபம் செய்து, ஆச்சாரியார் பார்ப்பனர் என்பதற்காக அவரைக் கண்டித்து, அவினாசி தமிழர் என்பதற்காக அவரை ஆதரித்து, பி ஸ்ரீ, பார்ப்பனர் என்பதற்காக அவரைக் கண்டித்து, டி. கே. சி. தமிழர் என்பதற்காக அவரை ஆதரித்து, கபிலர் பார்ப்பனர் என்பதற்காக அவரைக் கண்டித்து, கம்பர் தமிழர் என்பதற்காக அவரை ஆதரித்து, வருவ, அர்த்தமற்ற போக்கைக் கொண்டிருப்போமே! பார்ப்பனர்களிடம் துவேஷம் இருப்பது மட்டுந்தான் எங்கள் வேலை என்றால், ஈரோடு அல்லவே, கழகத்தின் தலைமைப் பீடம் இருக்க வேண்டிய இடம், திருநெல்வேலியில்லவா இருக்கும் - சயமரியாதைப் படையா திரட்டுவது அதற்கு, சைவ மெய்யன்பர்களின் திருக்கூட்டமல்லவா, திரண்டிருக்கவேண்டும். பார்ப்பனரிடம் துவேஷம் கொண்டவர்கள் என்று கூறுவது, பொருளற்ற குற்றச்சாட்டு. மடிசஞ்சியும் மணி உருட்டியும், பஞ்சாங்கமும் பழமைப் பித்தும், ஜாதி அகம்பாவமும் எங்கு இருந்தாலும் எங்களுக்குப் பிடிக்காதே! பார்ப்பனரிடம் இவை இருந்தால் எந்த அளவுக்குக் கோபம் வருகிறதோ, அதைவிட வேண்டுமானால் சற்று அதிகமான அளவு கோபம் வருகிறது, இந்தக் குணங்கள் தமிழரிடம் இருக்கக்கண்டால். பார்ப்பனர்களிடம் ஏதோ பாகப் பிரிவினைத் தகராறா, பலன் எதிர்பார்த்து ஏதேனும் ஏமாற்றமா, இல்லையே! அவர்களை விரோதிப்பதை மட்டும் ஒரு வேலையாக, ஒரு கட்சி கொள்ளுமா, இவ்வளவு வருஷ காலமாக — எவ்வளவோ இன்னல்களைத் தாங்கிக் கொண்டு, இன்பங்களை இழந்து. நமது குறிக்கோளை அடைய நாம் மேற்கொண்டுள்ள இலட்சியப் பயணத்திலே, பார்ப்பனீயம் குறுக்கிட்டுக் கெடுப்பதால், அதை அகற்ற முனைகிறோம்—பாதையிலே படுகுழி இருந்தால், அதை அடைக்க முற்படமாட்டோமா, அதுபோல.

காங்கிரஸ் மந்திரிகளைக் கண்டிப்பது, காங்கிரசை எதிர்ப்பது, பார்ப்பனீயக் கண்டனம், எனும் இவை யாவும், எங்களின், குறிக்கோளுக்கு வழி அமைக்கும் காரியமே தவிர, இவைகள் எமது இயல்பு, இவைகளைச் செய்வதே எங்கள் வேலை, என்று எண்ணுவது, எங்கள் இலட்சியத்தை உணராததால் வரும் தவறு என்று கூறுவோம்.

ரஜாக்கர்களைச் சிறைப்படுத்தி, ரஜ்வியைப் பிடித்தது எப்படி, நிஜாமின ஆட்சி முறையை மாற்றி அமைத்து, ஹைதராபாத் சமஸ்தானத்தில் மக்களாட்சி அமைப்பது என்ற மகத்தான இலட்சியப் பாதையிலே, குறுக்கே நேரிட்ட சம்பவங்களோ, அதைப் போலவேதான், நாட்டுக்குப் புதியதோர் நிலையை அமைக்கவேண்டும் என்ற எங்கள் இலட்சியப் பாதையிலே, செல்லும்போது, எங்களுக்கு ஏற்படும் சிரமங்களாக, மந்திரி சபையைக் கண்டிப்பது, காங்கிரசை எதிர்ப்பது, பார்ப்பனீயத்தைக் கண்டிப்பது என்பவைகளைக் கொள்ளுகிறோமே யொழிய, இவைகளேதான் எமது வேலை என்று எண்ணும் ஏமாளிகளல்ல நாங்கள்.

இந்த நாட்டிலே புதியதோர் நிலை ஏற்படவேண்டும் என்பது எமது குறிக்கோள். கட்சி ஆதிக்கக் காரணத்துக்காக அல்ல—பதவி பெறும் பஞ்சைப் புத்திக்காக அல்ல—மக்களின் புதுவாழ்வு எனும் பெருநோக்கத்துக்காக. இந்தப் பெரும் பணியைத் தொடர்ந்து நடத்தும்போது, ஏதேது தடைகளாக, வந்து குறுக்கிட்டு, எங்கள் காரியத்தைக் குலைக்கின்றனவோ, அவைகளை எல்லாம், நாங்கள் எதிர்க்க நேரிடுகிறது — ஆனால், அவ்வப்போது எழுகிற எந்த எதிர்ப்பும், இறுதியானது என்றோ, அது ஒன்றுதான் எங்கள் எண்ணமென்றோ கொள்ளக்கூடாது.

இந்த சூட்சமத்தை நம்மை நிந்திப்பவர்கள் மட்டுமல்ல, நமது நண்பர்களும், சற்று மனதிலே பதியவைக்க வேண்டும்.

புதியநிலை--புதிய மந்திரிசபை அல்ல!

மந்திரி சபையின் போக்கை நாம் எதிர்க்கும்போது, சரி, சரி, இந்த மந்திரிகளைக் கவிழ்ப்பதுதான்வேலை, ஆகவே அதற்காக, யாராரை நாடலாம், எவரெவருடன் சேரலாம் என்றல்ல, நமது நண்பர்கள் எண்ண வேண்டியது. காங்கிரசைக் கண்டிக்கிறோம் என்றால், பல்வேறு காரணங்களால் காங்கிரசின் விரோதிகளாக்கப்பட்ட அனைவரும், நமது கூட்டுத் தோழர்கள், நண்பர்கள், என்று எண்ணி உறவு கொண்டாடுவதல்ல, நமது நோக்கம். பார்ப்பனீயத்தைக் கண்டிக்கிறோம் என்றால், அதற்காக, பழைமை விரும்பிகளாயினும் தமிழராக இருந்தால் போதும் என்று எண்ணி, அவர்களைப் படையில் சேர்ப்பது அல்ல, நமது நோக்கம்.

நாம் ஓர் தனியான நோக்கம் கொண்ட, படையினர்! பாதை, மிக மிகக் கடினமானது. மிரட்டுபவர்களைவிட, மயக்குபவர்கள் அதிகம் அந்தப் பாதையில்! படுகுழியின் மீது பச்சிலைபோட்டு மூடப்பட்டிருக்கும்! கொட்டும் வண்டுகள் மட்டுமல்ல, கூவும்குயில்களும் இருக்கும்-வண்டை விரட்டிவிட்டால் மட்டும் போதாது, குயில் மொழியில் சொக்கிக் கடமையை மறந்துவிடாமலும் இருக்கவேண்டும். இது மட்டுமல்ல, கிளி நிறத்தில் கழுகுகள் காணப்படும்—உருவையும் நிறத்தையும் கண்டு மட்டும், குணத்தை நிர்ணயிக்க முடியாது. இப்படிப்பட்ட பாதையிலே செல்லும், விடுதலைப் போர் வீரர்களாகிய நாம், ஓர் இலட்சிய பூமியை நாடிச்செல்கிறோம்—அந்த இலட்சியத்தை கெடுக்கக்கூடியவைகளை நாம் எதிர்க்கிறோம்—எதிர்ப்பு மட்டுமே நமது முழுவேலையல்ல—எதிர்ப்புடன் நமது வேலை முடிவதுமல்ல—அந்த எதிர்ப்பு, நமது பெரும்பணிக்குத் தேவைப்படுவதால் எதிர்க்கிறோம், பாதையில் மேலால் செல்லவேண்டும், குறிக்கோளை அடைய.

நாட்டுக்குப் புதியநிலை வேண்டும் என்பது நமது குறிக்கோள் என்று கூறினேன்—புதிய மந்திரி சபை என்று கூறவில்லை, புதிய கட்சியின் ஆட்சி என்று கூடக் கூறவில்லை—புதிய நிலை வேண்டும்—ஆட்சி மட்டுமல்ல, மக்களின் நோக்கமே மாற வேண்டும்-புதிய நிலை பிறக்கவேண்டுமானால், ஆள்பவர்கள் மாறிவிட்டால் மட்டும் போதாது, ஆட்சிக்கு உட்பட்டுள்ள மக்களின் எண்ணம் மாற வேண்டும்—கருத்திலே ஓர் புரட்சி ஏற்படவேண்டும். இந்தக் குறிக்கோள் கொண்டிருப்பதால் தான், நமது பணி, கடினமானதாக மட்டுமல்ல, விரைவில் முடியக்கூடியதாகவும் இருப்பதில்லை, உடனடிப்பலன்களைக் காண முடிவதில்லை—அரசியல் இலாபச் சூதாட்டக்காரர்கள் இப்படிப்பட்ட இயக்கத்தை விரும்ப மாட்டார்கள்-அறப்போர் வீரர்கள் மட்டுமே விரும்புவர்.

உடனடியான அரசியல் இலாபத்தை விரும்புபவர்கள் வெட்டுக்கிளிகள் போல், இங்கும்அங்கும் தாவுவர்,—மரம் பழுத்தால் வௌவாலாவர், புயலடிக்குமென்று தெரிந்தால், சந்துபொந்துகளைத் தேடிக்கொள்வர்—கஷ்ட நஷ்டம் வருமெனத் தெரிந்தால், காவடி தூக்குவர், உடனுக்குடன் கணக்குப் பார்த்துக் களிப்படைவர்.

நாம் மேற்கொண்ட இலட்சியம், அவ்விதமானதல்ல. விஞ்ஞானி, தொலைவிலிருப்பதைக் காண ஓர் கருவி கண்டுபிடிக்கிறான், ஆனால் அந்தக் கருவியுடன் திருப்திபடுவதில்லை. அதன் உதவியால், கிரஹங்களைக் காணமுடிகிறது, களிப்பு வருகிறது, ஆனால் அந்தக் களிப்புபோதுமென்று அவன் இருப்பதில்லை, அந்தக் கிரஹங்களைப் பற்றிய சகலமும் தெரிய வேண்டுமென்று ஆசைப்படுகிறான், தெரிந்தான பிறகு, அந்த அறிவை எப்படிப் பயன் படுத்துவது என்று மேலும் சிந்திக்கிறான்-ஒரு வெற்றி வேறு வேலைக்கு வாயற்படியாகிறது, அவனுடைய பணி, வளர்ந்தபடி இருக்கும் - இடையே நின்றுவிடாது.

நாம் அமைத்துக் கொண்டுள்ள பணி, அது போன்றது. மந்திரி சபையிலே மாற்றங்கள், உத்யோக மண்டலங்களிலே மாற்றங்கள் ஏற்படுவதால் மட்டும் நமது மனம் திருப்தி அடைந்து விடுவதில்லை-இவைகளின்காரணமாக,நாட்டுக்குப் புதிய நிலை என்ற நமது குறிக்கோள் ஈடேற என்னென்ன வழிவகை கிடைத்தது என்பது தான் நமது சிந்தனையாகிறது.

இருபதாண்டுகளுக்கு முன்பு வக்கீல்களிலே தலை சிறந்தவர் யார், அல்லாடி, டாக்டர்களிலே தலை சிறந்தவர் யார், ரங்காச்சாரி. பேச்சாளரிலே சிறந்தவர் யார், மகாகனம் சாஸ்திரி, பாடகர்களிலேசிறந்தவர் யார் அரியகுடி, நாடகத்திலே சிறந்தவர் யார், கிட்டப்பா, நகைச்சுவையிலே சிறந்தவர் யார் சாமண்ணா, என்று பல்வேறு துறைகளிலும் இருந்தபோது, இப்படியும் இருப்பதா, ஒரு சிறு கூட்டத்தாராகிய ஒரு வகுப்பாருக்கு மட்டுந்தானா, இப்படி வாய்ப்புகள் இருப்பது, மற்ற வகுப்பிலே உள்ளவர்கள் மரக் கட்டைகளா என்று மனக் கொதிப்பு ஏற்பட்டது, கிளர்ச்சி வலுத்தது, எழுச்சி ஏற்பட்டது, விழிப்பு உண்டாயிற்று, வெற்றியும் கிடைத்தது; பாரிஸ்டர் எதிராஜும் ஜட்ஜ் சோமசுந்தரமும், டாக்டர் குருசாமியும், சர். இராமசாமியும், சித்தூரும், தேசிகரும், பாகவதரும், நமது நகைச்சுவை அரசரும் இன்று தோன்றிவிட்டனர். எந்தத் துறையானாலும், எம்மால் முடியும் வெற்றி பெற, திறமை உண்டு, தடைகள் மட்டும் நீக்கப்பட்டால், என்று கூறிடும், ஆற்றலரசர்கள் இவர்கள். அக மகிழ்ச்சியும் பெருமையும் நமக்கெல்லாம் ஏற்படுகிறது, ஆனால், தீர்ந்தது நமதுபணி என்ற முழுத்திருப்தி ஏற்பட்டு விடுகிறதா,-இல்லை-இவர்கள், வெற்றி வீரர்களாயினர், இனி, இவர்களின் திறமையினால், நாடு அடையவேண்டிய நற்பயன்களை காணவேண்டுமே என்ற ஆவல் பிறக்கிறது-இவர்களில் பலரை, நாமே இடித்துக்கூறி, திறமை இருக்கிறது அதனை நாட்டுக்குப் பயன்படுத்துக, என்று வலியுறுத்தவும் நேரிடுகிறது. தேசிகரின் தீஞ்சுவை இசை மட்டும் போதுமானதாக இல்லை, நமது மனதுக்கு. அவர், தில்லையில் உள்ள அப்பனைப் பற்றி மட்டும் பாடிக்கொண்டிருக்கிறாரே, பயன் என்ன, கொல்லையில் உழும் குப்பனைப் பற்றியும் அவன் உழைப்பை உறிஞ்சும் சுப்பனைப் பற்றியும் பாடி மக்களுக்கு மதியும் புகட்டவேண்டுமே, மதுரக் கீதம் செவி அளவுக்குப் பயன் பட்டால் போதுமா, என்ற எண்ணம் தோன்றுகிறது.

பார்ப்பனரிடம் துவேஷம் கொண்டிருப்பதுதான் நமது போக்கு, என்று அவர்கள் கூறு

வெற்றி பெற்றும் வேதனை!

வது உண்மையாக இருக்குமானால், நாம், பார்ப்பனர் ஆண்டு அனுபவித்துக் கொண்டிருந்த இடங்களை எல்லாம், தமிழர் கைப்பற்றி அரசு செலுத்தும் காட்சியைக் கண்டு களிப்படைந்து, நமது பணி முடிந்தது, என்று திருப்தியடைந்து, மகிழ்ச்சியுடன், மங்களம் பாடிவிட்டிருப்போம். ஆனால், தமிழர்கள் எல்லாத் துறைகளிலும் ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கே ஏகபோக மிராசு இருந்து வரும் கொடுமையைத் தகர்த்துவிட்டது கண்டு நாம் கொண்ட மகிழ்ச்சியுடன் நாம் ஓய்ந்துவிடவில்லை. வெற்றியின்மூலம் அவர்கள் ஒரு அநீதியைத்தொலைத்தார்கள்- இனித்தமது திறமையின்மூலம், நாட்டுக்கு நற்பணியாற்ற வேண்டும், நமது குறிக்கோள் நிறைவேற உதவி புரியவேண்டும் என்று தோன்றுகிறது.

கனவில் வந்தானே,
என்னைக்கலந்திருந்தானே!

என்ற கீதத்தை, பாடுபவர் யாராக இருந்தால் என்ன, அரியக்குடியானாலும் தேசிகரானாலும், நாம் விரும்ப முடியுமா-நாட்டுக்குப் பயன் படுமா! நாம் அரியக்குடிக்குப் பதில் தேசிகர் என்பதிலே மட்டும் அற்பசந்தோஷம் கொள்ளும், துவேஷ புத்தியில்லாதவர்களாகையால்தான், தேசிகர் பாடும்போதும், மக்களின் புதுவாழ்வுக்குப்பயன்படும்விதமாக உமது இசைத்திறமையைப் பயன்படுத்துங்கள் என்று கூறுகிறோம் - சற்றுகாரமாகவேகூட.

எல்லாத் துறைகளிலும் நாம், விரும்பும் மாற்றம், இரண்டு-ஒன்று சகலதுறையிலும் ஒரே வகுப்பார் ஏகபோக ஆட்சி செய்யும் கொடுமை ஒழிந்தாக வேண்டும் என்பது, மற்றொன்று, எல்லாத்துறைகளின் மூலமும் நாட்டுக்குப்புதிய நிலைஉண்டாக்கத்தக்க பணிபுரிய வேண்டும் என்பது.

ஓரளவுக்கு முதல்நோக்கம்வெற்றி பெற்றுவிட்டது. வெற்றிதொடர்ந்து கிடைத்துக்கொண்டே வருகிறது. டாக்டர் ராஜன் இருக்க ஓமந்தூரார் முதலமைச்சரானதும், ஆச்சாரியாரை வீழ்த்திவிட்டுக் காமராஜர் தலைவரானதும், இந்த வெற்றியை விளக்கும், மகத்தான எடுத்துக்காட்டுகள். நமது நோக்கத்தின் இரண்டாம் பகுதி பாக்கியாக இருக்கிறது என்பதை இந்த இருவெற்றிகளின் விளைவுகள் நமக்கு மிக மிக நன்றாகக் கவனப்படுத்துகின்றன.

ஓமந்தூரார் ஆட்சி செய்கிறார்—வெற்றி, ஆனால் அவருடைய ஆட்சி முறை நாட்டுக்குப் புதிய நிலைஎனும் நமது குறிக்கோளுக்கு ஊறு செய்கிறது, இது வேதனை! வெற்றி, வேதனை!! வெற்றி பெற்றும் வேதனை! மற்றோர் வெற்றி பெறுவதன் மூலமே, இந்த வேதனை துடைக்கப் படமுடியும்-எனவே முதல் வெற்றியுடன் நமது வேலை முடிந்துவிடவில்லை, பணி இருக்கிறது. நாட்டுக்குப் புதியநிலை ஏற்படுத்தும் காரியத்தை, யாருடைய உதவியைக் கொண்டேனும், எவருடைய கூட்டுறவின் பலத்தாலேனும், எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றுவதால் சாதித்துக்கொள்ளமுடியுமா என்று கேட்டால், நிச்சயமாக முடியாது. நாட்டிலே புதிய நிலையை ஏற்படுத்துவதற்கான முழுப்பலமும் தக்க ஆதரவும் கிடைக்காதமுன்பு, ஆட்சியில் அமருவதைத் திட்டமாகக் கொள்வதும், வெல்வட்டு மெத்தை மீது விழியைவைத்துக்கொண்டிருக்கும் அரசியல் சூதாடிகளுக்குப்பயன் படுவதும் ஆகாது என்று திராவிடர் கழகம் கருதுகிறது. நாட்டுக்குப் புதிய நிலை அமையவேண்டும், என்ற விரிவான தன் திட்டத்தை, வலியுறுத்தியவண்ணம் இருக்கிறது - நாட்டு மக்களின் நோக்கம் அதுபோலாக வேண்டுமென்று.

அதை எல்லாம் கூறிக்கொண்டிருப்பானேன், காங்கிரசின் தவறுகளைக் கூறி, காங்கிரசாட்சியிலே அதிர்ப்திப்பட்டவர்களை எல்லாம் ஒன்று திரட்டி, தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால், பிறகு, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து, 'ஒரு கை'' பார்த்துவிடலாமே என்ற அபூர்வ யோசனையை அருளுபவர்கள் உண்டு. திராவிடர் கழகம், அவ்விதமான நிலையற்ற, பொருளற்ற பயன்தரமுடியாத அரசியல் விளையாட்டை மதிக்கமறுக்கிறது. தேர்தல் இனி, அப்படி ஒன்றும், காங்கிரசுக்கே 'வரம்' அளிக்கும் 'தேவி'யாகஇருக்கப்போவதில்லை. மங்களகரமானது மஞ்சள் பெட்டி என்ற பேச்சு மறைகிறது — மஞ்சப் பெட்டி பஞ்சப் பெட்டி என்ற பேச்சு பரவுகிறது. அறிவோம். ஆளவந்தார்கள் அறியவேண்டும். சமீபத்தில், நடைபெற்ற ஒரு உப தேர்தல் அவர்களுக்கு அந்தப் பாடத்தைக் கற்பித்திருக்க வேண்டும். காங்கிரசின் சார்பிலே, நின்றவர், கோபாலசாமி எனும் பார்ப்பனப் பிரமுகர்—பண வசதியுடன் பிரசார வசதியும் படைத்தவர். பத்திரிகைகள் அவருக்காகப் பரிந்து பேசின. மந்திரிகள் விரைந்து சென்றனர், அவருக்கு ஆதரவு தேட. சுழற்காற்றெனச் சுற்றித் திரிந்தார் டாக்டர் சுப்பராயன்; காமராஜர் கர்ஜனை செய்தார். முதலமைச்சர் அறிக்கை விடுத்திருந்தார். மோட்டார்கள் பல, பல வகையின! இவ்வளவுக்கும் எதிராக கரூர் ரத்தினம்-எந்தக் கட்சியின் சார்பிலும் அல்ல - தனிப்பட்ட முறையில். அவர் புகழ்பாட பத்திரிகைகள் இல்லை — அவருக்குப் பிரசாரம் செய்ய ஆட்கள் இல்லை—பவனிக்கு மோட்டார் இல்லை—பணம் இல்லை- அவர் சார்ந்திருந்த திராவிடர் கழகத்திலிருந்து அவர் விலகியே, தேர்தலுக்கு நிற்க முடிந்தது—கழகம் அதிலே கலந்து கொள்ளவில்லை, சேலம் தீர்மானப்படி. அவர்மீது சர்க்கார், கரூர் கலவர வழக்கின்போது, தீமூட்டுதல்முதல் கொள்ளை அடிக்கத் தூண்டுதல் என்பது வரையிலே, பல செக்ஷன்களைச் சுமத்தி இருந்தது— வழக்கு தள்ளுபடியாயிற்று. அப்படிப்பட்டவர் மகத்தான, பலம் பொருந்திய, கட்டுப்பாடுமிகுந்த காங்கிரஸ் ஸ்தாபனப் பிரதிநிதியை எதிர்த்து நின்றார். அவருக்கு ஏழாயிரத்துச் சில்லரை ஓட்டுக்கள் — கோபாலசாமியாருக்குப் பத்தாயிரம். வெற்றி சட்டசபையில் இடம் வாங்கிக் கொடுத்துவிட்டது, ஆனால் மக்களின் மனப் போக்கு, எவ்வளவு தூரம் மாற்றமடைந்துவிட்டது என்பதையும் தேர்தல் காட்டியிருக்கிறது — கருத்துடன் இதனைக் கவனிப்போர் அறிவர் —எவ்வளவோ பக்கபலம் இருந்தும் கோபாலசாமியாருக்குக் கிடைத்த ஓட்டுகள் எவ்வளவு — கட்சிப் பலம், பிரசார பலம், பணபலம் அற்ற, தனி நபருக்கு, எவ்வளவு ஓட்டுகள் கிடைத்தன — இந்த நிலை எதைக் காட்டுகிறது—மஞ்சள்

கம்பர் விழாவுக்கும் போலீஸ் படை

பெட்டியின் மகத்துவம் மங்கி வருவதைத்தானே—இந்நிலையில் நாட்டுக்குப் புதிய நிலை வேண்டும் என்ற திட்டத்தைத் தளர்த்திக்கொண்டு, எப்படியாவது ஆளவந்துள்ள காங்கிரஸ் கட்சியினரைத் தோற்கடிக்க வேண்டும் என்று மட்டும் நோக்கம் கொண்டு, திராவிடர்கழகம், சக்திவங்களைத் தேர்தலுக்கு நிறுத்தினால், கோபாலசாமிகளின் கதி என்ன ஆகும், என்பது பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திறமையும் விவேகமும் உள்ள இசைவாணன், ஒரு துளி 'ஸ்ருதி' கலையும் போதே உணர்ந்துகொள்வான்-மட்டரகவித்வான், சபையோர், கை கொட்டி நகைத்த பிறகும், ஏன்? என்ன விஷயம் என்று கேட்பான்! அரசியல் யூகம் இருக்குமானால், காங்கிரசார், இந்த இடைக்காலத் தேர்தல் காட்டிய பாடத்தை உணரலாம். உணருவரா!

ஆட்சிக்கு வருவதென்பது அவ்வளவு கடினமானதல்ல-ஆனை மயக்கும் பேச்சுப்பேசுவதும், கடினமானதல்ல-கூட்டுத் தோழர்களைத் தேடிப் பிடிப்பதும் முடியாத காரியமல்ல, இவைகளின் மூலம், தேர்தலில் வெற்றி பெற்று, நாம் ஆளும் கட்சியாக மாறுவதும், நடைபெற முடியாத நிகழ்ச்சியல்ல. ஆனால் நமது நோக்கம் அதுவல்லவே! நாட்டுக்குப் புதிய நிலை வேண்டும். நமது குறிக்கோள் அது. அந்தக் குறிக்கோளுக்கு ஊறு செய்யும் திட்டம், இந்த இந்திநுழைவு—எனவேதான் இதனை எதிர்க்கிறோம், மற்றும் நாம் கண்டிக்கும், பல்வேறு சக்திகளும், இந்த நமது குறிக்கோளைக் கெடுப்பனவாக இருப்பதனாலேயே எதிர்க்கிறோமே ஒழிய, எப்படியோ ஒன்று பதவிக்கு வருவது என்பதற்காக அல்ல.

நாட்டுக்குப் புதிய நிலை வேண்டும்-என்ற நம்முடைய, திட்டத்தைத்தான், கூறு கூறாக்கி, குருடன் கண்ட யானைக்கு, விளக்கம் கூறிய தன்மை போலச் சிலரும், விஷமத்தனமாகவே பலரும் நம்மீது காங்கிரஸ் மந்திரி சபையைக் கவிழ்க்க விரும்புவோர் என்ற குற்றச்சாட்டு முதற்கொண்டு, கடவுளை நிந்திக்கும் கயவர் என்ற பழிச்சொல் வரையில் சுமத்தி, நாம் எந்த மக்களுடைய நலனைக் காக்கப் பாடுபடுகிறோமோ, அவர்களைக் கொண்டே, நம்மை எதிர்க்க வைக்க முடிகிறது.

திராவிடர் கழகத்தின் திட்டம் என்ன?-தெரியாதா பார்ப்பனரைத் திட்டுவது-என்பார் ஒரு திருவாளர்.

திராவிடர்கழகமா- அதற்கென்ன வேலை, காங்கிரசைக் குறை கூறுவது தான் என்பார் கதராடையார்.

திராவிடர்கழகமா-தேவ நிந்தனை செய்யும் கூட்டமல்லவா அது என்பார் வேதமோதி.

குருடர் பலர், யானையைக் கண்டனர்-தடவிப் பார்ப்பதன் மூலம்-ஒரு குருடனுக்கு யானை உரலாக இருந்தது-அவன் காலைத் தொட்டுப் பார்த்தவன். மற்றொருவனுக்கு, யானை முறமாக இருந்தது-அந்தக் கபோதி காதைத் தொட்டுப் பார்த்தவன், இன்னொருவனுக்கு யானை, 'துடைப்பம்' போல் இருந்தது, அவன் வாலைத் தொட்டவன்! இப்படிக் கதை உண்டல்லவா, அதுபோல நமது திட்டத்தின் முழு உருவையும் பொருளையும் தெரிந்து கொள்ளாதவர்கள், தத்தமது பார்வைக்குப்பட்ட பகுதி மட்டுமே நமது திட்டம் என்று கருதிக்கொண்டு, பேசுவர், ஏசுவர். முழுத் திட்டமோ, நான் கூறியபடி, நாட்டுக்குப் புதிய நிலை ஏற்பட வேண்டும் என்ற சிறந்த குறிக்கோள்—அதை விளக்கிக் கூறினால், கேட்கும் யாரும், பிறகு ஆட்சேபிக்க முடியாது, திராவிடர்கழகத்தை ஆதரித்தே தீருவர்—ஆனால் அந்த விளக்கத்தை நாடு கேட்க முடியாதபடியான தடைகளைப் போடுவதை இந்த ஆளவந்தார்கள் தமது போர்முறையாக்கிக் கொண்டனர்-அதிகாரம் இருக்கும் தைரியத்தால். எங்கும் 144! எதற்கெடுத்தாலும் தடை! இராவண காவியத்துக்கும் தடை! கம்பர் விழாவுக்கும் போலீஸ்படை!! போர்வாளுக்குத் தடை! இப்படி, 'வீரரசம்' சொட்டச் சொட்டச் காரியம் நடக்கிறது. சென்ற வாரம், இந்து பத்திரிகையில் ஒருவர் எழுதுகிறார்—நான் எழுதிய கம்பரசம் தடைசெய்யப்பட வேண்டுமாம், உடனே, ஏனெனில், கம்பர் விழா கொண்டாடிய பெருமையும் பூரிப்பும், கம்பரசம் என்ற என் புத்தகத்தைப் பார்த்தால் பாழாகி விடுகிறதாம். மாணவர்களின் மனம் கெடுகிறதாம். கல்லூரியில் மாணவர்கள் கம்பரசத்தை ஆவலோடு படிக்கிறார்களாம்.

எவ்வளவு மகாபண்டிதர்கள், ரசிகமணிகள் இருக்கிறார்கள்-கம்பச் சித்திரங்கள் தீட்டுவோர், அதுபற்றிக் கவிபாடுவோர், இவர்களெல்லாம் என்னசெய்து கொண்டிருந்தார்கள், இந்த மூன்று ஆண்டுகளாக, நான் கம்பரசத்தை வெளியிட்டபோது. ராமபக்தியில் மூழ்கிக் கிடந்தனரோ! ஏன், மறுத்து எழுதவில்லை-முடியாததால்தானே!! இப்போதும் கூட என்ன, நானும் மற்ற என் நண்பர்களும் நாணும்படி, அந்த ஏட்டுக்கு மறுப்பு எழுதிப் பார்க்கட்டுமே-ரோஷமிருந்தால்! நான், கம்பரசம் என்ற ஏட்டில், வெளியிட்டிருக்கும், செய்யுட்கள், கம்பராமாயணத்தில் இல்லை என்று கூற முடியுமா, இவர்களால்-அல்லது, அந்தப் பாடல்களுக்கு நான்கொடுத்துள்ள பொருள் பொருந்தாது என்று வாதாட முடியுமா! ஐயோ! ஏன் இவைகளை எல்லாம் எடுத்தெழுதினாய்-என்று துக்கமும் வெட்கமும்தோன்றக் கேட்க--கேட்கவா? கதற-முடியுமே தவிர, அந்தப் புத்தகத்தைத் தடை செய், என்று கலகமூட்ட முடியுமே தவிர, அந்தப் புத்தகத்திலே வெளி வந்த செய்யுள்கள் தவறானவை-என்கைச் சரக்கு, என்று கூற, எந்தக் கம்பதாசருக்கும் முடியாதே. நான், அந்த ஏட்டிலே வெளியிட்ட செய்யுள்கள் மட்டுமல்லவே, அவை போன்ற பல, மேலும் உண்டே! அவைகளும் வெளிவரத்தானே போகின்றன!! தடை செய்-தடை செய்- எத்தனை ஏடுகளை?-எத்தனை காலத்துக்கு! தடை செய்யப்பட்ட எந்த ஏடாவது எந்தக் காலத்திலாவது பரவாமலிருந்ததுண்டா! பித்தத்தின் பிடியில் இருக்கிறவர்களின் செயலல்லவா இது, தடை போட்டு புத்தறிவு பரவவைத்து விடலாம் என்று எண்ணுவது!!

எங்கள் கழகத்தின் திட்டத்தை, நாட்டு மக்களின் கருத்திலே பதிய வைக்கக் கூடாது, என்ற எண்ணத்துடன், காங்கிரஸ் மந்திரிகள் செய்கிற காரியம், கடைசிவரை வெற்றி தருவனவல்ல. இரணியனைத் தடுத்தனர் -என்ன கண்டனர்? வேலூர் சிறையிலே, இரணியன்,

பிரகலாதன், சகலரும்; நரசிம்ம சாமியையும் சேர்த்து!! ஆடி அவர்கள் அகப்பட்டுக் கொண்டார்களே, நமக்கு ஏன் வீண் தொல்லை, என்று மற்றவர்கள் இருந்து விட்டனரோ? கடலூரில் இரணியன், தோன்றலானை— பிடி, தள்ளு சிறையில் என்றனர்— சிறை சென்ற தோழர்கள் மீது எந்தச் செக்ஷன் போடுவது என்ற சிந்தனை குடைந்து, முடிவு தெரியாததால், விடு போ, என்று விட்டு விட்டனர்! இன்னும் எத்தனை ஊர்களில் இரணியன் நாடகம் நடைபெறுமோ, யார் கண்டார்கள்!!

திராவிடர் கழகத்தினால், அடுத்த தேர்தலின்போது, தங்கள் கட்சிக்கு ஆபத்து நேரிடும் என்ற அச்சத்தால் இப்போது இருக்கும் அதிகார பலத்தைத் துணைகொண்டு, திராவிடர் கழகத்தைத் தாக்கித் தகர்த்துவிட வேண்டும் என்பதே காங்கிரசின் திட்டம் என்று தெரிகிறது. இது நிச்சயமாக வெற்றி பெறப்போவதில்லை. திராவிடர் கழகம், நாட்டுக்குப் புதிய நிலை வேண்டும் என்பதாக, சகல முனைகளிலும், உரிமைப் போரை நடத்தவே திட்டமிட்டிருக்கிறது—தேர்தல்களை மட்டுமே கருத்தாகக் கொண்டல்ல, இந்தக் காரியங்கள் நடைபெறுவது. தேர்தல்களைப் பற்றிக் கவலையில்லை என்று சேலம் மாநாட்டிலே கூறினோம்—தேர்தல் தொடர்பு இல்லை—எனினும், இந்த மாபெரும் கூட்டம் இங்கு வந்திருக்கிறது—ஏன்—இதற்கு என்ன பொருள்—எப்படி இந்த அளவு ஆதரவு திரட்டமுடிகிறது, பணபலம், பலாகட பிரசார பலம் அற்ற திராவிட கழகத்தால், என்பதைக் காங்கிரசார் யோசித்துப் பார்க்கவேண்டும்.

அறப்போர் வீரர்களே! அரசியல் இலாப வேட்டைக்காரர்களின் எண்ணம் எப்படியோ இருக்கட்டும்—நாம், நாட்டுவிடுதலைக்காகப் பணிபுரிவோம். நமது மொழியும் கலையும் பாழாக்கப்படுவதற்கு, அதன் பலனாக நமது வாழ்க்கை வழிகெட்டு, நாம் வடநாட்டின் அடிமையாவதற்கும், செய்யப்படும் சூழ்ச்சித் திட்டந்தான், இந்த கட்டாய இந்தி—இதை நாம் எதிர்த்து, அறப்போர் தொடுத்திருக்கிறோம்—இடையே சிலகாலம் இதை நிறுத்தி வைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது—இப்போது நிலைமையிலே தெளிவும் நம்பிக்கையும் உண்டாகிவிட்டது, எனவே மீண்டும் அறப்போரைத் துவக்கியாக வேண்டும்—துவக்கத் தீர்மானித்துவிடுவதற்கே இங்கு பல ஆயிரம் இளைஞர்கள் கூடியுள்ளனர். இந்த ஆயிரமாயிரம் ஆர்வமிக்க அறப்போர் வீரர்களின் சார்பிலே, நான், ஆளவந்தார்களுக்கு, அறிவிக்கிறேன், அறப்போர் ஆரம்பமாகிறது மீண்டும், நவம்பர் திங்கள் துவக்கத்திலிருந்து! இதை, அறிக்கை மூலமோ, கமிட்டித் தீர்மான மூலமோ தெரிவிப்பதைவிட, அறப்போர் வீரர்களின் அணிவகுப்பைக் கூட்டிக் காட்டி ஆளவந்தார்களுக்குத் தெரிவிப்பதே சரியான முறை என்று எண்ணியே, இந்தத் தனிமாநாடு கூட்டப்பட்டது—இதன் சார்பிலே நான் அறிவிக்கிறேன் ஆளவந்தார்களுக்கு, அறப்போர் மீண்டும் ஆரம்பமாகிறது, என்று. மாநாட்டிலே, இன்றும் நாளையும் பல நண்பர்கள் பேச இருக்கிறார்கள்—தலைவரின் சொற்பொழிவும், திரு. வி. க. வின் சொற்பொழிவும் உள்ளன—அவைகளின் மூலம், நாட்டுக்குப் புதியநிலை என்ற நமது திட்டத்தைப் பற்றிய விரிவான விளக்கங்களைப் பெறப் போகிறீர்கள்—பலபிரச்னைகள் கவனிக்கப்படும்—ஆனால் முதன்மையானது, முக்கியமானது, அறப்போர் துவக்கத்தைப் பற்றியதாகும். அதனை நாம் அறிவித்துவிடுவோம் ஆளவந்தார்களுக்கு, அறிவுடன்காரியம் நடத்தவோ, அல்லது அடக்குமுறையைத் திரட்டவோ, சர்க்காருக்கு, அவகாசம் தருகிறோம், ஒரு வாரகாலம்! பிறகு, அறப்போர்—அதைக் கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

குறிப்பு.

மாநாட்டின் முதல்நாள் மாலை மழை காரணமாக, தலைமை உரையின், சுருக்கம் மட்டுமே, பேச நேரிட்டது: விரிவான முறையில், இங்கு, தலைமை உரை வெளியிடப்பட்டிருக்கிறது.

ஜெமீன் ஒழிப்பு

“நாங்கள் வெறும் வரிவசூலிப்போர் என்று சொல்லுவது தவறு. நாட்டின் தலைவர்கள் நாங்கள் — அதனாலேயே ஜெமீன்தாரர்களாக்கப்பட்டோம். நாங்கள் ஜெமீன் நிலங்களுக்கு உரிமையாளர்கள் என்பதை மறக்கக்கூடாது”—என்று குமாரமங்கலம் ஜெமீன்தார் டாக்டர் சுப்பராயன் கூறினார்.

மீர்ஜாபுரம் ஜெமீன்தார், “ஜெமீன் ஒழிப்புச் சட்டம் செய்துவிடுகிறீர்கள்; ஆனால் இதனால் என்னென்ன நேரிடப் போகின்றன என்பதை எண்ணிப்பார்க்கவில்லை அவசரத்தில்; பலவிதமான வழக்குகள் ஏற்படப் போகின்றன” என்று மிரட்டினார்.

“சீமையிலிருக்கும் ஒரு பிரபல வக்கீலைக் கேட்டேன், ஜெமீன்தாரர்களின் உரிமையைப்பறிப்பது சட்டவிரோதம் என்று அவர் கூறியிருக்கிறார். எச்சரிக்கை செய்கிறேன், எங்கள்மீது பாயவேண்டாம். கோர்ட்டுக்குப் போவோம்” என்று வெங்கிடகிரிராஜா வீராவேசமாடினார், மற்றும் சிலர், இந்தத்திட்டத்தால் மாபாதகம் சம்பவிக்கும் என்றனர்.

இவ்வளவு மிரட்டல்களுக்கிடையே, சென்னை சட்டசபையில், ஜெமீன்ஒழிப்பு மசோதா, சட்டமாக்கப் பட்டிருக்கிறது.

இந்தமசோதாவிலே, பாதி உயிரை மடிசஞ்சிகள், டில்லி தேவதைகளைப் பூஜித்துப் பெற்ற வரத்தால், போக்கிவிட்டனர், இனாம்களைக் காப்பாற்றிக் கொண்டனர்—இப்போதைக்கு! ஜெமீன்தாரர்கள், மடிசஞ்சிகளின் மகத்தான வெற்றியைக்கண்டு, ஏன் தாங்கள் மட்டும் ‘சோடை’ களாகவேண்டும் என்று எண்ணி, சூரத்தனத்தைக் காட்டிப்பார்த்தனர்—ஆனால் காளா வெங்கடராவ், டில்லி தாக்குதலால் களைப்புற்று இருந்த போதிலும், தீரமாகப்போராடி, மசோதாவைச்சட்டமாக்கிவிட்டார். நமது நன்றி கலந்த பாராட்டுதல் அமைச்சருக்கு.

டில்லியின் அவசியமற்ற, தலையீடு ஜனநாயக முறையையே கேலிக்கூத்தாக்கி விட்டது. பரிதாபத்துக்குரிய அமைச்சர் டில்லி தபாலைப் பார்த்துப் பார்த்து, அடிக்கொருதிருத்தம், அங்குலத்துக்கு ஒரு மாற்றம், செய்தவண்ணம் இருக்க நேரிட்டகாரணத்தால், மசோதாவின் உருவம், அவலட்சணமானதாகி விட்டது.

எதிர்பார்த்ததற்கு மேலாகவே, ஜெமீன்தாரர்களுக்கு அதிகமான அளவு நஷ்டஈடுதரவேண்டிய நிலைஏற்பட்டிருக்கிறது. இப்போது கிடைத்துள்ள புள்ளி விவரத்தின்படி, 12½-கோடி ரூபாய் நஷ்டஈடுதரவேண்டி வருமெனத் தெரிகிறது.

மேலிடத்தாரிடம் இனிக் காவடி எடுத்து, சட்டத்தை அமுல்நடத்துவதைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி உத்தரவிடச் சொல்ல முனைவார்கள், ஜெமீன்தாரர்கள்.

இப்போதே இதற்கான மனுக்களை, மயிலை வக்கீல்கள் தயாரித்துக்கொண்டிருக்கக்கூடும்.

(3-ம் பக்கம் பார்க்க)

இதற்காகவா போராட்டம்

20-ம் பக்கத் தொடர்ச்சி

கெட்ட எண்ணம், அதனாலேதான், இந்தச் சொற்ப வித்யாசத்துக்காக என்னை இப்படிச் செய்தீர்—என்று கூறுவது!

இந்தியை நுழைப்பது இந்திக்காக மட்டுமானால், நாலாம் பாரத்திலே நுழைத்தால் என்ன! ஏன் சிறுபிள்ளைப் பருவத்திலேயே—விளக்கம் அறியாத குழந்தைகளாகப் பார்த்துப் புகுத்தவேண்டும்?

இந்தி, இந்திக்காக அல்ல! இந்தி, வடநாட்டுக்கு இந்நாட்டை அடிமைப்படுத்த. ஆகவேதான், இந்தி பாடதிட்டத்திலே சொற்பவித்யாசமுள்ள மாற்றமும் செய்ய உமக்கு மனம் இல்லை-இந்தச் சூட்சமத்தைத் தெரிந்ததால்தான், இந்தச் சொற்ப வித்யாசத்துக்கு, போராட்டம் நடத்தவேண்டி நேரிடுகிறது எங்களுக்கு! நாங்கள் இப்போராட்டத்தினால் பாதிக்கப்படுபவர்கள்—எங்களை நீர், கேலியும் செய்கிறீர், இதற்கா போராட்டம் என்று பேசி-எங்கள் போராட்டத்திற்கு, உட்காரணமும் கற்பிக்கிறீர்—

சொற்ப வித்யாசம் என்பது உண்மையானால், பிடிவாதத்தை விட்டுவிடச் சொல்லும் ஆளவந்தார்களை, போராட்டம் தானாக நின்று விடுகிறது. செய்து பாருமே! இல்லையானால், உண்மையையாவது பேசும், வடநாட்டுக்குத் தென்னாட்டை அடிமைப்படுத்துவதே எமது வேலை, அதற்காகவே நாங்கள் ஆளவந்தோம் என்று கூறும். ஏன், மாய வேடம் புனைகிறீர், புராணம் பேசுகிறீர்! இந்தி ஏன்? அதிலே இவ்வளவு பிடிவாதம் காட்டக் காரணம் என்ன? சொற்ப வித்யாசந்தான், போராடும் தலைவருக்கும், அடக்குமுறை வீசும் சர்க்காருக்கும் இடையே என்று கூறுவது, நாணயமான பேச்சாக இருக்குமானால், ஏன், சொற்ப வித்யாசத்தைப் போக்க முன்வரக்கூடாது!

சொற்ப வித்யாசம்—சரி—நீக்கிவிடும் என்று சொன்னால், கெட்ட எண்ணக்காரர்கள் நாங்கள் என்று கூறுகிறீர். தமிழ்ப்புலவர்கள் சொன்னால், அவர்கள் வயிற்றுச் சோற்றுக்காகத் தமிழைப் படித்தவர்கள், அவர்களுக்கு என்ன தெரியும் என்று அமைச்சர் அவினாசியார் கூறுகிறார்!—(அவருக்கு வயிறும் இருக்கிறது, சோறும் தேவைப்படுகிறது, சொந்தத்தில் சோறு கிடைக்கச் செல்வமும் இருக்கிறது — மந்திரி வேலைக்குச் சம்பளம்மட்டும் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறார்.) தமிழரசுக் கழகத்தார் கூறினால், ம.பொ.சி, ஈரோடு போய்வந்தார்—என்று கூறுகிறீர்! காங்கிரசிலே பற்றுக்கொண்ட பலர் கூட, இந்தி கட்டாய பாடம் வேண்டாம் என்று கூறுகிறார்கள் — பல இதழ்கள், இந்தி திட்டத்தைக் கண்டிக்கின்றன! அவைகளையோ, அடங்காப் பிடாரிகள் என்று கூறி விடுகிறீர். இப்படி இந்தித் திட்டத்திலே, மாற்றம் வேண்டும் என்று கேட்கும் ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஓர் பழியைச் சுமத்திவிட்டு, தப்பித்துக் கொள்கிறீர்! சொற்ப வித்யாசத்துக்காகப் போராடும் எங்களை மறந்துவிடும், "போராடாத" வேறு பலர், கூறினதற்கு, மதிப்பு அளித்தீர்களா? அளித்திருந்தால், போராட்டம் துவக்கியிருக்க முடியுமா? வித்யாசமும் சொற்பம், இந்தித் திட்டத்தை மாற்றும்படி கேட்டுக்கொள்பவர்களும், பலர்,பல வகையினர்; திராவிட கழகத்தார் மட்டுமல்ல! சொற்ப வித்யாசந்தானே, சர்க்காரின் திட்டத்துக்கும் நாம் கூறும் மாற்றத்துக்கும் இருக்கிறது, மக்களை மதிக்கும் பொறுப்புள்ள இந்த ஜனநாயக சர்க்கார், நமது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் என்றுதான், அவர்களெல்லாம் நம்பினர். திராவிட கழகம் அறியும் இந்தி இந்திக்காக அல்ல, என்ற சூட்சமத்தை. எனவேதான் அறப்போர் தொடுத்திருக்கிறது.

* * *

குற்றம் புரிந்தவனைக் கூண்டிலே நிறுத்திக் கேள்விகளைப் பூட்டினார் வழக்கு மன்றத் தலைவர். அவன் அசகாய சூரன்—ஒவ்வொரு கேள்விக்கும் ஒவ்வொரு ரகமான பதிலளித்தான்.

பக்கத்து வீட்டுக்காரர் கூறுகிறாரே, பாண்டுரங்கம் ஒரு பக்காத் திருடனென்று — என்ன சொல்லுகிறாய், அதற்கு—?

பொறாமை காரணமாக அப்படிச் சொல்லுகிறார் பக்கத்து வீட்டுக்காரர்.

எதிர் வீட்டுக்காரரும் அதே போலக் கூறுகிறாரே?

அவர், பக்கதது வீட்டுக்காரருக்குப் பந்து, அதனால் அப்படிக் கூறுகிறார்.

உன் அண்ணன் கூடத்தான் அயோக்யன் நீ, என்றுகூறுகிறான்?

பாகப் பிரிவினைத் தகராறின் காரணமாக அந்தப் பழி சுமத்துகிறான், என் அண்ணன்.

பரந்தாமன் உன்னைப்பற்றிச் சொல்வது?

பங்காளிக் காச்சலின் விளைவு.

உன் மனைவியே, ஒருநாள் அழுதுகொண்டே சொன்னாளாமே, தன் தங்கையிடம்?

அவள், பதிபக்தியற்ற பஜாரி!

பழய ரிகார்டு, இருக்கிறதே, முன்பொரு முறை நீ, களவாடியவன் என்று காட்ட!

முன்பிருந்த அதிகாரி, தவறாக நடந்துகொண்டார், என்பதற்கு, அந்த ரிகார்டே, சாட்சி!

* * *

இப்படி எங்கும் நடைபெறவில்லை. ஆனால், இந்தி விஷயமாக, நீங்கள் பேசுவதும் பதிலளிப்பதும், இது போலிருக்கிறது.

யோசித்துப் பார்க்கவேண்டும்—இந்தி கூடாது என்பதை மொழி நிபுணர்கள், தமிழ்ப் புலவர்கள் கல்வித்துறை வல்லுநர்கள், காங்கிரசுக்குத் தோழமைக்கட்சியினர், காங்கிரஸ் கட்சியினரிலேயே சில பலர், எடுத்துக் கூறினர்—போராடவுமில்லை—மனுச் செய்து பார்த்தனர். ஒவ்வொருவர் சொல்லுக்கும், ஒரு காரணம் கட்டிக் காட்டினீர்கள்—ஏதேனும் ஒரு பழியும் சுமத்தத் துணிந்தீர்கள். எல்லோருடைய, வேண்டுகோளையும் நிராகரித்தீர்கள். எந்த எச்சரிக்கையையும் துச்சமென்று கூறிவிட்டீர்கள். திராவிட கழகத்தாராகிய நாங்கள் யோசிக்கலானோம், இந்தி ஒரு சாதாரண மொழித் திட்டம் என்ற அளவிலே ஆளவந்தார்கள் கருதினால், இவ்வளவு பேருடைய எதிர்ப்பையும் கண்டு, சொற்ப வித்யாசமும் செய்ய முடியாது என்று பிடிவாதம் காட்டுவரா—இதில் ஏதோ சூட்சமம் இருக்கவேண்டும், என்று யோசிக்கலானோம், அதன் பயனாகத் தெரிந்தது, இந்தித் திட்டம், மொழித் திட்டமல்ல, நாட்டை அடிமைப் படுத்தும் சூழ்ச்சித்திட்டம் என்பது. எனவேதான் அறப்போர் தொடுத்தோம்!

★ பட்டாபி ★

வெற்றி

—❁—

பட்டாபி சீதாராமய்யா, வெற்றி பெற்றுவிட்டார்.

பாபு சுபாஷ் சந்திரபோசுடன் போட்டியிட்டு முன்பு தோற்றார், இப்போது, பாபு புருஷோத்தமதாஸ் தாண்டனுடன் போட்டியிட்டு வெற்றி அடைந்தார்.

தாண்டன்—பட்டாபி, போட்டி, பலமாகவே இருந்தது—பல பிரச்னைகளை உள்ளடக்கியதாகவும் இருந்தது.

மூன்று காரணங்கள் பட்டாபியின் வெற்றிக்கு.

1. தென் இந்தியர் ஒருவர் எப்படியாவது, காங்கிரஸ் தலைவராக வரவேண்டும், என்ற எழுச்சியும், அதன் காரணமாக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியும்.

2. சமஸ்தானக் காங்கிரசிலே பட்டாபிக்கு, தாண்டனைவிட அதிகமான தொடர்பு இருந்ததால், சமஸ்தானத் தலைவர்களின் ஆதரவு பட்டாபிக்குக் கிடைத்தது.

3. தாண்டன், பதவியிலுள்ள காங்கிரல் காரர்களின் ஊழல்களை அம்பலப்படுத்திப் பேசிவிட்டார்—அதனால் ஏற்பட்ட அருவருப்பும் அச்சமும், பதவியிலுள்ள காங்கிரசார், பட்டாபியைப் பீடத்தில் அமர்த்திக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் கொண்டனர். வெறும் தாண்டனே, கண்ணீர் பொழிந்த வண்ணம் கண்டித்தாரே, அவர் காங்கிரஸ் தலைவருமாகிவிட்டால், என்ன செய்வாரோ, என்ற பயம், அவர்களைப் பட்டாபியிடம் பரிவு காட்டச் செய்தது.

தென்னாட்டவர், என்பது இயற்கையான, பலம் பொருந்திய ஓர் உணர்ச்சி, என்பதற்கும் பட்டாபி தேர்தல் ஓர் சிறந்த எடுத்துக் காட்டு.

ஆனால், இவ்வளவு இருந்தாலும், சமஸ்தானக் காங்கிரசின் தொடர்பு பட்டாபிக்குப் பலமாக இருந்திருக்கவில்லையானால், அவருக்கு வெற்றி கிடைத்திருக்காது. ஓட்டு விவரத்தை ஆராய்ந்து பார்த்தால், இது நன்கு விளங்கும். உதாரணமாக, கிழக்கு பஞ்சாப் சமஸ்தானங்களில், பட்டாபிக்கு 27 ஓட்டுக்கள் கிடைத்தன; தாண்டனுக்கு ஒரே ஓட்டுதான்! சமஸ்தானங்களிலே உள்ள தலைவர்களுக்கு பட்டாபியிடம் தொடர்பு அதிகம்—தாண்டன், அவ்வளவாகத் தெரியாது.

சமஸ்தானங்களிலே, இவ்விதமான செல்வாக்கு பட்டாபிக்கு இல்லையானால், நிலைமை வேறாகி இருக்கும்.

வங்காளம், 181 ஓட்டுக்களைத் தாண்டனுக்கு அளித்தது—பட்டாபிக்கு 72 ஓட்டுக்களே கிடைத்தன! இங்கு மொத்தம் 255 ஓட்டுக்கள். இருவர் மட்டுமே, யாருக்கும் ஓட் தரவில்லை.

பட்டாபியின், வெற்றி மூலம், மற்றோர் உண்மை புலனாகிறது.

இந்தியர்—என்ற ஓர் உணர்ச்சி உண்மையானது, உருவானது என்று பேசப்படுகிறதே, அதுபொய் என்பதை பட்டாபியின் வெற்றி காட்டுகிறது. எப்படி எனில், பட்டாபிக்கு ஆதரவு தரவேண்டுமென்று அறிக்கைகள் விட்ட நமது மந்திரிமார்கள், தாண்டனும்—பட்டாபியும், தாங்களும் ஒரே இந்திய இனம் என்று மனதார நம்பியிருந்தால், பட்டாபி, தாண்டனைவிட, அறிவாற்றலில், அனுபவத்தில் சிறந்தவர், ஆகவே அவருக்கு ஓட் அளியுங்கள் என்று மட்டுந்தானே கூற வேண்டும்! ஆனால் அமைச்சர்கள் கூறினது அதுவல்ல — பட்டாபி, தென்னாட்டவர் — தென்னாட்டவர் காங்கிரசின் தலைவராக, நெடுங்காலமாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை, எனவே, பட்டாபிக்கு ஓட் கொடுத்து இந்த மனக்குறையைப் போக்கிக் கொள்ள வேண்டாமா, என்று பேசினர்.

ஏன், இந்திய இனம், எனும் உணர்ச்சி, தென்னாட்டவர், என்ற உணர்ச்சிக்கு இடம் அளித்தது?

இந்திய இனம் என்ற உணர்ச்சி போலியானது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

ஆந்திரர்—தமிழர், என்ற பேதப் பேச்சு, தென்னாட்டவர்—வடநாட்டவர், என்ற பிரச்னையின்போது, இருக்குமிடம் தெரியாது மறைகிறது. இது முக்கியமானது மட்டுமல்ல, மகிழ்ச்சி தருவதுமாகும். ஆந்திர, தமிழக, கேரளப், பகுதிகள் அனைத்தும், தென்னாட்டவர் என்ற காரணத்துக்காக, பட்டாபியின் பக்கம் ஆதரவு காட்டின.

இனி, இந்த வெற்றியின் காரணமாகச் சில புதியபிரச்னைகள் கிளம்ப இருக்கின்றன.

பட்டாபி, ஆந்திரம், தனிமாகாணமாக வேண்டுமென்பதிலே தளராத நம்பிக்கை கொண்டவர். ஆந்திரர் தனி மாகாணக் கோரிக்கை விஷயத்திலே, மிக மிக பரபரப்பு அடைந்துள்ளனர்.

பண்டித ஜவஹர் உள்ளிட்ட பல தலைவர்கள், மொழிவழி மாகாணங்கள் அமைப்பதை, இப்போது தேவையற்ற காரியம் என்று கூறுகிறார்கள்.

காங்கிரசுக்குத் தலைவராக ஒரு ஆந்திரர் வந்தபிறகும், ஆந்திரத்தைத் தனி மாகாணமாக்காமல் இருக்கலாமா? என்ற எண்ணம் ஏற்படும்—பட்டாபியை ஆந்திரர், தனி மாகாண அமைப்புக்காவன செய்யும்படி வற்புறுத்தப் போகிறார்கள்.

படேல், பாஷாவாரி அமைப்பு, இந்திய யூனியன் அமைப்புச் சக்தியைச் சிதைக்கக்கூடியது, பலசிக்கல்கள் நிறைந்தது, மாகாணத்துக்குள்ளாகவும், மாகாணத்துக்கு மாகாணமும் மனமாச்சரியங்களை மூட்டக் கூடியது என்று எண்ணுபவர்.

பட்டாபி மொழிவாரி மாகாண அமைப்புக்காக வேலை செய்யத் தொடங்கினால் படேலுடன் மோதிக் கொண்டாகவேண்டும்! இரும்பு மனிதரல்லவா, படேல்!! படேல்—பட்டாபி மோதுதலின் விளைவு, என்னவோ, யார் கண்டார்கள்!

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.